விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து


RAMCO

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 28 புதன்கிழமை (13.07.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 206

## ரணில்-பான் கீ மூன் சந்திப்பு ஏன்? விளக்குகிறது ஐக்கிய தேசியக் கட்சி



(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கும் இடையே அண்மையில் இடம்பெற்ற சந்திப்பானது சம்பிரதாய பூர்வமானது என அக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய (20ஆம் பக்கம் பார்க்க)



## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கு பாதுகாப்பு

### தேர்தல்கள் ஆணையாளர் உறுதியளிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப் பிரிய, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் உறுதியளித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் படைத்தரப்பினராலும் ஆயுதக் குழுக்களினாலும் (20ஆம் பக்கம் பார்க்க)

# வெளிநாட்டு தமிழ் அமைப்புகள் மீது போர்க்குற்ற விசாரணை அவசியம்

## லியம் பொக்ஸுக்கு கொழும்பு ஆலோசனை

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் கொழும்புக்கு எதிராக சர்வதேச விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்தும் வெளிநாட்டு தமிழ் அமைப்புக்களை நெருக்கடிகளுக்கு உள்ளாக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

(19ஆம் பக்கம் பார்க்க)

## அமைதியாக நடைபெற்ற தபால் மூல வாக்களிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்ற தேர்தல் தபால் மூல வாக்களிப்பு 80 வீதத்தை தாண்டுவதாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவிக்கின்றனர். அனுராதபுரம், கேகாலை உட்பட சில இடங்களில் வாக்குப்பதிவில் தாமதம் நிலவியதாகவும் எனினும் ஒட்டுமொத்த தபால் மூலவாக்கெடுப்பு நடவடிக்கைகள் அமைதியான முறையில் இடம்பெற்றதாகவும் பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவிக்கிறார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா மற்றும் அவரது தனிப்பட்ட செயலாளர் சேனக டி சில்வாவுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கினை எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ம் திகதி வரை ஒத்திவைக்க கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று தீர்மானித்துள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் போது இராணுவத்திலிருந்து தப்பிச்சென்றவர்களை பணிக்கமர்த்திய குற்றச்சாட்டின் பெயரிலேயே சரத் பொன்சேகாவிற்கு (20ஆம் பக்கம் பார்க்க)

## 'இலங்கையின் கொலைக்களம்' கருத்துக் கூற இந்தியா மறுப்பு

(கொழும்பு)

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மோசமான போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பாக எவ்வித கருத்துக்களையும் வெளியிடுவதை இந்திய அரசாங்கம் தவிர்த்து வருகின்றது என இந்தியா ருடே இதழ் செய்திவெளியிட்டுள்ளது, இலங்கையின் கொலைக்களம் எனும் ஆவணப்படம் குறித்து எவ்வித கருத்தையும் தெரிவிக்கப் போவதில்லை என இந்தியா வெளிவிவகார செயலாளர் நிருபமா ராவ் தெரிவித்ததாக இவ்வூடகம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து இச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,


(20ஆம் பக்கம் பார்க்க)

SHIVA FISHING CENTER
புதுக்கடை திறப்பு விழா
வடமராட்சி மீனவர்களுக்கு ஓர் நற்செய்தி
பருத்தித்துறையில் புதியதோர் உதயம் இன்று
8 மணி தொடக்கம் 12 மணிவரையுள்ள சுப முகூர்த்த வேளையில் ஆரம்பிக்கப்படவுள்ளது.
இவ்விழாவிற்கு வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம். எம்மிடம் மீன்படி உபகரணங்கள், வெளிக்கள இணைப்பு இயந்திர உதிரிப்பாகங்கள் மிகக் குறைந்து விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
இங்ஙனம்
உரிமையாளர், ஊழியர்கள்
(5348)

இடமாற்றம்
நாராயணா கட்டடப்பொருட்கள் வர்த்தகர்
Narayana Hardwares Trader
இதுவரை இல.87, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கி வந்த எமது மேற்படி வர்த்தக நிறுவனம் 14.07.2011 முதல் இல.115, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு மாற்றப்படவுள்ளது என்பதனை எமது வாடிக்கையாளர்கட்கு அறியத் தருகின்றோம்.
நிர்வாகம்.
(A-3713)

# இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு திடீர் விஜயம்

## சமாதான நல்லிணக்கக் குழுவுடன் பேச்சு



இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் அடங்கிய குழுவினர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு திடீர் விஜயத்தை மேற்கொண்டனர்

இந்த விஜயத்தின் போது சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான குழுவை யாழ். ஆயர் இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தக் குழுவில்பிரதி உயர்ஸ்தானிகர்எம்.மிர்சா, அரசியல் தூதரக அதிகாரி என்.பிறேம மற்றும் இவர்களுடன் இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் ஆகியோரும் வருகை தந்தனர்.

இந்தக் கலந்துரையாடலின் ஆரம்பத்தில் சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான குழுவினரால் இந்திய அரசினால் வட மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி திட்டங்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து உரையாற்றிய பிரதி உயர்ஸ்தானிகர் மிர்சா இந்தியா, வட பகுதியில் பல மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

அது மட்டுமன்றி மதவாச்சியிலிருந்து தலைமன்னார் வரையிலும் ஓமந்தையிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலும் புகையிரதப்பாதைகள் அமைக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளது.

மேலும் காங்கேசன்துறை துறைமுகத்தில்கடலில் மூழ்கியுள்ள கப்பல்களை அகற்றி அதனை ஆழமாக்கும் பணியிலும் இந்தியா ஈடுபட்டு வருகின்றது.

பலாலி விமானத் தளத்தை சர்வதேச ரீதியில் அமைப்பதற்கும் திட்டமிட்டுள்ளதோடு புனரமைப்பு பணிகளையும் மேற்கொண்டு வருகின்றது.

இதன் மூலம் உலக நாடுகளிலிருந்தும் யாழ்ப்பாணத்திற்கு மக்கள் வந்து செல்லக்கூடியசூழ்நிலை ஏற்படுத்தப்படும்.

இது தவிர யாழ்ப்பாணத்தில் இந்திய நிதியுதவியகம், கலாசார மண்டபம் ஒன்றும் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அத்தோடு யாழ்.பல்கலைக் கழகத்தில் விவசாய பீடம் பொறியியல் பீடம் அமைப்பதற்கும் இணக்கப்பாடு கிடைத்துள்ளது.

இதற்கான ஆய்வுகள் தற்போது இடம் பெற்று வருகின்றன. மக்களுக்கான வாழ்வாதார உதவிகளும் எம்மால் வழங்கப்பட்டுள்ளது என்றார்.

இந்தசந்திப்பில் சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான குழுவில் யாழ் .ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் நல்லை ஆதீன குருமுதல்வர். பிரம்மசிறி சோமசுந்தர பரமாச்சாரியார், யாழ் பல்கலைக்கழக முன்னால் துணைவேந்தரும்வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம் பிள்ளை, குழுவின் செயலாளர் பரமானந்தன், யாழ்வணிகர்கழகத்தலைவர் ஆர்.ஜெயசேகரன், செயலாளர் என் ஜெயக்குமரன், யாழ்.வேம்படி மகளிர்உயர்தரப்பாடசாலையின் அதிபர் திருமதி பொன்னம்பலம், யாழ் வர்த்த சந்தையின் தலைவர் எம்.பூரணச் சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். இதேவேளை இந்த குழுவினர் யாழ் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரையும்சந்தித்து கலந்துரையாடினர்.


## பதவி வெற்றிடம்

மைக்றோ பிசி சிஸ்ரம்ஸ் யாழ்ப்பாணக் கிளை நிறுவனத்திற்கு கணக்கு உதவியாளர் தேவை.

கணனியில் கணக்குகள் செய்வதற்குத் திறமையுள்ள ஆண்/பெண் இருபாலாரிடம் இருந்தும் விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. 16.07.2011 சனிக்கிழமை காலை 8.30-10.30 மணிக்கிடையில் சுயவிபரம், தகைமைச் சான்றிதழ் ஆகியவற்றுடன் நேரில் சமுகம் தரவும்.

218, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5893

(கி-3720)



## வேலையாட்கள் தேவை

- அச்சக வேலை பயிலுநர் (ஆண்கள்)
- கணனி வடிவமைப்பாளர்(ஆண்/பெண்)

Note:♦யாழ்.மாநகர சபைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

உடன் தொடர்பு கொள்ளவும் 0212224937

(கி-3718)



## பருத்தித்துறை நகர சபைத் தேர்தல்- 2011



### இலங்கைத் தமிழரசுக் கட்சி

(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

பருத்திமாநகரை மீண்டும் புதுப்பொலிவுடன் கட்டி எழும்ப உங்கள் வாக்குகளை வீட்டு சின்னத்திற்கும் சிறந்த சமூகசேவையாளனை உறுதிப்படுத்த 10 இலக்கத்திற்கும் புள்ளடி இட்டு வாக்களியுங்கள்.

அதிகப்படியான வாக்குகளால் இவரது வெற்றியை உறுதிப்படுத்தவும்.

### இலங்கைத் தமிழரசுக் கட்சி

சிதம்பரப்பிள்ளை பத்மநாதன் (J.P)
(சமூக சேவையாளர்)

X 10

(C 2353)


## மூன்று பேருந்துகள் மோதி விபத்து காயங்கள் எதுவுமின்றி பயணிகள் தப்பினர்

ஏ-9 வீதியில் கொக்காவில் ஒலி பரப்பு கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக நேற்று மாலை மூன்று பேருந்துகள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின. இதில் பயணிகள் காயங்கள்எதுவுமின்றிதப்பிக்கொண்டனர்.

கண்டியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தும் யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கி சென்று கொண்டிருந்த தனியார் பேருந்தும் அருகருகே பயணிகளை இறக்கி ஏற்றிய வண்ணமாக இருந்தது. அதேவேளை முல்லைத்தீவிலிருந்து பருத்தித்துறை நோக்கி வந்து கொண்டிருந்த தனியார் பேருந்து ஒன்று வேகக்கட்டுப்பாட்டையிழந்த நிலையில் இரண்டு வாகனத்திற்கும் நடுவே குறுக்கிட்டு மோதியது.

இதனால் ஏ9 பிரதான வீதியில் சில மணி நேரம் போக்குவரத்து தடைப்பட்டது. பின்பு இராணுவத்தினரின் ஒத்துழைப்பு காரணமாக வீதி போக்குவரத்து இடம்பெற்றது.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து சம்பவ இடத்திற்கு கிளிநொச்சி, மாங்குளம் பொலிஸார் விரைந்து சென்று பார்வையிட்டனர்.

இச்சம்பவத்தில் 3 பேருந்துகளும் பலத்த சேதங்களுக்குஉள்ளாகியதுடன் பிரயாணிகள்எவரும் பாதிப்புக்குள்ளாகவில்லைஎன்பதும் குறிப்பிடத்தக்கது. (2-15)

## சாரதிகளுக்கான கலந்துரையாடல்

வட பிராந்திய போக்குவரத்து சபையின்சாரதியபயிற்சிப்பாடசாலையில் சாரதியப்பயிற்சி பெற்று இது வரையும் தொழில் வாய்ப்பு இன்றி இருக்கும் பேருந்து செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்கள் எதிர் வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர். தங்களது கல்வி,தொழில் தகைமைசான்றிதழ்களுடன். சாரதியப் பயிற்சிப் பாடசாலை இ.போ.ச (வ) , கோண்டாவிலுக்கு சமுகமளித்து தங்கள் தொழில் வாய்ப்பு வழங்கல் சம்பந்தமாக கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு பிரதான பிராந்திய முகாமையாளர் கே. கேதீசன் அறிவித்துள்ளார் (ச)


## வேலையாட்கள் தேவை


நாளை மறுதினம் புதிதாக திறக்கவுள்ள ஹரிகரன் சுப்பர் குறோசரி (பல்பொருள் விற்பனை நிலையம்)க்கு படித்த, ஆர்வமுள்ள ஆண்/பெண் வேலையாட்கள் உடன் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: ஹரிகரன் சுப்பர் குறோசரி
141 B, தபால் பெட்டிச் சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி.
T.P.: 0771988107

(5357)


## மரண அறிவித்தல்

### துரைசிங்கம் அம்பிகைபாலன்



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட துரைசிங்கம் அம்பிகைபாலன் 10.07.2011 ஞாயிற்றுக்கிழமை பிரான்சில் காலமானார்.

அன்னார் ஓய்வுபெற்ற ஆசிரியர் செ.துரைசிங்கம்J.P, காலஞ்சென்ற சற்குணமணி தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும், சுகந்தன் (சுவிஸ்), சுகந்தி, ஜெககாந்தி (ஜேர்மன்), யாழினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சோதிநாதன் (மயூரி இரும்பக உரிமையாளர்), மனோகரன் (ஜேர்மன்), யசோதரன் (இரும்புத் தொழிலகம் திருநெல்வேலி), பெயாத்திரிஸ் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், புவிபாலசிங்கம்(பூபால சிங்கம்), பத்மாதேவி ஆகியோரின் பெறாமகனும், காலம்சென்ற அருந்தவநாதன் (அருந்தவம்), சிவகுருநாதன்(பிரான்ஸ்), கந்தசாமி, சறோஜினிதேவி(பிரான்ஸ்), மனோன்மணி ஆகியோரின் அன்பு மருமகனும் நதிசா(சுவிஸ்), ஜொலினா(சுவிஸ்)ஆகியோரின் சிறிய தந்தையும், மயூரி, சரவணன், கஸ்தூரி, பிரசாந்(ஜேர்மன்), பிறேம்கா(ஜேர்மன்), கௌரிசங்கர், கீர்த்தனா, அபிராமி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.07.2011 புதன்கிழமை இன்று பிரான்சில் நடைபெறும். துக்க நிகழ்வு நீர்வேலி வடக்கிலுள்ள இல்லத்தில் இன்று நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

மயூரி இரும்பகம்
48, குறுக்கு வீதி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

தகவல்: செ.துரைசிங்கம் J.P
(தந்தை),
சகோதரர்கள்.

(5356)

# இன்று ஒரு தகவல்

## குருகுலத்தில் தர்மர்

அந்தக் காலத்தில் எப்படி கல்வி கற்க வேண்டும் தெரியுமா?

குருகுலவாசம் செய்து கல்வி கற்க வேண்டும்.

குரு ஓர் ஆசிரமத்தில் இருப்பார். அங்கே போய் அவருக்குத் தொண்டுகள் செய்ய வேண்டும்; அவருடைய துணிகளைத் துவைத்துப் போட வேண்டும்; அவர் தூங்கும் போது அவருடைய காலைப் பிடித்து விட வேண்டும்; புழுக்கமாக இருந்தால் அவருக்கு விசிற வேண்டும்.

இவ்விதம் அந்தக் காலத்தில் குருவுக்குத் தொண்டு செய்து, அவரிடம் கல்வி கற்க வேண்டும்.

அவர் கற்றுக் கொடுப்பதைச் சீடர்கள் ஓலைச் சுவடிகளில் எழுதிக் கொள்வார்கள்.

ஆகவே, குருகுலவாசம் என்பது, மனதையும் அறிவையும் பண்படுத்தும் ஒரு பயிற்சியாகும்.

அந்தக் காலத்தில் பஞ்ச பாண்டவர்கள் ஒரு குருகுலத்தில் கல்வி கற்பதற்குச் சென்றார்கள்.

ஏற்கனவே அங்கு பதினைந்து பேர் இருந்தார்கள். இவர்களையும் சேர்த்து அந்தக் குருகுலத்தில் மாணவர்களின் எண்ணிக்கை இருபது ஆயிற்று.

எல்லோரும் மிகவும் ஆர்வத்தோடு அங்கு படித்துக் கொண்டிருந்தார்கள்.

சில ஆண்டுகள் கழிந்தன.

எல்லோரும் ஊருக்குத் திரும்ப வேண்டிய நேரம் வந்தது.

குரு ஒவ்வொரு மாணவராகக் கூப்பிட்டார். "இது வரையில் நீ என்ன கற்றுக் கொண்டாய்?" என்று கேட்டார்.

அவரவர்கள் தாங்கள் எழுதி வைத்திருந்ததைக் கூறினார்கள்; கற்றுக் கொண்டதைச் சொன்னார்கள்.

அங்கே படிக்க வந்த மாணவர்கள் எல்லோருமே புத்திசாலிகள்; இளவரசர்களாக இருப்பவர்கள்.

அதனால் அவர்களிடம் அபாரமான கல்வியறிவை குரு எதிர்பார்த்தார்.

ஒரு மாணவன் வந்தான். அவன் தான் எழுதி வைத்திருந்த சரித்திர பாடம் முழுவதையும் படித்துக் காண்பித்தான்.

இன்னொரு மாணவன் வந்தான். அவன் தான் எழுதி வைத்திருந்த பூகோள பாடம் முழுவதையும் படித்துக் காண்பித்தான்.

இப்படி ஒவ்வொரு மாணவனாக வந்து படித்து காட்டிவிட்டுச் சென்றார்கள்.

கடைசியாக தர்மர் வந்தார். பேசாமல் நின்றார்.

அவர் தன் கையில் இருந்த ஓலைச் சுவடிக் கட்டைப் பிரிக்கவே இல்லை.

குரு தர்மரிடம்தான் அதிகமாக எதிர்பார்த்தார். ஆனால், தர்மர் பேசாமல் நின்றார்.

"நீ என்ன கற்றுக் கொண்டாய்? சொல்... ஓலைச்சுவடியைப் பிரித்துப் படி...!" என்றார் குரு.

தர்மர் அசையவே இல்லை, மெதுவாச் சொன்னார்;

"ஐயா... நான் ஒன்றே ஒன்றுதான் கற்றுக் கொண்டேன். அதுவே வாழ்க்கையில் எனக்கு மிகவும் முக்கியமான பாடமாக அமையும்!" என்றார்.

"என்னிடம் இவ்வளவு காலம் இருந்து படித்து... கற்றுக் கொண்டது ஒன்றே ஒன்றுதானா?" என்று கேட்டார் குரு.

அவருக்கு ஒன்றும் புரியவில்லை.

'மற்ற மாணவர்களை விட தர்மர் பண்புகளில் உயர்ந்தவன்... அறிவில் சிறந்தவன்... வயதில் முதிர்ந்தவன்... இவனே இப்படி சொன்னால் மற்றவர்களின் நிலை என்ன?' அவர்கள் கெட்டுப் போய்விடுவார்களே? என்று குரு நினைத்தார்.

"தர்மா... நன்றாக யோசனை செய்து பதில் சொல்... குருகுலத்தில் நீ இவ்வளவு காலம் இருந்து என்ன கற்றுக் கொண்டாய் என்று கேட்கிறேன்! என்று குரு சிறிது கோபமாகக் கேட்டார்.

தர்மர் முகத்தில் எந்த மாறுதலும் இல்லை.

அவர், "இல்லை ஐயா... இவ்வளவு காலமாக நான் கற்றுக் கொண்ட முக்கியமான பாடம் ஒன்றே ஒன்றுதான்!" என்று திரும்பவும் கூறினார்.

இப்போது குருவுக்குக் கோபம் வந்துவிட்டது.

அவர் கோபத்துடன், "உனக்கு வெட்கமாக இல்லையா? உன்னைவிட வயதில் குறைந்தவர்கள் எவ்வளவோ பாடம் கற்றுக்கொண்டிருக்கிறார்கள்! எவ்வளவு விரிவாகப் படித்துக் காட்டினார்கள்! நீயும் ஓலைச் சுவடியில் நிறைய குறித்துத்தானே வைத்திருக்கிறாய்?" அதை ஏன் எடுத்துப் படிக்கக் கூடாது? என்று கேட்டார்.

"ஐயா! நான் சொல்வது உங்களுக்கு ஏமாற்றமாக இருந்தால் என்னை மன்னித்து விடுங்கள். நான் மிகவும் முக்கியமான பாடமாக ஒன்றே ஒன்றைத் தான் கற்றுக் கொண்டிருக்கிறேன். மற்ற எதையும் எடுத்துச் சொல்வதற்கு நான் விரும்பவில்லை!" என்றார் தர்மர்.

இதைக் கேட்டதும் எல்லா மாணவர்களும் சிரித்து விட்டார்கள்.

குருவுக்குக் கோபம் அளவு கடந்து போயிற்று.

அவர் தர்மரின் கன்னத்தில் ஓங்கி அறைந்தார்!

அதனால் தர்மரின் கன்னம் சிவந்து விட்டது... அவரது கண்கள் கலங்கின.

ஆனாலும் தர்மர் அமைதியை இழக்க வில்லை. தலைகுனிந்து நின்றார்.

தர்மரின் பிடிவாதம் முனிவருக்கு மேலும் ஆத்திரத்தை ஏற்படுத்தியது.

அதனால் அவர் தர்மரின் இன்னொரு கன்னத்திலும் அறைந்து விட்டார்.

எல்லோரும் பயந்து போய் அமைதியாக நின்றார்கள்.

குரு, "அப்படி நீ கற்றுக் கொண்ட அந்த முக்கியமான பாடம்தான் என்ன? அதையாவது சொல்!" என்று கத்தினார்.

"ஐயா... அதை மட்டும் ஓர் ஓலைச் சுவடியில் தனியாகக் குறித்து வைத்திருக்கிறேன். இந்தாருங்கள் நீங்களே படியுங்கள்!" என்றார் தர்மர்.

குரு அதை வாங்கிச் சத்தம் போட்டு படித்தார்:

"எப்படிப்பட்ட சோதனை ஏற்பட்டாலும், நிதானம் இழந்து கோபத்திற்கு ஆளாகக் கூடாது!" – இதுதான் தர்மர் எழுதியிருந்த ஓலைச்சுவடியில் எழுதப்பட்டிருந்தது.

அந்த ஒரு விநாடியிலேயே குருவும், மற்ற மாணவர்களும், "தர்மர் கற்றுக் கொண்டது வெறும் ஏட்டுச் சுரைக்காய் இல்லை... வாழ்க்கையில் பயன்படக் கூடிய மிக முக்கியமான அனுபவ பாடத்தை அவர் கற்றிருக்கிறார்!" என்ற உண்மையைப் புரிந்து கொண்டார்கள்.

குருவின் கண்களில் கண்ணீர்... அவர் தர்மரை அன்போடு கட்டித் தழுவிக் கொண்டு, "தர்மா... என்னை மன்னித்து விடு. நீ சாதாரண மாணவன் அல்ல...

நான் இது வரையில் தெரிந்து கொள்ளாத அனுபவ பாடத்தை நீ இப்போது எனக்குக் கற்றுக் கொடுத்து விட்டாய். நீ என்னுடைய மாணவன் என்று சொல்லிக் கொள்வதில் எனக்குத்தான் பெருமை! என்றார்.

நிதானம் தவறக் கூடாது என்பது நாம் எல்லோரும் கற்றுக் கொள்ள வேண்டிய ஒரு நல்ல பாடம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தரம் குறைந்த பெற்றோல் குறித்து விசாரிக்க நாடாளுமன்ற தெரிவுக்குழுவை நியமிக்க வேண்டும்

தரம் குறைந்த பெற்றோல் விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு நாடாளுமன்ற தெரிவுக் குழுவொன்றை நியமிக்க வேண்டுமென தாம் கோரவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி நேற்று தெரிவித்துள்ளது.

கட்சியின் நாடாளுமன்ற தெரிவுக் குழு இது தொடர்பாக விரைவில் இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ளும் என ஐ.தே.க. பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க நேற்று தெரிவித்தார்.

தரம் குறைந்த பெற்றோலை தொகுதியை கொள்வனவு செய்வதற்கு உத்தரவிட்டவர் யாரென அதிகாரிகள் நிரூபிக்க வேண்டும்.

இந்நாட்டின் தற்போது மேற்கொள்ளப்படும் நடைமுறைகளை கருத்திற்கொள்ளும் போது இந்த பரிவர்த்தனைகள் சக்தி வாய்ந்த ஒரு நபரின் உத்தரவினால் மேற்கொள் ளப்பட்டிருக்க வேண்டும். இந்த நாடகத்தின் பின்னாலுள்ள சக்தி வாய்ந்த நபரை அதிகாரிகள் வெளி ப்படுத்த வேண்டும். இது தொடர்பாக பொறுப்பிலிருந்து சம்பந்தப்பட்ட அமைச்சு விலகியோட முடியாது என திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். (ஸ்ரீ-4)

# காரைநகர் ஊரி முருகன் கோவில் வீதி நெல்சிப் திட்டத்தின் கீழ் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

பொருளாதார அமைச்சின் கீழ் உலக வங்கியின் உதவியுடனும் காரைநகர் பிரதேச சபை மற்றும் பொதுமக்களின் பங்களிப்புடன் 12.1 மில்லியன் ரூபா செலவில் காரைநகர் ஊரி முருகன் வீதி புனர மைக்கப்படவுள்ளது.இப் புனரமைப்பு வேலைகள் நாளை வியாழக்கிழமை பொரு ளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இத்திட்டமானது உள்ளூராட்சி சபைகளின் ஊடாக பொதுமக்களின் அடிப்படை வசதிகள், கட்டுமானங்களை அதிகரிக்கும் நோக்கோடு மக்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டமாகக் காணப்படுகின்றது.காரரைநகர் பிரதேசசபைக்குட்பட்ட கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கியதாக 2 கொத்தணிகளாக பிரிக்கப்பட்டு திட்டங்கள் மக்களாலே தெரிவு செய்யப்பட்டு நான்கு ஆண்டுகளுக்கு தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்கு பொருளாதார அமைச்சினால் திட்டமிடப்பட்டுள்ளது.இத்திட்டத்தின் கீழ் வீதிகள், சந்தைகள், பொதுக்கிணறுகள், மின்சாரம், சுகாதார வசதிகள், மயானங்கள், முன்பள்ளிகள், சனசமூக நிலையங்கள் மற்றும் பிரதேச அபிவிருத்தியுடன் தொடர்புடைய ஏனைய திட்டங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. (ஸ்ரீ-4)

# யாழ்.தேர்தல் மாவட்டத்தில் 41 வாக்கெண்ணும் நிலையங்கள்

யாழ்.தேர்தல் மாவட்டத்தில் 41 நிலையங்களில் வாக்கெண்ணும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக தேர்தல் ஆணையாளர் ஆ.சு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.தேர்தல் மாவட்டமானது 54 வலயமாகப் பிரிக்கப்பட்டு தேர்தல் கடமைகளை கண்காணிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.வாக்களிப்பு நிலையங்களுக்கு கட்சிகளும் சுயேட்சைகளும் தமது அங்கீகரிக்கப்பட்ட இரு முகவர்களை நியமிக்க முடியும்.

போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இதில் மாற்றம் கொண்டு வரப்படும். அதாவது 6 தொடக்கம் 9 வரையான வேட்பாளர்களை கொண்ட கட்சிகள் 4முக வர்களை நியமிக்க முடியும்.

மேலும் யாழ்.மாவட் டத்தில் 35 வாக்கு எண் ணும் நிலையங்களும்,கிளிநொச்சி மாவட்டத்தில் 6 வாக்கு எண்ணும் நிலைய ங்களும் இயங்கவுள்ளது.

இங்கு தபால்மூல வாக்குகள் எண்ணப்பட மாட்டாது என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ - 4-6)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 40 |
| உருளைக்கிழங்கு | 75 | 60 |
| பச்சைமிளகாய் | 70 | 70 |
| தக்காளி | 40 | 50 |
| மரவள்ளிக் கிழங்கு | 50 | 60 |
| கோவா | 70 | 70 |
| கரட் | 70 | 80 |
| பூசணி | 30 | 30 |
| புடோல் | 30 | 40 |
| வாழைக்காய் | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 60 | 60 |
| பாகற்காய் | 80 | 90 |
| வெண்டிக்காய் | 60 | 50 |
| கருணைக் கிழங்கு | -- | -- |
| பயற்றங்காய் | 100 | 100 |
| லீக்ஸ் | 60 | 60 |
| பீற்றூட் | 60 | 60 |
| கறிமிளகாய் | 60 | 80 |
| முருங்கைக்காய் | 120 | 180 |
| போஞ்சி | -- | 130 |
| கத்தரிதம்புள்ள | 20 | 30 |
| கீரை - 1 பிடி | 10 | 20 |
| தேசிக்காய் | 60 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 25-45 | 40 |

# இராசி பலன்

13.07.2011
(ஆனி 28, புதன் கிழமை)
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
திரயோதசி பிற்பகல் 2.14 மணிவரை
கேட்டை முற்பகல் 10.04 மணிவரை
இராகுகாலம் 11.59-1.29 மணிவரை
சுபநேரம் 4.29-5.59 மணிவரை

**மேடம்** மனக்குறை அகன்று மகிழ்ச்சி கூடும் நாள், பொது வாழ்வில் ஏற்பட்ட வீண்பழிகள் மாறும், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், பெண்வழி ஒத்துழைப்பு கிடைக்கும்.

**இடபம்** பிள்ளைகள் வழியில் திடீர் செலவுகள் ஏற்படலாம், குடும்பப் பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை.

**மிதுனம்** நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள், கணவன்- மனைவியிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், இளமைக்கால நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.

**கடகம்** பகை விலகி பாசம் கூடும் நாள், உடல் நலம் சீராகும், பயணத்தால் பலன் கிடைக்கும், பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும், போசன சுகமுண்டு.

**சிங்கம்** பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் நடைபெறலாம்,புதிய நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பூமியால் இலாபம் உண்டு, தொழில் விருத்தியுண்டு.

**கன்னி** விருந்தினர்களை வரவேற்று வியப்படையும் நாள், தூரத்து உறவுகளால் நன்மையுண்டு, புதிய திருப்பங்கள் இடம்பெறலாம், சுப செலவுகள் அதிகரிக்கும்.

**துலாம்** பாராட்டும் புகழும் கூடும் நாள், உடன் பிறப்புக்களால் உதவிகள் கிடைக்கலாம், செய்தொழிலில் மேன்மையுண்டு, தடைப்பட்ட காரியம் கைகூடும்.

**விருச்சிகம்** பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள், பெரிய மனிதரின் சந்திப்பு இடம்பெறலாம், திடீர் பயணங்களால் நன்மையுண்டு, குடும்பத்தினரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு** சொன்ன சொல்லைக் காப்பாற்ற துடிப்புடன் செயற்படுவீர்கள், தொழிலில் புதிய கூட்டாளிகள் வந்திணைவர், வெளியூர் பயணமொன்று இடம்பெறலாம்.

**மகரம்** சுப விரயம் ஏற்படும் நாள், பயணங்களால் மன உளைச்சல்கள் ஏற்படலாம், உறவினர் வீட்டு சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**கும்பம்** தனவருவாய் திருப்தி தரும், சமயோசிதப் புத்தியால் பலரையும் கவர்வீர்கள், தொலைபேசி மூலம் பொன்னான செய்திகள் வந்து சேரும், பெருமையான நாள்.

**மீனம்** தன்னம்பிக்கை துளிர் விடும் நாள், தொழில் சம்பந்தமான முக்கிய முடிவெடுப்பீர்கள், பிறர் உதவியுண்டு, ஆரோக்கியம் சீராகி ஆனந்தமடையும் நாள்.

வளவன்

# யாழ்.கல்வி வலய பாடசாலைகளின் அழகியல் கண்காட்சி நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்திலுள்ள 40 பாடசாலைகள் பங்கு பற்றிய அழகியற்பாடக் கண்காட்சி நேற்று யாழ்.மத்திய கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தக் கண்காட்சியில் யாழ்.வலயத்திலுள்ள பாடசாலை மாணவர்களினால் சங்கீதம், சித்திரம், நடனம்,நாடகம் ஆகிய பாடங்கள் சார்ந்த ஆக்கங்களும் கலைப்படைப்புக்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களின் ஆக்கங்களும் இதில் காட்சிப்படுத்தப்பட்டன.

இந்தக் கண்காட்சி இன்றும் நடத்தப்படும் என தெரிவிக்கப்பட்டது.

மேலும் இந்தக் கண்காட்சியில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வடக்குமாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் முத்துராதா கிருஷ்ணன் உரையாற்றுகையில்,யாழ்.மாவட்டத்தை பொறுத்தவரை அழகியல் பாடத்திற்கான போதிய வசதிகள் இன்னும் கிடைக்கவில்லை.

மாணவர்கள் தற்போது அழகியற் பாடங்களைத் தெரிவு செய்வதில் பின்னடைவு காட்டுகின்றார்கள்.

மாணவர்களுக்கு அழகியற்பாடங்கள் ஊடாக கிடைக்கும் நன்மைகள் தொடர்பாக போதியளவு விளக்கம் இல்லாதுள்ளது.

இந்தப் பாடங்கள் தொழில் வாய்ப்புக்களை பெற்றுத் தரக்கூடியவை என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

அது மட்டுமன்றி தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணம் வருபவர்கள் இங்குள்ள உற்பத்திப் பொருட்களை வேண்டிச் செய்வதில்லை. காரணம் அங்குள்ளவர்களும் இவற்றை உற்பத்தி செய்கின்றனர்.

பனை மரம் சார்ந்த பொருட்கள் மட்டுமே எம்மால் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவைதென்னிலங்கையிலும் அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

ஆனால், அந்தப் பொருட்கள் அழகியல் ரீதியாக வடிவமைப்பு செய்யும் போது அதன் விற்பனை அதிகரிக்க வாய்ப்புள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-6)

## அமரர் அமிர்தலிங்கத்தின் சிரார்த்த தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் தலைவர் அமரர் அமிர்தலிங்கத்தின் சிரார்த்ததின நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு மார்ட்டின் வீதியில் அமைந்துள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் கூட்டணியின் ஆதரவாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ - 6)

# வடமராட்சி வடக்கு கடற்பகுதியில் வான் தோண்டும் பணி ஆரம்பம்

(பருத்தித்துறை)

வடமராட்சி வடக்கு கடற்பகுதியில் இடைநிறுத்தப்பட்டிருந்த வான் தோண்டும் பணி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பணியினை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து வைத்தார்.

இவ் வான் தோண்டாத காரணத்தால் மீனவர்கள் தொழில் செய்ய முடியாமல் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கி வந்தனர். இதனையடுத்து அமைச்சர் மீனவர்களின் நலன் கருதி இப்பணியினை ஆரம்பித்துவைத்துள்ளார்.

இவ் வான் தோண்டும் பணி தொண்டைமானாறு தொடக்கம் பொலிகண்டி வரையுள்ள கடற்பகுதிகளில் நடைபெற்று, தற்காலிகமாக வடமராட்சி வடக்கு மிகுதி கடற்பகுதிகளில் தடைப்பட்டிருந்தது.

தற்போது இப்பணி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதையடுத்து மீனவர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ- 2-10)

## வருடாந்த பரிசளிப்புவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் ஏ.நோயல் விமலேந்திரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன்,அவரது பாரியார் திருமதி கிருபாகரி இளங்கோவன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-2)




# நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் 90 ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகள்

(கரவெட்டி)

நெல்லியடி மத்திய மகாவித்தியாலத்தின் 90 ஆவது ஆண்டு நிறைவு விழாவின் பரிசளிப்பு விழாவும் மலர் வெளியீடும் எதிர்வரும் 15,16,17 ஆகிய தினங்களில் கல்லூரி கலையரங்கில் அதிபர் எஸ்.சேதுராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் முதலாம் நாளான எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலையின் வருடாந்த பரிசளிப்புவிழா நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கணித புள்ளி விபரவியல்துறை தலைவர் கலாநிதி சி.ஸ்ரீசற்குணராஜா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். அத்தோடு பரிசில்களை திருமதி சிவராணி ஸ்ரீசற்குணராஜா வழங்கி சிறப்பிக்கவுள்ளார்.

மறுநாள் 16 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு 90 ஆவது ஆண்டு நிறைவு விழா போட்டிகளுக்கான பரிசளிப்பு நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே. என்.டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கல்வி வலய பிரதி செயலாளர் வே.தி.செல்வரட்ணம்,பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர்.கேதீஸ்வரன், பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்தோடு மூன்றாம் நாள் நிகழ்வில் பிற்பகல் 2 மணிக்கு நெல்லிக்கனி மலர் வெளியீட்டு விழாவும் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை, அமைச்சின் வடமாகாண செயலாளர் இ.இளங்கோவன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இதில் சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், வடமாகாண கல்வி அமைச்சின் பிரதம கணக்காளர் ரி.இராஜேந்திரன், கொழும்பு பல்கலைக்கழக கல்வித்துறை பேராசிரியர் மா.கருணாநிதி, வடமராட்சி கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா, வடமராட்சி தெற்கு மேற்கு செயலர் சி.சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-24)

# சாவகச்சேரியில் மின்சாரம் வழங்கப்படாத பகுதிகளுக்கு ஒருவார காலத்தில் மின்சாரம்

## வடமாகாண ஆளுநர் உறுதி

சாவகச்சேரிப் பகுதியில் மின்சாரம் வழங்கப்படாத பகுதிகளுக்கு ஒரு வாரத்திற்குள் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி நகரசபை கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி பிரதேச மின்சாரம், வீதி அபிவிருத்தி, குடிநீர் பிரச்சினைகளை நான் கருத்தில் எடுத்துள்ளேன். இப்பகுதிக்கான மின்சாரத்தை ஒரு வாரத்துக்குள் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அத்தோடு மீள்குடியேறியுள்ள மக்களுக்கான நஷ்டஈடுகளை வழங்குவதற்கு அவர்களது பெயர், விபரங்கள் அடங்கிய பட்டியலைத் தயாரித்து வழங்குமிடத்து உரிய அமைச்சருடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் இப்பகுதியிலுள்ள வீடுகளற்றவர்களுக்கு வீடு அமைப்பதற்கான பொருட்களை வழங்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.இச் சந்திப்பின் போது கொடிகாமம் பருத்தித்துறை வீதியை (கரம்பக் குறிச்சி) பயன்படுத்த மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். இதனை கருத்தில் எடுத்து உடன் இராணுவக் கட்டளைத்தளபதியுடன் தொடர்பு கொண்டு கதைத்து அவ்வீதியினை இன்றைய தினம் பயன்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளார்.

வறிய மாணவர்களது விபரங்களை கல்வி பணிப்பாளரூடாக வழங்குமாறும் அவர்களுக்கு உதவி வழங்கநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (ஸ்ரீ-4)







யாழ்.வலய பாடசாலைகளுக்கிடையிலான அழகியற்பாட கண்காட்சி நேற்று யாழ்.மத்திய கல்லூரியில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் எ.சற்குணராஜா மங்கல விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் முத்து ராதாகிருஷ்ணன் நாடாவை வெட்டி கண்காட்சியை ஆரம்பித்து வைப்பதையும் மாணவர்களின் கலை நிகழ்வினையும் படங்களில் காணலாம். (படங்கள்:-அலுவலக செய்தியாளர்)

# கட்டுநாயக்க தாக்குதலில் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகியே இளைஞர் உயிரிழந்தார்

(கொழும்பு)

துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி யே கட்டு நாயக்க சுதந்திர வர்த்தக வலயப் போராட்டத்தில் இளைஞர் உயிரிழந்துள்ளார் என நீர் கொழும்பு பிரதான நீதிவான் ஏ.எம். என். பீ.அமரசிங்க தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்க டி.எஸ். எல். குளோபல் என்னும் நிறுவனத்தில் கடமையாற்றிய மினுவான் கொடையை சேர்ந்த ரொசான் சானக்க என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சீதுவ பொலிஸ் நிலையத்தை சேர்ந்த பொலிஸ் பரிசோதகர் ரத்நாயக்க மற்றும் சுற்றாடல் பிரிவு பொறுப் பாதிகாரி ஆர். ஜி. கே.எல். ரணசிங்க ஆகியோர் இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களின் சட்டதரணிகள் நீதிமன்றில் சமர்ப்பித்த பிணை மனுவை நிராகரித்த நீதிவான் சந்தேக நபர்களை தொடர்ந்து தடுத்து வைத்து விசாரணை நடத்துமாறு உத்தரவிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்த வழக்கு விசாரணைகள் எதிர்வரும் 25 ஆம் திகதி மீண்டும் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-2)

# பொலிஸ்மா அதிபரின் உத்தியோகபூர்வ இல்லம் இன்னமும் ஒப்படைக்கப்படவில்லை

முன்னாள் பொலிஸ்மா அதிபர் மகிந்த பாலசூரிய உத்தியோக பூர்வ இல்லத்தை இன்னமும் ஒப்படைக்கவில்லை என குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

ஓய்வு பெற்றுக் கொண்ட ஒரு மாதகாலம் கடந்துள்ள நிலையில் அவர் உத்தியோகபூர்வ இல்லத்தை விட்டு வெளியேற தவறியுள்ளதாக பொலிஸ் வட்டாரத் தகவல்கள் குற்றம் சுமர்த்தியுள்ளன. இதன் காரணமாக புதிய பொலிஸ்மா அதிபர் என். கே. இலங்கக்கோன் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு செல்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

புதிய பொலிஸ்மா அதிபருக்கு பாதுகாப்பு வழங்கும் தரப்பினர் இதனால் பெரும் நெருக் கடிகளை எதிர் நோக்கி வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் தனிப்பட்ட இல்லத்திலிருந்து கடமைகளுக்குச் செல் வதாக குறிப்பிடப்படுகிறது. ஓய்வுபெற்ற பொலிஸ் மா அதிபர் , இரண்டு சமையற் கலைஞர்கள் , மூன்று உணவு விநியோகிப்போரின் சேவையை தொடர்ச்சியாக பெற்றுக் கொள்வதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

# வீதி புனரமைப்பு ஆரம்ப நிகழ்வும் பெயர்ப்பலகை திரைநீக்கமும்

(அச்சுவேலி)

ஆவரங்கால் மேற்கு வன்னிய சிங்கம் வீதி புனரமைப்பு ஆரம்ப நிகழ்வும் பெயர்ப்பலகை திரை நீக்கமும் இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அத்துடன் இருபாலை கிழக்கு , கோப்பாய் மத்தி,கிராம அலுவலர் பிரிவில் கிளுவானை, புத்தூர் கிழக்கு ஊறணி கிராமங்களில் குழாய் நீர் வழங்கல் ஆரம்பித்து வைக்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது.

அதனை தொடர்ந்து இன்றைய தினம் அச்சுவேலி- அராலி வீதி அகலிப்பு வேலைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வும் வல்லை சந்தியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுகளில் அமைச்சர் கள், அரச உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதாக வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினர் தெரிவிக்கின்றனர். (ஸ்ரீ-84)

## விற்பனை நிலையம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள மகளிரால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் சந்தை வாய்ப்பை அதிகரிக்கச் செய்யும் நோக்குடனும் அவர்களின் வாழ்வாதாரத்தினை முன்னேற்றும் நோக்குடனும் சொண்ட் நிறுவன அனுசரணையுடனும் விற்பனை நிலையம் ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

மேற்படி விற்பனை நிலையம் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு இல. 18 சீனியர் வீதி கலட்டி, யாழ்ப்பாணம் எனும் முக வரியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

எனவே, ஆர்வமுள்ள அனைவரையும் இத் திறப்பு விழாவில் கலந்து கொள்ளுமாறு நிறைவேற்றுப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## கால்நடை தீவனங்கள் விற்பனை நிலையம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பிரதேசத்தில் கால்நடை வளர்ப்போரின் நன்மை கருதி நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு சின்ன ஆலடி காரை நகரில் கால் நடைத் தீவனங்கள், மருந்துகள் விற்பனை நிலையம் ஒன்றை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாக வட்டுக் கோட்டை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்க செயலாளர் வே சிவலிங்கம்தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)


LIONS CLUB OF MANIPAY PARISH

Distriet-306BI Region:10 Zone:20

மானிப்பாய் பரிஸ் லயன்ஸ் கழகம் நடாத்தும் எதிர்கால தொழில் வாய்ப்புக்கான மாபெரும் கருத்தரங்கும், தலைமைத்துவ பயிற்சியும்

வேலை வாய்ப்பை தேடி...
அது கிடைக்காது கவலையுடன் இருக்கிறீர்களா....?
என்ன செய்யலாம்?
விடை தருகிறார்கள்....

- லயன் ரவீந்திரா (முன்னாள் தலைமை முகாமையாளர் கொமர்ஷல் வங்கி)
- திரு.ம.விஜிந்தன் (மனிதவள முகாமையாளர் வடமாகாணம் யூனியன் அஸ்யூரன்ஸ் (PLC)
- திரு. C.N. மதிவதனன் (முகாமையாளர் யூனியன் அஸ்யூரன்ஸ் PLC வடமாகாணம்

**காலம்:-** 16.07.2011 (சனிக் கிழமை)
காலை-10.00 மணி

**இடம்:-** T.C.T மண்டபம், நாவலர் வீதி,
ஆனைப்பந்தி (தியாகி அறக்கொடை நிலையம்)

**அனுமதி:-** முற்றிலும் இலவசம்
(முந்தும் 150 பேருக்கு)
விரைந்து வாருங்கள்
அறிந்து கொள்ளுங்கள்
அரியதொரு வேலைவாய்ப்பை....

*தலைவர்*

சி/3712


## மணிபல்லவத்தில் மஹோற்சவம்



## நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

### இன்று சப்பறத் திருவிழா

### சப்பறத்தின் நாயகி

அழகிய சப்பறம் தனிலே
வானம் குடை பிடிக்க
நட்சத்திரங்கள் கண் சிமிட்ட
கடலலைகள் கானம் இசைக்க
இளம் தென்றல் சாமரம் வீச
பவனி வரும் தேவியே
நின் திருவுருவக் காட்சி
கண்கொள்ளாக் காட்சியம்மா...!

*மகேந்திரலிங்கம் நிரோஷனா ,*
*கோப்பாய் தெற்கு.*

### சப்பை ரதமேறி வருகிறாள்

சர்ப்பமா யெழுந்த நயினை நாகம்மை
சப்பை ரதமேறி வாழ்வுதர வருகிறாள்
அப்பன் இவனை அரவணைக் கொண் டவள்
அதிசய வண்ணம் தாங்கி வருகின்றாள்
எப்போதும் எமை ஆளும் மணிபல்லவ நாயகி
எழில் விஞ்சும் சப்பை ரதத்தில் வருகிறாள்
தப்பேதும் புரிந்தவர்க்கும் தயை காட்டும் நாயகி
தளர் வறியா மனம் படைக்க சப்ப ரதத்தில் நாயகி
தளர்வறியா மனம் படைக்க சப்பறத்தில் வருகிறாள்

*மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன்.*

### சக்தியே அருள்புரிவாய்

சர்ப்பத்தின் மீது அருளாட்சி புரிபவளே
சர்வமும் உனதே சகலதும் எனதே
சலனமற்று நாங்கள் வாழ சஞ்சலங்கள் தீர்த்து
சக்தியே நீ அருள் புரிவாயே

*தவா சுன்னாகம்.*

### எம்மைக் காத்தருள்வாய் தாயே!

அன்ன பூரணி அபிராமி அகிலாண்ட நாயகி
நான்முகி நாராயணி நர்த்தனி நளின முறு கோமளை வராகி
வான்புகழும் வரலகஷ்மி வாகினி வண்ணமுறு வீரமாகாளி
மாண்புறு மனோன்மணி மாதங்கி மங்கயற்கரசி உமாதேவி
பாகீஸ்வரி லோகேஸ்வரி பவானி பங்கயற்செல்வி எனும்
விண்ணிறைந்து மண்ணிறைந்து எம் கண்ணிறைந்த
காரூப சாந்த மயிலே
என்னுமேன் தயக்கம் அம்மா! எமைக் காத்தருள்வாய் தாயே!

*விகடகவி திருஞாவுக்கரசு.*


இனிமையான நினைவுகளுக்கு...

GREEDY'S
Hotel & Restaurant



205, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(ராஜா தியேட்டர் பில்டிங்)
T.P.: 0212221939, 0776081701

(சி-3653)

# உங்களின் ஜாதகமும் ஏற்படும் நோய்களும்

மனித இனத்திற்கு எண்ணற்ற நோய்கள் இருந்து வருகின்றன. முற்காலத்தில் இவ்வளவு நோய்கள் இருந்ததாக நமக்குத் தெரியவில்லை.

ஏன்?சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு இருந்திராத வியாதிகள்,நோய்கள், சில புதுப் பெயர்களைத் தாங்கி இப்போது ஏற்பட்டு மருத்துவ வல்லுநர்களே பிரமிக்கும் வகையில் உண்டாகி வருவதை நாம் பார்த்துக் கொண்டு வருகிறோம். இந்த அடிப்படையில் மருந்துகளும் புதிது புதிதாகப் கண்டு பிடிக்கப்பட்டு வருகின்றன.

ஜோதிடம் தோன்றிய காலத்தில் மனிதனுக்கு உண்டான எல்லா நோய்களும் வாதம், பித்தம், கபம் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு இருந்து வந்ததை நாம் மறக்க முடியாது.

எனவே ஜோதிட மோதைகளும் இந்த மூன்று விதமான நோய்களையும் 9 கிரகங்களுக்கு பங்கிட்டு ஜோதிட ரீதியில் மனிதனுக்கு ஏற்படும் நோய் நொடிகளை துல்லியமாக விளக்கி வந்திருக்கிறார்கள்.

பிற்காலத்தில் மேலே கூறப்பட்ட நோய்களும் இந்த அடிப்படையில் உண்டானதால் இப்போதுள்ள ஜோதிட மேதைகள் மருத்துவ மேதைகளுடன் கலந்தாலோசித்து ஒருவருக்கு ஏற்படவிருக்கும் நோயின் குணங்களை கண்டறிந்து தக்க பரிகார முறைகளை எடுத்துக் கூறித் தடுக்க முடியும் என்பது எமது கருத்து.

ஒருவர் ஜாதகத்தில் அவருக்கு ஏற்பட இருக்கும் நோய், ரணம், கட்டி முதலியவைகளையும் எதிரிகளுடன் ஏற்படும் சண்டையால் உண்டாகும் ஆயுதக் காயங்களையும் லக்னத்திற்கு ஆறாமிடத்தின் இராசியின் குணத்தாலும்அந்த இராசியாதிபதியின் வலுவாலும் தீர்மானிக்க வேண்டியது ஜோதிடரின் தலையாய பணியாகும்.

லக்னத்திற்கு ஆறாம் வீடு எந்த இராசியாகவும் இருக்கலாம். இராசி மண்டலத்திலுள்ள 12 இராசிகளில் ஏதாவதொன்று பிறந்த நேர லக்னத்திற்கு 6 ஆம் இடமாக அமைவதுண்டு.

அதுபோலவே,சூரியன் முதல் சனி வரையில் உள்ள 7 கிரகங்களும் 6 ஆம் வீட்டுக்கு அதிபதியாக வருவதுண்டு. சுபக்கிரகங்களான குரு, சுக்ரன், புதன்,வளர்பிறைச் சந்திரன் போன்றவர்கள் ஆறாம் இடத்திற்கு அதிபதியாக வரும் போது ஆதிபத்திய பாவிகளாக மாறுவதுண்டு.

இயற்கை பாபிகளான சூரியன், செவ்வாய், சனி, தேய்பிறைச் சந்திரன் 6 ஆம் இடத்துக்கு அதிபதியாகி பாபத்தன்மை பெறுவதும் உண்டு.

இந்த அளவில் 6 ஆம் வீட்டதிபதி இயற்கை சுபனாகவோ,இயற்கை பாபியாகவோ இருந்து மற்றொரு பாபக்கோளின் சேர்க்கை பெற்று ஜென்ம லக்னத்திலோ எட்டாமிடத்திலோ இருந்தால் உடலில் ரண காயங்கள் ஏற்படுமென்று பழங்கால ஜோதிட நூல்கள் கூறுகின்றன.

இங்கே குழந்தை பிறந்தது முதல் ஆயுள் முடியும் வரை வாழும் பல ஆண்டு காலமும் உடல் முழுதும் ரண காயங்கள் இருக்குமென்று எப்படிச் சொல்ல முடியும்?

குழந்தை சிசேரியன் ரண சிகிச்சையால் பிறந்திருந்தால் சொல்லப்பட்ட பலன் பிறந்தவுடனேயே ஏற்பட்டதாக கொள்ள வேண்டும். பின்னால் ஏற்பட நியாயமில்லை.பிறக்கும் போது ஒரு ரண காயமும் இல்லாமல் பிறந்து




வளர்ந்து வந்தாலும் லக்னாதிபதி, 6 க்கு அதிபதி, 8 இற்கு அதிபதி இவர்களுடன் சேர்ந்த ஒரு பாபப் கிரகத்தின் தெசாபுத்தி அந்தரக் காலங்கள் எப்போதெல்லாம் ஏற்படுகின்றதோ அப்போதெல்லாம் ஜாதகரின் உடலில் ரண காயங்கள் ஏற்படக் கூடும் என்பது ஜோதிட தாத்பரியம்.

இந்த அமைப்பு லக்னத்திற்கு 3 ஆம் இடத்தில் ஏற்பட்டால் ஜாதகரின் தாய்க்கும் 5 ஆம் இடத்தில் ஏற்பட்டால் ஜாதகரின் தகப்பனாருக்கும் 7 ஆம் இடத்தில் ஏற்பட்டால் ஜாதகரின் மனைவிக்கும் காயம் ஏற்படக்கூடும்.

ரணம் என்று பொதுவாகச் சொல்லும் போது திருமுடி முதல் திருவடி வரை எந்தப் பாகத்திலும் ரணம் எனச் சந்தேகம் வீழா வண்ணம் குறிப்பிட கிரகத்திற்கு குறிப்பிட்ட இடத்தில் ரணம் உண்டாகும் என்று கூறியிருக்கிறார்கள் பெரியவர்கள்.

உதாரணமாக லக்ன முதல் எண்ண வருகின்ற 6 ஆம்வீட்டுக்குடையவன் சூரியன் ஆயின் தலையில் காயம் ஏற்படும்.விருச்சிக லக்னத்தில் பிறந்த பையன் ஒருவனுக்கு பிறக்கும்போது சுக்ர திசை இரண்டாண்டு காலம் இருப்பு நின்றிருந்தது. ஒன்று ஆறுக்குடைய செவ்வாய் சூரியனுடன் சேர்ந்து எட்டாமிடத்தில் இருந்தான்.கன்னியில் இருந்து சனி தன் பத்தாம் பார்வையால் மிதுனத்தில் இருந்த சூரியன் செவ்வாயைப் பார்த்து விட்டான்.

சுக்கிரதிசை முடிந்து சூரிய திசை ஆரம்பிக்கும் காலத்தில் இந்தக் குழந்தையை மற்றொரு குழந்தை மாடியிலிருந்து தள்ளியதால் சிறுவன் உருண்டு கீழே விழுந்ததன் பயனாகத் தலையில் பலமான அடி விழுந்து சுமார் ஆறு மாத கால சிகிச்சைக்குப் பின் பையன் தேறினான். என்றாலும் அவனது இருபதாவது வயதிலும் தலையில் இந்த அடியின் அடையாளத்தை நான் பார்த்திருக்கிறேன்.

6 ஆம் வீட்டுக்குடையவன் செவ்வாயானாலும் சூரியனுடன் சேர்ந்து 8 ஆம் வீட்டில் இருந்தால் சூரிய திசையில் தலையில் ரண காயம் ஏற்படும் என்று ஜோதிட நூல்கள் எடுத்துக் கூறியபடி அனுபவத்தில் இந்த உண்மைச் சம்பவத்தை என்னால் காண முடிந்தது.

ஆறுக்குடையவன் சந்திரனானால் முகத்தில் ரணம் (குறிப்பான கன்னத்தில ரணம்) ஏற்படும்.

ஆறுக்குடையவன் செவ்வாயானால் கழுத்திலும் தோள்களிலும் ரணம் ஏற்படும். ஆறுக்குடையவன் குருவாக இருந்தால் தொப்புள், அடி வயிற்றில் ரணம் உண்டாகும்.

ஆறுக்குடையவன் சுக்ரனாக இருந்தால் ஜாதகருக்கு முறையே இடது கண்ணிலும் வலது கண்ணிலும் பார்வை குறையும். ஆறுக்குடையவன் சுக்ரன் எட்டாமிடத்திலிருந்தாலும் லக்னாதிபதியான சுக்ரன் 6,8 இடங்களிலிருந்தாலும் இந்தப் பலன் ஏற்படும்.

ஆறுக்குடைய கிரகம் சனியாக இருந்தால் ஜாதகரின் இடது. வலது பாகங்களில் எந்த நோயாவது இருந்து கொண்டே வரும்.

ஆறுக்குடைய சனி, லக்கினம், ஆறு அல்லது எட்டாமிடங்களிலிருந்தாலும் இந்தப் பலன்கள் ஏற்படும்.

ஆறாமிடத்தில் இராகு அல்லது கேது இருந்தால் உதட்டில் புண் ஏற்படுவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள்.இது இராகு-கேது ஆறாமிடத்தில் இருக்கும் போது அவர்களது தெசாபுத்தி அந்தரங்களில் ஏற்படுவதாகும்.

விற்றமின் சத்துக்குறைவாயுள்ள ஜாதகருக்கு வாய்ப்புண் ஏற்படுகின்றதென்று டாக்டர்கள் பி.காம்ப்ளெக்ஸ் ஊசியும் மாத்திரைகளும் கொடுப்பதை நாம் பார்த்திருக்கின்றோம்.

நல்ல சத்துணுவு உட்கொள்ளும் எந்த திசையிலாவது இராகு-கேது புத்தி, அந்தரங்கள் நடக்கும் போது கண்டிப்பாக வாய்ப்புண் ஏற்படும் என்பது தவிர்க்கமுடியாது. என்ன தான் பி.காம்ப்ளெக்ஸ், ஊசி மாத்திரை உட்கொண்டாலும் ஜோதிட ரீதியில் இவர்கள் காலம் முடியும் வரை வாய்ப்புண் அந்த ஜாதகருக்கு மாறுவதில்லை என்பதும் நாம் கண்ட அனுபவ சித்தாந்தம்.

மேடம், மிதுனம், கன்னி, விருச்சிக இராசிகளில் லக்னாதிபதி இருந்து செவ்வாய் அல்லது புதன் பார்வைக்குட்பட்டால் அந்த ஜாதகருக்கு ஏற்படும் கண் நோய் தவிர்க்க முடியாததாகும்.

மேடம், மிதுனம், கன்னி, விருச்சிக இராசிகளில் லக்னாதிபதி அமர்ந்து தன் பகைக் கிரகத்தால் பார்க்கப்பட்டாலும் மூல நோய், ஆசனக்கடுப்பு அல்லது ஆசன துவார ரணம் முதலியன ஏற்படும்.செவ்வாய், 6 ஆம் வீட்டில் இருந்தால் ஏற்படும் நோய்கள் பின்வருவனவாகும்.

கொடிய ஜீரணங்கள், உடலில் உஷ்ண கொப்பளங்கள், கொதிநீர் முதலியவை மேலே படுவதால் ஏற்படும் கொப்பளங்கள் தீப்புண், இரத்த நாளங்கள் வெடித்தல், அம்மை நோய், விஷப் பிரயோகம், ஆயுதங்களால் ஏற்படும் காயம், மூளைஜீரம் , குடலில் ஏற்படும் புண், குடலில் அரிப்பு, கேணியா , சொறி , சிரங்கு போன்ற சரும வியாதிகள், மலேரியா, இரத்தக் குழாய்களில் ஏற்படும் கட்டி, பெண்களானால் கருச்சிதைவு, அதிக வெயிலால் மரணம், சதை வாய்ப்பிடிப்புக்கள், நீர்சுருக்கு முதலியவை ஆகும்.

சனி 6 ஆம் இடத்தில் இருந்தால் ஏற்படும் நோய்கள் ஆவன, ஜலதோசங்கள், செவிடு, பல் நோய்கள், முது கெலும்புவியாதிகள், எலும்பு முறிவுகள், இரத்தக் குழாய்கள் வெடித்தல், ஆஸ்மா, மூளைச் சேகைக் கட்டிகள், தோல் வியாதிகள், புற்றுநோய், வாதநோய் முதலியன வாகும்.


northern PC PARK

021-222-0388 / 0777 570 124
info@pcpark.co
www.pcpark.co
#269E, PALALY ROAD, KANTHARMADAM, JAFFNA

3.02Dual core
G41 Intel chipset motherboard
2GB DDR3
500GB HDD
Samsung DVD writer
ATX casing
19" LED monitor
Optical mouse
Keyboard
Price 42,000.00

3.00pintum
G41 Intel chipset motherboard
2GB DDR3
500GB HDD
Samsung DVD writer
ATX casing
16" LED monitor
Optical mouse
Keyboard
Price 32,000.00

Core i3 Intel
G41 Intel chipset motherboard
2GB DDR3
500GB HDD
Samsung DVD writer
ATX casing
19" LED monitor
Optical mouse
Keyboard
Price 52,000.00

Core i5 Intel
G41 Intel chipset motherboard
2GB DDR3
500GB HDD
Samsung DVD writer
ATX casing
19" LED monitor
Optical mouse
Keyboard
Price 61,000.00

| | | | |
|---|---|---|---|
| Computer table | :- 2700 | Eview 16mp Webcam | :- 2500 |
| Four port wireless router | :- 5500 | 7.2 huawei antenna dongle | :- 5500 |
| Single port router | :- 3000 | UPS 600W (DCP) | :- 3800 |
| 8 port network switch | :- 2500 | HP Lesar Printer | :- 8900 |
| Web camera | :- 1300 | Conon Scanner | :- 6000 |

Woofer, Toner, Laptop cooling fan, Printer
Flash memory, Head Phone, Multi card reader, Scanner

அனைத்துவகையான மடி கணனிகள் மற்றும் கனணி உதிரிப்பாகங்கள் என்பவற்றை மலிவான விலையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.


# வீதி மின்விளக்குகளை பொருத்த கோரிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகர சபைக்குட்பட்ட வீதிகளில் வீதி மின் விளக்குகள் பொருத்தப்பட வேண்டுமென அப்பகுதி வாழ் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இரவு வேளைகளில் இவ்வீதியானது இருளில் மூழ்கி காணப்படுகின்றது. நீண்ட காலமாக மின்விளக்குகள் பொருத்தப்படாததால் பயணிப்பவர்கள் பல இடர்களைச் எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது யாழ்.மாவட்டத்தில் அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் வீதி விளக்கு விடயத்தில் எவரும் அக்கறையின்றி செயற்படுவதாக மக்கள் ஆதங்கமடைகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயங்களில் நடவடிக்கை எடுத்து வீதிபோக்குவரத்திற்கு இடைஞ்சல் ஏற்படுத்தாது வீதி மின் விளக்குகளை அமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.(ஸ்ரீ-2-10)

# அனர்த்த முகாமைத்துவ வேலைத்திட்டம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ வேலைத்திட்டம் தயாரிப்பது தொடர்பான கூட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி மன்னார் மாவட்ட செயலகத்தில் மன்னார் அரச அதிபர் என்.வேதநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் வேலைத்திட்டத்தினை ஐரோப்பிய ஒன்றிய நிறுவனத்தின் நிதியுதவியுடன் அனர்த்த முகாமைத்துவ நிலையமும் பிறற்றிக்கல் அக்ஸ்ஷன் நிறுவனமும் இணைந்து மேற்கொள்ளவுள்ளன.

இதில் சுனாமி, வெள்ளம், வரட்சி, கடல் வெள்ளம், கடல் அரிப்பு ஆகிய அனர்த்தங்களை குறைப்பதற்கும் தடுப்பதற்கும் தயார்ப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில்திணைக்களத் தலைவர்களும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைவர்களும் பங்கேற்கவுள்ளனர். (ஸ்ரீ-3)

# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை



# 2011 (ஆகஸ்ட்) மாதிரி வினாத்தாள் - 12

ஆசிரியர் :- எஸ்.ஏ.சந்திரபவன்,
கொழும்பு.


## பகுதி - I

**01 ஆம் 02 ஆம் வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள கூற்றுக் களுக்கு மிகப் பொருந்தும் படத்தினை தெரிவு செய்க.**

01) நீந்தும்
சேற்றில் உணவு தேடும்
நிலத்தில் முட்டையிடும்
கூட்டமாக வாழும்

1)  2)  3) 

02) தகவல்களை அறியலாம்
பாடல்கள் கேட்கலாம்
செய்தி அறியலாம்
படம் பார்க்கலாம்

1)  2)  3) 

**கீழே முதலில் கூட்டினுள் தரப்பட்டுள்ள சிறு வாக்கியங்களின் பொருத்தப்பாட்டினை அறிந்து, அவை எந்த வகையான சூழலுக்குரியவை எனத் தெரிவு செய்க.**

03) ⊙ மாணவன் ஓடி வருதல்
⊙ ஆசிரியர் நடந்து செல்லுதல்
⊙ வாகனம் வேகமாகச் செல்லுதல்
⊙ மாணவர்கள் விளையாடுதல்

1) பாடசாலைச் சூழல் 2) பாடசாலை மைதானம்
3) பிரதான வீதி

04) ⊙ வண்டுகள் பறந்து திரிதல்
⊙ பூக்கள் மலர்தல்
⊙ வண்ணத்துப் பூச்சி தேன் அருந்துதல்
⊙ அக்கா பூப்பறித்தல்

1) வயல் வெளி 2) பூந்தோட்டம் 3) வீட்டுத் தோட்டம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | 1 | ★ | 3 | ■ | ⊙ | (வட்டம் உள்ள முக்கோணம்) | 7 | 8 | 9 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| B | ★ | 2 | 3 | 4 | 5 | ⧗ | 7 |

**மேலே B அட்டையில் உள்ள (★) இவ்வுருவம் A அட்டையில் உள்ள அதே உருவத்துடன் பொருந்தும் வகையில் A அட்டையின் மேல் வைக்கப்பட்டது.**

05) B அட்டையின் ⧗ இவ்வுருவம் A அட்டையின் எத்தனையாம் இலக்கக் கூட்டில் பொருந்தும்?
1) 7ஆம் கூட்டில் 2) 8ஆம் கூட்டில் 3) 9ஆம் கூட்டில்



06) B அட்டையில் உள்ள 4 எனும் இலக்கக் கூட்டுடன் பொருந்தக் கூடிய A அட்டையின் உருவம் யாது?
1) ⊙ 2) ■ 3) (வட்டம் உள்ள முக்கோணம்)





**07 ஆம் 08 ஆம் வினாக்களில் ஐந்து சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஏனையவற்றுடன் தொடர்பு இல்லாத ஒரு சொல்லைத் தெரிவு செய்க.**

07) i) பயணம் ii) பூங்கா iii) மகிழ்ச்சி
iv) துக்கம் v) சுற்றுலா

08) i) கருமேகம் ii) வெள்ளம் iii) வெயில்
iv) குளிர்காற்று v) மழை

**09 ஆம் 10 ஆம் வினாக்களில் உள்ள உருக்களில் ஒன்று ஏதோ ஒரு பண்பின் அடிப்படையில் ஏனையவற்றிலிருந்து வேறுபடுகின்றது. அதனைத் தெரிவு செய்க.**

09) 1)  2)  3)  4) 


10) 1)  2)  3)  4) 

**கீழ்வரும் அட்டவணையை அவதானித்து 11ஆம் 12ஆம் வினாக்களின் விடைகளைத் தெரிவு செய்க.**





| தரம் 5(பிரிவுகள்) | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|
| A - பிரிவு | 18 | 21 |
| B - பிரிவு | 20 | 19 |
| C - பிரிவு | 16 | 22 |
| D - பிரிவு | 21 | 20 |
| E - பிரிவு | 18 | 23 |

11) ஆண்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பிரிவுகளை ஒழுங்குபடுத்திய விடை யாது?
1) DBCEA 2) CEABD 3) AECBD


12) ஆண்களை விட பெண்கள் அதிகமாக உள்ள பிரிவுகளைக் கொண்ட விடை யாது?
1) ACE 2) BDE 3) AED

13)  அருகே காணப்படும் உருவில் உம்மால் அவதானிக்கக் கூடிய சதுரங்களின் எண்ணிக்கை யாது?
1) 7 2) 9 3) 12




14) இப்பொழுது நேரம் 12மணி. இதிலிருந்து நிமிட முள் ஒருமுறை சுற்றி மீண்டும் இலக்கம் 12 ஐ அடைவதற்குள் அது மணித்தியாலமுள்ளை எத்தனை தடவை சந்தித்திருக்கும்?
1) ஒரு தடவையும் அல்ல 2) ஒரு தடவை
3) இரு தடவை

15)  அருகே வெட்டி விரிக்கப்பட்டுள்ள கடதாசி அலங்காரத்திற்குரிய மடித்து வெட்டிய நிலை யாதாக இருக்கும்.
1)  2)  3) 

**16ஆம் 17ஆம் வினாக்களுக்கு கீழுள்ள உருக்களை அவதானித்து விடை தருக.**



A , B , C , D , _ _ ?

16) மேலுள்ள நான்கு உருக்களினதும் போக்கின் அடிப்படையில், அடுத்து வரக்கூடிய உரு பின்வருவனவற்றில் எது?
1)  2)  3) 

17) நிழற்றாத பகுதியின் பின்னம் $^{8}/_{12}$ ஐக் கொண்ட உரு மேலுள்ள A, B, C, D ஆகியவற்றில் எது?
1) A 2) B 3) D

(14ஆம் பக்கம் பார்க்க)

# திருகோணமலை - சென்னை கப்பல் சேவை ஒத்திவைப்பு

சென்னைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான கப்பல் சேவை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. சென்னையைச் சேர்ந்த அமெட் கப்பல் நிறுவனம் குறித்த சேவையை ஆரம்பிக்க திட்டமிட்டிருந்தது.

இலங்கை மற்றும் இந்திய அரசாங்கங்கள் அதற்கான உரிய அனுமதிகளை இதுவரை வெளியிடாத நிலையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குறித்த கப்பல் சேவையின் இலங்கையின் முகவர் ஜெனரல் நலின் பீரிஸ் இந்தத் தகவலை வெளி யிட்டுள்ளார்.

அமெட் மெஜஸ்டிக் என்ற சொகுசு கப்பலைக்கொண்டு கடந்த 4 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவிருந்த குறித்த பயணிகள் கப்பல் சேவை இதுவரை ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, ஏற்கனவே இடம்பெறுகின்ற தூத்துக்குடி -கொழும்பு கப்பல் சேவை மற்றும் இராமேஸ்வரம்- தலைமன்னாருக்கு இடையிலான கப்பல் சேவைகளுக்கு மாத்திரம் இரு நாட்டு அரசாங்கங்களும் அனுமதி வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுள்ளது.

எனினும், திருகோணமலை -சென்னை கப்பல் சேவை தொடர்பில் இதுவரை•ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-4)

# சவுதிஅரேபியாவில் சித்திரவதைக்குள்ளாகி பார்வையிழந்த பெண் குறித்து விசாரணை

சவுதிஅரேபியாவில் சித்திரவதைக்குள்ளாகிய வாகரை பிரதேச பணிப்பெண்ணொருவர் கண்கள் பார்வையிழந்ததாக கூறப்படும் சம்பவம் குறித்து இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

குறித்த பெண்ணின் உறவினர்கள் இது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசாவின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பொது முகாமையாளரை பணியகத்தில் சந்தித்து இச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் நடைபெறவேண்டும் எனவும் இப்பணிப் பெண்ணுக்கு நஷ்டஈடும் நிவாரணமும் வழங்கப்படவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்ததுடன் இவ்விடயங்கள் தொடர்பாக அவரது கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

இது தொடர்பாக விசாரணை நடைபெற்று விசாரணையின் அடிப்படையில் நஷ்டஈடு நிவாரணம் வழங்கப்படும் என்று பொது முகாமையாளர் உறுதியளித்துள்ளார்.

இதனையடுத்து தற்போது கொழும்பு தேசிய கண் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் குறித்த பெண்ணிடம் விசாரணை மேற்கொண்டுள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரிகள் அவரது வாக்கு மூலங்களை பதிவு செய்துள்ளனர்.

(ஸ்ரீ-2)

# இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை 162 மில்.டொலர்களை செலுத்துமாறு உத்தரவு

## லண்டன் நீதிமன்றம் தீர்ப்பு

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஸ்டான்டட் சாட்டெட் வங்கிக்கு 162 மில்லியன் டொடல்கள் மற்றும் அதற்குரிய வட்டியையும் செலுத்த வேண்டும் என்று லண்டன் நீதிமன்றம் ஒன்று நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

எரிபொருள் கொள்வனவு மற்றும் விலைகளைக் கட்டுப்படுத்தல் தொடர்பில் இலங்கை அரசாங்கமும் வெளிநாட்டு வங்கிகளும் செய்து கொண்ட ஹெட்ஜிங் உடன்படிக்கையின்படியே இந்த உத்தரவு வழங்கப்பட்டது.

லண்டன் நீதிமன்றத்தின் இந்த உத்தரவு குறித்து தமக்கு இன்னும் தெரியவில்லை என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

எனினும் இந்தத் தீர்ப்பு தமக்கு மகிழ்ச்சியளிப்பதாக ஸ்டான்டட் சாட்டெட் வங்கி தெரிவித்துள்ளது.

நீதிமன்ற தீர்ப்பின் போது கடந்த 2007 ஆம் ஆண்டு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வருடம் ஒன்றுக்கு கொள்வனவு செய்த 2 பில்லியன் டொலர்கள் பெறுமதியான 26 மில்லியன் பரல் எரிபொருள் தொடர்பில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஸ்டான்டட் சாட்டெட் வங்கிக்கு 161 733 500 டொலர்கள் மற்றும் வட்டியை செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப் பட்டது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் வெளிநாட்டு வங்கிகள் இரண்டும் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி தமக்கு பணம் செலுத்த வேண்டும் என்று வங்கிகள் கோரிய போதும் அதனை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மறுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)

# சீபா உடன்படிக்கை குறித்து பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையில் பேச்சுவார்த்தை

சீபா உடன்படிக்கை தொடர்பில் பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையில் பேச்சு வார்த்தைகள் நடத்தப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

அடுத்த மாதம் கொழும்பில் இந்தப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பாகிஸ்தான் -இலங்கை பொருளாதார கூட்டமைப்பு அமர்வுகள் அண்மையில் நடைபெற்றன.

சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடுவது குறித்தும் இரு தரப்பினரும் பேச்சுவார்த்தை நடத்த உள்ளனர். இரு தரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ளும் நோக்கில் அடிக்கடி பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு இரு தரப்பினரும் இணக்கம் வெளியிட்டுள்ளனர்.

(ஸ்ரீ-4)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## தாமரை

**Botanical Name: Nelumbo nucifera**
**Family: Nymphaeaceae**
**Engl: Sacred Lotus**
**Sinh: Nelun**

இது மிகவும் அழகான நீர்த்தாவரமாகும். தரையோடு நீருக்குள் படரக்கூடிய மட்டநிலத் தண்டைக் கொண்டது. இலைகள் வட்டவடிவானவை. நீளமான இலைக்காம்புகளைக் கொண்டது. மென்மையானதாக அல்லது சிறிய முட்களைக்கொண்டது. பெரிய பூக்கள் வெள்ளை அல்லது றோஸ் நிறத்தில் காணப்படும். 5-10 செ.மீ விட்டமுடைய மெது மெதுப்பான (Spongy) பழங்ககளைக் கொண்டது. பூக்களை மாசியிலிருந்து ஆவணிவரை அவதானிக்கலாம்.

### பரம்பலும் இனவிருத்தியும்


சீனா, ஜப்பான், இந்தியா போன்ற நாடுகளைத் தாயகமாகக் கொண்டது. குளங்கள், நீர்த்தாங்கிகளில் வளரக்கூடியது. பொதுவான மட்டநிலத்தண்டுகள் (Rizome) மற்றும் விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம்.

மட்டநிலத்தண்டுகளை சிறுதுண்டுகளாக்கி பங்குனி, சித்திரை மாதங்களில் நாட்டி ஐப்பசி மாதம் வரை நீர்மட்டத்தை போதியளவாக பேணவேண்டும்.

வெள்ளை, சிவப்பு நிற மட்டநிலத் தண்டுகள் காணப்படும். 60-120 செ.மீ நீளமும் 6-9 செ.மீ விட்டமும் உடையதாக சந்தைப் படுத்தப்படும். உடன் மட்ட நிலத்தண்டுகளை வெட்டும்போது வழுவழுப்பான (mucilaginous) சுரப்பு காணப்படும். உள்ளே நார் போன்ற அமைப்புகளும் காணப்படும்.

### மருத்துவப் பயன்கள் :

✷ சதைப்பிடிப்பான தாமரைக்கிழங்குகளை சேகரித்து கழுவி சிறுசிறு துண்டுகளாக நறுக்கி நிழலில் உலர்த்தி தூளாக்கி வைத்துக்கொள்ளவும். இதில் 4-8 கிராம் அளவு



எடுத்து 200 மில்லி வெந்நீரில் கரைத்து கஞ்சி தயாரித்து குடிக்க உடலிற்கு பலத்தையும் குளிர்ச்சியையும் கொடுக்கக்கூடியது.

✷ இதன் உடன் தமாரைக்கிழங்குகளை சிறுசிறு மெல்லிய துண்டுகளாக வெட்டி நெய்யில் பொரித்து வளரும் குழந்தைகளுகு chips ஆக பயன்படுத்திவர ஆரோக்கிய உப உணவாக அமைவதுடன் உடலின் உஷ்ணத்தை குறைக்கும் தன்மை வாய்ந்தது.

✷ தாமரை மலர்களிலிருந்து தேனீக்களால் தயாரிக்கபடும் தேன் ஆனது, உடலுக்கு பலத்தை கொடுப்பதுடன் கண்நோய்களுக்கும் சிறந்த தேனாகும்.

✷ வட்டக்கடிக்கு இதன் மட்டநிலத்தண்டுகளை கழுவி சுத்தம் செய்து பசைபோல அரைத்து பூசலாம்.

✷ தாமரை இலையில் உண்பதால் உடலுக்கு வெப்பத்தை கொடுக்கும். வாத நோய்களை சீர்ப்படுத்தலாம். எனவே, மழை காலங்களில் தாமரை இலையில் புசிக்கலாம்.

✷ தாமரைப்பூவின் மகரந்தப் பொடியுடன் சர்க்கரையும் தேனும் கலந்து அதிகாலையில் சாப்பிட்டு வந்தால் ஆண்மைக்குறைவு நீங்கும். அலித்தன்மை உள்ளவர்கள் அதிலிருந்து விடுபடவும் இதனை சாப்பிட்டு வரலாம்.

✷ தாமரை விதைகளை உடைத்து சாப்பிட்டுவர உடலுக்கு பலத்தை கொடுப்பதுடன் ஆண்மையை பெருக்கும்.

✷ தாமரை விதைகளை பொடித்து அரித்து வைத்துக்கொண்டு 1-2 கிராம் உட்கொள்ள உடல்வலிமை உண்டாகும்.

✷ விதையை தேன்விட்டரைத்து நாக்கில் தடவிவர விக்கல் தணியும்.

### தாமரைப்பூ சர்பத்:

தாமரைப்பூவிதழ் 1/2 கிலோ 2 லீற்றர் நீரிலிட்டுக் காய்ச்சி 400 மில்லி லீற்றராக கசாயம் ஆனதும் கசக்கி வடிகட்டி பிழியவும். 1/2 கிலோ சர்க்கரை சேர்த்து காய்ச்சி பாகு பதத்தில் இறக்கிக் கொள்ளவும்.

10 மில்லிலீற்றர் முதல் 60 மில்லி லீற்றர் வரை நீர்கலந்து சாப்பிடவும். இருதயத்தை பலப்படுத்தும் தாமரைப்பூவிதழ்களுக்கு பதில் தாமரை மொட்டை காம்பு நீங்கி உபயோகிக்கலாம்.

✷ வெண்தாமரை பூவின் இதழ்களை மட்பாண்டத்தில் உதிர்த்துப் போட்டு 200 மில்லி தூய்மையான நீரை விடவேண்டும். நீர் அரைவாசியாக குறைந்ததும் இறக்கி வடிகட்டி ஒருவேளைக்கு 60 மில்லி அளவு காலை, நண்பகல், மாலை என 3 வாரங்கள் தொடர்ந்து அருந்தி வந்தால் மூளைக் கூர்மை அடைவதுடன் இருதயத்தையும் பலப்படுத்தும்.

✷ ஏராளமான வெண்தாமரை பூவின் இதழ்களை மட்டும் நிழலில் உலர்த்தி அந்த காய்ந்த இதழ்களுள் கைப்பிடி அளவு எடுத்து ஒரு பாத்திரத்தில் இட்டு கொதிக்கும் நீரை அதில் விட்டு 15 நிமிடநேரம் மூடிவைத்து விடவேண்டும். பின்பு வடித்து அதனுடன் ஏலரிசித்தூள் 2 கிராம் சேர்த்து ஆடைநீக்கிய பாலுடன் காலை, மாலை தயாரித்து அருந்த உயர்குருதி அமுக்கம் குணமடைவதுடன் இருதயமும் பலப்படும்.

### தாமரைப்பூ கோப்பி


நன்கு உலர்ந்த தாமரைப்பூவிதழ்கள், 500 கிராம் ஏலக்காய், தேவையான 25 கிராம் சர்க்கரை அல்லது வெல்லம், தேவையான அளவு தாமரைப்பூவிதழ்களையும் ஏலரிசியையும் பொடித்து அரித்து வைத்துக் கொள்ளவும். 200 மில்லி பாலுக்கு தேவையான அளவு சர்க்கரை சேர்த்து 2 தேக்கரண்டி தூள் சேர்த்து கோப்பி தயாரித்து அருந்தவும். தினமும் இரவில் பருகிவர இருதய படபடப்பு, வெள்ளைபடுதல் ஆகிய நோய்கள் நீங்கும்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம் கைதடி

# கலாநிதி சோ.கிருஷ்ணராஜா நினைவுப் பேருரை-2011

16

## பல்வகைகள் ஒன்று சேர்தல்
## [Assemblage of Multiplicity]


சோ. கிருஷ்ணராஜா

**சமீர் அமீனின் மைய விளிம்புக் கோட்பாடு**

சமுகச் சமவீனம் சம்பந்தமான சிந்தனைகள் 17ஆம் 18ஆம் நூற்றாண்டுகளில் ஆரம்பமாகிவிட்டன. லியோன்ட்ரொஸ்கி சமுகச் சமவீனத்தை irregularity of history என்று வர்ணித்தார். 20ஆம் நூற்றாண்டில்



கலாநிதி மௌனகுரு
யாழ் பல்கலைக்கழகம்

இச் சமமின்மைக் கோட்பாடு முக்கியம் பெறலாயிற்று. இச்சிந்தனை உலக நாடுகள் வளர்ச்சி அடைந்த நாடுகள் மூன்றாம் உலக நாடுகள் எனப் பிரித்துப் பார்த்தது. பிரான்ஸ் பெனொன், அமிர் கப்ரால் போன்றோர் இதில் முக்கியமானவர்கள்.

பொருளியல் கோட்பாட்டில் அதனைப் புகுத்தி ஆராய்ந்தவர்களுள் சமீர் அமீன் முக்கியமானவர். அவர் நாடுகளை மைய நாடுகள் , விளிம்பு நாடுகள் எனப்பிரித்து மையநாடுகளான வளர்ச்சியடைந்த நாடுகள், விளிம்பு நிலை நாடுகளான வளர்ச்சியடையா நாடுகளை சுரண்டு வதை விபரித்தார். இச் சமமின்மை அரசியல் - சமூக விடயங்களில் மாத்திரமல்ல: கலை, இலக்கிய, பண்பாடுகளிலும் காணப்படுகின்றன என்பார் ஒருசாரார்.

மானிடவியல், சமூகவியல் வளர்ச்சியினால் பண்பாட்டில் இச்சமமின்னையைக் காணும் முயற்சிகள் 19ஆம் நூற்றாண்டுகளில் நடந்தன.

இதன் விளைவாக: பிரதான பண்பாடு,உபபண்பாடு, என அழைக்கும் வழக்கம் உண்டாயிற்று.


எம்.என்.ஸ்ரீனிவாசன் போன்ற சமுக வியலாளர் இப்பிரிப்பை இந்தியப் பண்பாட்டுக்கு யாந்திர ரீதியாகப் பொருத்திப் பார்க்க ஆரம்பித்தனர். இதனால் ஆரியப் பண்பாட்டை பிரதான பண்பாடென்றும்,உள்ளூர்ப்பண்பாடுகளை உப பண்பாடு என்றும் கூறும் மரபு உருவானது.

சமீர் அமினின் கோட்பாட்டின் அடிப்படையாகக் சோழர் காலப் பொருளியல் அமைப்பை ஆராய்ந்த பேர்ட்டன் ஸ்ரைன்; சோழர் ஆட்சி முறையின் பிராந்திய ரீதியான ஒழுங்கு முறைமை

1. மத்திய பகுதி
2. இடையிட்ட பகுதி
3. எல்லைப் பிராந்தியம் எனப் பிரித்தார்.

மத்தியில் அதிகாரம் வலிமையாகவும், இடையிற் குறைந்தும் எல்லையில் மிக மிகக் குறைந்தும் இருக்கும் என்றார் இவர்.

**19 ஆம் நூற்றாண்டின் பின் ஈழத்தமிழர் மத்தியில் உருவான கலை - இலக்கியப் போக்குகளை தெரிந்தெடுக்கப்பட்ட சிலருக்கூடாகப் புரிந்து கொள்ளல்**



மையம் பிரதானமாக்கப்பட்டது
விளிம்பு ஓரம் கட்டப்பட்டது.

மையத்திலிருந்தோரிடம் ஆட்சி அதிகாரமும், பண்பாட்டு அதிகாரமும் இருந்தன. ஆட்சி அதிகாரம் அரசரான வேளாளரிடமும் பண்பாட்டதிகாரம் அவர்கட்கு ஆலோசனை வழங்கிய பிராமணரிடமும் இருந்தன.

இடைநிலையில் வாழ்ந்தோர் மையத்தோடு இணைந்தும் பிணைந்தும் முரண்பட்டும் வாழ்ந்தனர்.

விளிம்பு நிலையிருந்தோர் இடைநிலையில் வாழ்ந்தோரின் ஏவலார்களாகவும், அடிமைகளாகவும் ஊரின் தூரத்தில் வைக்கப்பட்டனர் .

மையத்தில் வாழ்ந்தோருக்கு வசதி வாய்ப்புக்கள் அமைந்தன. இடைநிலையிலிருந்தோர் அதற்காகப் போராடினார். விளிம்பிலிருந்தோர் எதுவும் பெறாமல் ஒதுக்கப் பட்டிருந்தனர்.

(தொடரும்)

# நோய்பரப்பும் நுளம்புகளில் ஆய்வு

06

**அலேரியாக்காவியான....**

முன்பு கூறபப்பட்ட்ட இசைவாக்கங்கள் வராதிருப்பதற்கு பின்வரும் வழிமுறைகளைக் கைக்கொள்ளலாம்.

1. பரந்தளவில் கிருமி நாசினிகளைப் பாவிக்கக்கூடாது. பாவிப்பதனால் நோயை அறவே இல்லாது ஒழிக்க முடியும் என்றால் மட்டும் பரந்தளவில் பாவித்தல்.

2. கிருமி நாசினிகளை மாற்றுதல் இவற்றின் ஆகக்குறைந்த தாக்கு திறன் வரையறுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

3. மற்றைய சுகாதாரத் திட்டங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்ட கிருமி நாசினி ஏற்புடைய இடத்துக்கு மட்டும்.

4. காவியின் நோய்பரப்பும் தன்மை குறைவாகவும் இசைவாக்கத்தன்மை குறைவாகவும் இருக்கும் படசத்தில் தாக்குதிறனை இருமடங்காக்குதல் ஆனால், இது இசைவாக்கத் தன்மையை ஊக்குவிக்க வழிகோலும்.

5. கலப்புக்கிருமி நாசினியைப் பாவுத்தல்.உ-ம் வீட்டு ஈக்கு முதலில் கமக்சினையும் - மலத்தியனையும் கலந்து பாவித்தமை இசைவாக்க இனத்துக்கு எதிராக பாவித்தமை.

6. புதிய விதமான கிருமி நாசினியை இனங்காணல், நடைமுறையில் உள்ளது பயனற்றுப்போகும் நிலையில்.

7. ஆகக் குறைந்த அடிப்படை ஆய்வுகள் உயிரியல் இரசாயன புரதத்தில் மற்றதைப் பிரதானமாக வைத்து இனங்காணப்படுதல் வேண்டும்.

ஆட்களில் நுளம்புகளக் கடிக்க விட்டு முன்னிரவிலோ,பின்னிரவிரோ அன்றி முழு இரவிலோ பிடித்துப் பரிசோதிப்பதன் மூலம் மலேரியா காவி ஒரு மனிதனை ஒரு மணித்தியாலத்துக்கு எத்தன கடிக்கிறது என்பதைக் கணக்கிடுவதன் மூலம் மலேரியா பரப்பும் வேகத்தினைக் கணக்கிட்டு அதற்கு ஏற்ற கட்டுப்பாட்டு முறையைக் கடைப்பிடித்தல். இது காவியைக் கண்டுபிடிப்பதற்கான ஆரம்பப் பரிசோதனை. அடிப்படை விபரம் சேகரிக்கையில் மட்டும் இதன்மூலம் நுளம்பு முன்முட்டை போட்டதா இல்லையா என்பதையும், வித்துச்சிற்றுயிர் உமிழ் நீர்ச்சுரப்பியில் உண்டா என்பதையும் கண்டு பிடிக்கலாம்.


உ-ம் 1. ஒரு மனிதனை ஒரு மணித்தியாலத்துக்கு ஒரு நுளம்பு கடித்தால் சுமுக நிலை.

2. ஒரு மனிதனை ஒரு மணித்தியாலத்துக்கு - 2,5 நுளம்புகள் கடித்தால் நோய்பரம்பல்

3. ஒரு மனிதனை ஒரு மணித்தியாலத்துக்கு 6,10 நுளம்புகள் கடித்தால் நோய் பரம்பல் உச்சநிலை.

**மலேரியா காவியின் வயதை அறிவதற்காக அதன் சூலகம் முன் முட்டை போட்டதா இல்லையா என்பதைப் பரிசோதிப்பதற்காகத் துண்டாடப்பட்ட நிலை**

ஒரு தடவைதானும் முட்டை இடாதசூலகம்




**குடம்பிப் பரிசோதனை**

இது ஒரு பிரதேசத்தின் நுளம்பின் அடர்த்தியைக் கொண்டு அப்பிரதேசத்தில் முக்கியமாக மலேரியா காவியான அனோபிலஸ் கியூலிசிபேசிஸ் நுளம்பின் குடம்பியை கணக்கிடுவதன் மூலம் நோய் பரம்பல் நிலையை கணக்கிடலாம்.

உ-ம் ஒரு கரண்டிக்கு ஒரு குடம்பி அல்லது இரண்டு குடம் பிகள் தென்பட்டால் மலேரியா காவியின் அடர்த்தி குறைந் விட்டது என்பதாகும். 2-3 சாதாரண நிலை, 3-4 அடாத்தி உயர்வதன் அறிகுறி, 4-5 அடர்த்தியின் உயர்வு உறுதி, 5 இற்கு மேற்பட்டால் அதிஉயர் அடர்த்தி கட்டாயம் கட்டுப்பாட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

Dr ம.இராசதுரை,
இம்பர் சிட்டி,
பருத்தித்துறை.

**மாட்டு வலைக்கூட்டில் நுளம்புகள் சேகரித்துப் பரிசோதனை**

இப்பரிசோதனையில் மாட்டை நுளம்பு வலைக்கூட்டினுள் விட்டு அதிகாலை 6 மணிக்கு முன்பு சேகரித்தப் பரிசோதிப்பதன்மூலம் அவ்வப்பிரதேசத்தில் தென்படும் சகல விதமான அனோபிலஸ், கியூலெக்ஸ நுளம்புகளை இனங்காணவும் அவையின் அடர்த்தி ஒரு கூட்டிற்கு எவ்வளவு எனவும் கணக்கிடல்

(தொடரும்)

# ஆசிரியர் நியமனம் பெறும் அழகியல் பட்டதாரிகள்

நேற்றைய தொடர்ச்சி...

### பரத நாட்டியம்

செல்வி.சுபத்திரா பரமானந்தம் (முள்ளியவளை), செல்வி. சியாமளா சின்னராசா (நவாலி வடக்கு, மானிப்பாய்),திருமதி கஜேந்திரபிரசாத் வசந்தினி(புத்தூர் மேற்கு), திருமதி பிரபாசன் சங்கீதா (புகையிரத நிலைய வீதி கோண்டாவில்), வியாஜினி இராசசிங்கம் (நீர்வேலி தெற்கு), அனற்நிறா ஸ்ரான்லி (இல.171, வேம்படி வீதி), று.ர்.ஆ.டி.விதாரண (உடவெல ்வத்த, தம்பதெனிய)

### சித்திரமும் வடிவமைப்பும்

சண்முகம் சிவகுமார்( மீசாலை மேற்கு), மோசஸ் ஷாந்தன் சத்தியகீர்த்தி( அரியாலை மேற்கு), இரத்தினம் ரனேசன்( நாவலர் வீதி அருளப்பு தேவசுதன் (நெடுந்தீவு மத்தி), சின்னராசா டேவிட் ஜெயகுமார் (அரசடி வீதி கட்டுடை), வேலுப்பிள்ளை வேலவன் (சரவணை மேற்கு),நடராசா செல்வகுமார் (அராலி தெற்கு), நடராசா சிவகுமாரன் (மட்டுவில் வடக்கு), ஞானானந்தன் கயூரன் (வைத்திய சாலை வீதி), சிறீனிவாசன் ஜெயசீலன் (சுதுமலை வடக்கு), செல்வி சித்திரா வீரகத்தி (முகாம் வீதி, ஊர்காவற்றுறை), செல்வி சிறிகிரிஸ்சாந்தி குமாரசாமி( நாவலர் வீதி, முழங்காவில்), தங்கன் முருகதாஸ்சன் (சுன்னாகம் தெற்கு)

திருமதி ஜெயராம் சிவதர்சினி (நாயன்மார்கட்டு நல்லூர்), திருமதி சத்தியசீலன் ஜெயமதி ( கைதடி மேற்கு), தங்கராஜா தார்மீகன் ஆவரங்கால் கிழக்கு), நடேசமூர்த்தி தயாபரன் (உரும்பிராய் தெற்கு), செல்வி நிஷியந்தி தங்கநாதன்( நவாலி தெற்கு), சங்கரப்பிள்ளை பத்மஜெயன் (மட்டுவில் வடக்கு), செல்வி ஸியாமினி கந்தையா (கொக்குவில் மேற்கு), கணபதிப்பிள்ளை முகுந்தன் உரும்பிராய் வடக்கு),ஜேம்ஸ் தோமஸ் ஸிம்சன் (மூளாய் வீதி, சுண்டுக்குளி), தர்மதாஸ் சுமன் (அம்பிகாபதி வீதி, சங்கானை), திருமதி ஜெகசுதன் சுகிந்தா( நொத்தாரிஸ் வீதி, அரியாலை)

வெற்றிவடிவேல் இராஜேந்திரன் தீருவில் வீதி, வல்வெட்டித்துறை), வைத்திலிங்கம் தர்சன் ( துன்னாலை தெற்கு) சுப்பிரணமணியம் கிருபாகரன்(மீசாலை மேற்கு), செல்வி ஜனனி செல்வநாதன் (விசுவத்தானை வீதி, வடலியடைப்பு), சிவலோகநாதன் ஐங்கரன் (ஐயனார் கோவில் வீதி, சுன்னாகம்), குகநேசன் குகதாசன்( வட்டு கிழக்கு), கந்தசாமி கோபி( ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு), கந்தசாமி ரதீஷன்( மட்டுவில் தெற்கு), அம்பிகைபாகன் மதனராஜ் (ஏழாலை கிழக்கு), இராசலிங்கம் கஜேந்திரன்( பாடசாலை வீதி, சங்கரத்தை), சிவசுப்பிரமணியம் யொயானந்தன் ( புதுவளவு,சுன்னாகம்), பஞ்சநாதன் ராகுலன் (சிங்கம் வீதி, உடுவில்), பன்னீர்ச்செல்வம் செந்திவேல் (ஈவினை தெற்கு, புன்னாலைக்கட்டுவன்), இராமலிங்கம் திருச்செல்வம்(முள்ளானை, இளவாலை), தேவேந்திரன் கருணாகரன் (சேர் பொன் இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்), மார்க்கண்டு செல்வதாஸ் (இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி), செம்பலிங்கம் ஜெகன்(புலிமச்சிநாதிகுளம், மாங்குளம்), புனிதநாதன் சுஜீப்குமார்(2 ஆம் வட்டாரம், நயினாதீவு), ஜெயபாலன் பிரதீபன் (கதிரவேற்பிள்ளை வீதி, தம்பசிட்டி), சொக்கலிங்கம் மோகனராஜா (இல-47, புதிய வீட்டுத் திட்டம், நாகர் இருப்பைக்குளம்)

திருமதி சதீஸ்குமார் திவ்வியா ( நீர்வேலி மேற்கு), வேலாயுதம் பவசயந்தன் (வல்வை வீதி, தொண்டைமானாறு), ஞானானந்தம் ஞானசொரூபன் (இணுவில் மேற்கு), நற்குணம் றமணன்( இன்பர்சிட்டி பருத்தித்துறை), செல்வி கணேசன் ஒலிவற் தாரணி (றக்கா வீதி, சுண்டிக்குளி), உதயகுமார் கஜேந்திரன் (சின்னப்புதுக்குளம் வவுனியா), ஜெகதீஸ்வரக்குருக்கள் செந்தூரா (நுணாவில் மேற்கு), [illegible]ஸ்வரன் காண்டீபன்( குளப்பள்ளம் வீதி, சின்னப்புதுக்குளம்)

தூ[illegible]ரைசிங்கம் குமாரநாதன் (பாலாவி வட[illegible] கொடிகாமம்), செல்வி தர்சினி கனகராசா( திருநாவற்குளம், தாண்டிக்குளம்), திரவியநாயகம் தவகுமார் (துலாக்கட்டு வதிரி), அந்தோனிதாஸ் தலிமா (எமில்நகர்), தில்லைநாயகம் ஜெரிமில்டன்(மத்தியூஸ் வீதி), நந்தகோபால் சிவகுமரன்(பத்திரகாளி கோவில் ஒழுங்கை), செல்வராசா றீகன் (நவாலி தெற்கு),தனபாலசிங்கம் சுலக்ஷன் (கந்தர்மடம்), பரமேஸ்வரன் இராகுலன் (கோண்டாவில் கிழக்கு),நிரூபறாஜ் சண்முகம் (முள்ளியவளை),திருமதி சந்திரராசா சிவதர்சினி (அல்வாய், வட மேற்கு)

திருமதி கீர்த்தி சிங்கன் சாந்தினி (கே.கே.எஸ் வீதி), அருமைநாயகம் மயூரன்(சங்கானை), சுந்தரமூர்த்தி விஜயாலயன் (ஓட்டுமடம் வீதி), தேவராசா கஜேந்திரன்(குமாரபுரம்), சுந்தரம்பிள்ளை இரகுராகவன் (கோவில் வீதி), சொக்கையா ரவிசங்கர்(சுன்னாகம் தெற்கு), நடராசா புலேந்திரகுமார் (இணுவில் தெற்கு), செல்வி துஜிபா துரைரெத்தினம்(உரும்பிராய் தெற்கு),குகராஜா தயாமதி(நீர்வேலி வடக்கு), நவரத்தினம் பிரசாந்தன் (இராமநாதபுரம்), திருமதி குணசீலன் சுனீத்ரா (அரியாலை மேற்கு),செல்வி அனுஷியா யோண்பப்ரிஸ்ற் (சாவற்காடு),செல்வி பிரவீணா பாலச்சந்திரன் (இணுவில் மேற்கு),திருமதி தவரூபன் டெனிவா அஜந்தி (இருபாலைச்சந்தி), கணபதிப்பிள்ளை நிஷாந்தன் (கரணவாய் மேற்கு), சிவபாலன் ஜெயகாந்தன் (நீர்வேலி மேற்கு), ஸ்ரீசரவணபவன் ஸ்ரீதினேஸ்குமார் (தொல்புரம் கிழக்கு)

இராமச்சந்திரன் வினோதராஜ் (கட்டைப்பிராய்),சிவஞானம் ஞானேந்திரன் (பொலிகண்டி),இரவீந்திரன் ஜனார்த்தனன்( மானிப்பாய் மேற்கு), பிரான்சிஸ் றொனிடிமெல் (எமில்நகர்), அந்தோனி ஞானசேகரன் (டேவிற் றோட்),திருமதி ஸார்மிலா உமாகரன் (கொக்குவில் கிழக்கு),நடேசமூர்த்தி நவநீஸன் (இணுவில் கிழக்கு),வைகுந்தராசா திலீபன் (மட்டுவில் கிழக்கு), இராசதுரை கஜேந்திரா (நீர்வேலி மேற்கு),ஆறுமுகம் ஜெயராஜன் (கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்), தேவதாசன் டொனால்ட் ரமேஸ் றெஜினோல்ட் (முருங்கன் பிட்டி, மன்னார்)

சிவனடியான் ஸ்ரீவெங்கடேஷ் (கொக்குவில் கிழக்கு), செல்வி.ரஜிதா வைகுந்தவாசன் (கொக்குவில் கிழக்கு), செல்வி.பாலகிருஷ்ணன் ஸ்ரீதேவி (சிதம்பரபுரம், வவுனியா), திருமதி பிரபாகரன் சுதாசினி (நவாலி தெற்கு, ம[illegible]ப்பாய்), சிற்சபேசசர்மா செந்தூரன் (இணுவில [illegible]க்கு), இரத்தினசிங்கம் அமரகுமார்(அச்செழு வடக்கு), செல்வி. பாலசுப்பிரமணியம் பிரேமரஞ்சனா ( கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்), வைகுந்தநாதன் காகுந்தன் (கட்டப்பிராய், யாழ்பாணம்), பாலசிங்கம் ஞானேந்திரன் (இணுவில்)

பழனிநாதன் பிரசாத் ( கரணவாய் வட மேற்கு), அன்றூஸ் சுதர்சன் (நெல்லியடி வடக்கு), அரியதவம் மனோகரன் ( வட்டு. தென்மேற்கு), புவனேந்திரன் மகேசன் (ஜெயந்திநகர், கிளிநொச்சி), இராசையா ரவீஸ்வரன்( அளவெட்டி வடக்கு),செல்வி கிறிஸ்ரின் மனோரஞ்சன் (கோப் பாய் மத்தி, கோப்பாய்)

### நாடகமும் அரங்கியலும்

செல்வி விஷ்ணுப்பிரியா மகாலிங்கம் (புலோலி தென்மேற்கு), செல்வி தமயந்தி சுந்தரம்பிள்ளை (அளவெட்டி வடக்கு), திருமதி ஞானச்சந்திரன் துகாரதி(நெடியகாடு, வல்வெட்டித்துறை), செல்வி டயானா றெக்ஷலா பிலிப் (பாஷையூர், யாழ்ப்பாணம்), செல்வி ரேனகா செல்வரட்னம்(வட்டுக்கோட்டை), செல்வி தேவகி சதாசிவக்குருக்கள் (கரணவாய் கிழக்கு), செல்வி.அனுஷா சரவணமுத்து ( மீசாலை மேற்கு), செல்வி.தயாளினி யோகராசா (அரியாலை), கந்ததாசன் ரமணன் (அல்வாய் வடக்கு), தில்லைத்தாண்டவர் திலீபன் (வடலியடைப்பு, பண்டத்தரிப்பு), பாலசுப்பிரமணியம் சிவரூபன் (கொட்டோலை, தெல்லிப்பழை), குமாரவேள் மங்களேசன் (ஏழாழை மேற்கு), பத்மநாதன் ரவிசங்கர் (பன்னாலை,தெல்லிப்பழை), செல்வி. தர்சினி சிவராசா (தெல்லிப்பழை கிழக்கு), செல்வி.கீதா பொன்னம்பலம் (அளவெட்டி மத்தி

திருமதி.சயந்தன் வரதகௌரி (கொக்குவில்) தவகுலம் தயன் (குருநகர், யாழ்ப்பாணம்),அஸ்வின் தவராசா அருளப்பு (மல்லாகம், யாழ்ப்பாணம்), செல்வி நிசாந்தி ஸ்ரீறங்கநாதன் அம்மையார் வீதி, சுன்னாகம்), செல்வி கோசலா சின்னராசா (அல்வாய் வடக்கு, அல்வாய்),செல்வி லோகினி சிவலிங்கம் (தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை), திருமதி துஸ்யந்தன் புனிதா (வதிரி, கரவெட்டி), பொனிபாஸ் தைரியநாதன் யஸ்ரின் யெலூட் (பூந்தோட்டம், வவுனியா)

திருமதி விமலன் விர்த்திகா (கல்வியங்காடு,யாழ்ப்பாணம்), ஜெயதேவன் யதுஷிர்னந் (இணுவில் தெற்கு, இணுவில்) திருமதி கிரிதரன் சுபதர்சினி (கோப்பாய் தெற்கு, கோப்பாய்), திருமதி சாந்தகுமார் யசோதரா (கொக்குவில் கிழக்கு, கொக்குவில்), செல்வி நித்தியா கதிரவேலு (கோப்பாய் தெற்கு, கோப்பாய்), செல்வி வனித ரஞ்சினி இராஜேந்திரம் (உடுவில்), செல்வி சிந்துஜா தேவபாலன் (திருநெல்வேலி, கோப்பாய் கிழக்கு), செல்வி சிறீறஞ்சினி இராசேந்திரன் (ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம்), பரமானந்தம் பிரதீபன் (மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி), செல்வி.கிரிசா வேலாயுதம்பிள்ளை (இணுவில் கிழக்கு, இணுவில்),ஈஸ்வரானந்தம் மகிழீஸன் (பன்னாலை, தெல்லிப்பழை), செல்வி. சிவசலோனி சிதம்பரப்பிள்ளை (காளிகோவிலடி, மல்லாகம்),தர்மலிங்கம் சந்திரா (உயரப்புலம், ஆனைக்கோட்டை), இரத்தினசிங்கம் பிரேமக்குமார்(உடுவில், சுன்னாகம்)


செல்வி துளசி கந்தசாமி (தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை), அருமைத்துரை அஜிந்தன்(உடுவில், சுன்னாகம்), கிருஷ்ணபிள்ளை சுதாகரன் (உடுவில் கிழக்கு, சுன்னாகம்),நிர்மலசந்திராணி பிறேமதாசா (ஏழாலை கிழக்கு, ஏழாலை), சுயானந்தி தைரியநாதன் (பூந்தோட்டம், வவுனியா)

(முற்றும்)





இரணைமடுக்குளத்தில் இரண்டு இலட்சம் இன மீன் குஞ்சுகள் விடும் நிகழ்வில் கடற்தொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன, நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆகியோர் கலந்து கொண்டு மீன்குஞ்சுகளை குளத்தில் விடுவதையும் வன்னேரிக் குளம், புதுமுறிப்பு, கரியாலை, நாகபடுவான் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களுக்கு 40 மீன்பிடிப் படகுகள் மற்றும் வலைகள் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்



சுன்னாகம் மயிலணி கந்தசுவாமி கோயில் மஹோற்சவம் அண்மையில் இடம்பெற்றது. இதில் வேட்டைத் திருவிழா, சப்பறத் திருவிழா, தேர்த்திருவிழா ஆகிய காட்சிகளைப் படங்களில் காணலாம்.

## இந்தோனேசியாவில் கப்பலில் இருந்து இறங்க இலங்கை அகதிகள் மறுப்பு

(கொழும்பு)

நியூசிலாந்துக்கு அகதிகளாக செல்லும் வழியில் இந்தோனேசியா கடற்படையினரால் இடைமறிக்கப்பட்ட 87 இலங்கைத் தமிழர்களும் தாம் பயணித்த கப்பலில் இருந்து இறங்க மறுப்பு தெரிவித்துள்ளனர்.

இந்த கப்பல் தற்போது இந்தோனேசிய டாங்ஜுங் பினாங் தளத்தில் நங்கூரமிட்டுள்ளது.

இது கடந்த சனிக்கிழமையன்று இந்தோனேசியாவின் பின்டான் தீவான ரினானுக்கு அருகில் வைத்து இந்தோனேசிய கடற்படையினரால் மறிக்கப்பட்டது.

இந்த நிலையில் கப்பலில் உள்ளோர் தமக்கு நியூசிலாந்து வேண்டும் என்ற சுலோகங்களை ஏந்திய வண்ணம் நியூஸிலாந்து கொடிகளுடன் இருப்பதாக ரொயட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும் நியூசிலாந்தின் பிரதமர் ஜோன் கே. இந்த அகதிகளை தாம் வரவேற்கப் போவதில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தோனேசிய சுதந்திர ஊடகவியலாளர் யூலி செபாரியின் தகவல்படி ஐக்கிய நாடுகள் தம்மை அகதிகளாக ஏற்றுக் கொள்ளும் வரை தாம் கப்பலில் இருந்து இறங்கப் போவதில்லை என்று அகதிகள் தெரிவித்துள்ளனர்.

தாம் சட்டவிரோத குடியேறிகள் அல்லர். உண்மையான அகதிகள் என்று அகதிகளில் ஒருவரான ரோமன்ஸ் ராடன் தெரிவித்துள்ளார்.

மற்றும் ஒரு அகதி தமது குடும்பத்தினர் இலங்கையில் கொல்லப்பட்டனர். இந்த நிலையில் தாம் கப்பலில் இருந்து இறங்கினால் தாமும் கொல்லப்படும் அச்சம் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## வடக்கு, கிழக்கு பாடசாலை மாணவர்களுக்கு நிலக்கண்ணிவெடி குறித்து தெளிவூட்ட திட்டம்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு பாடசாலை மாணவர்களுக்கு நிலக்கண்ணி வெடி குறித்து விளக்கமளிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யுத்தம் இடம்பெற்ற வலய பாடசாலைகளின் பாட விதானத்தில் நிலக்கண்ணிவெடி குறித்த பாடமும் இணைக்கப்படவுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது.

சில ஆண்டுகளுக்கு இந்தப் பாடம் நடைமுறையில் இருக்கும் என அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

நிலக்கண்ணி வெடி அகற்றுதல் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனெனில், நிலக்கண்ணி வெடிகளினால் இளம் தலைமுறையினர் பாதிப்புக்களை எதிர்நோக்கக் கூடிய அபாயாம் அதிகளவில் காணப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

யுத்த வலயத்தில் 62 வீதமான பிரதேசங்களில் நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

(ஸ்ரீ-2)

## பொலிஸ் இடமாற்றங்கள் இடைநிறுத்தப்பட வேண்டும்

### தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

பொலிஸ் இடமாற்றங்கள் இடைநிறுத்தப்பட வேண்டுமென தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

குறிப்பாக தேர்தல்கள் இடம்பெற்று வரும் பிரதேசங்களில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இடமாற்ற உத்தரவுகள் பிறப்பிக்கக் கூடாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில் சில பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இடமாற்ற உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பவ்ரல் தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் நிறைவேற்றுக் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் சட்டங்களை மீறும் வகையில் இந்த நடவடிக்கை அமைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இந்த முறைப்பாட்டை ஏற்றுக் கொண்ட தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய இடமாற்ற உத்தரவுகளை இடைநிறுத்துமாறு உத்தரவிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## 2011.07 13 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1174-ஸ்கொட்லாந்தின் முதலாம் வில்லியன் இங்கிலாந்தின் இரண்டாம் என்றியின் படையினரால் கைப்பற்றப்பட்டான்.

★ 1643-இங்கிலாந்து உள்நாட்டுப் போர்: இங்கிலாந்தில் என்றி வில்மட் பிரபுவின் முடியாட்சி சார்புப் படைகள் சேர் வில்லியம் வோலர் தலைமையிலான நாடாளுமன்ற சார்புப் படைகளைத் தோற்கடித்தனர்.

★ 1793-பிரெஞ்சு எழுத்தாளரும் புரட்சிவாதியுமான ஜோன் போல் மராட் அவரது குளியல் அறையில் வைத்து படுகொலை செய்யப்பட்டார்.

★ 1844-இலங்கையில் பொலிஸ் நீதிமன்றங்கள் (Police courts) அமைக்கப்பட்டன.

★ 1869-இந்துப் பிள்ளைகளின் கல்விக்கு ஆறுமுகநாவலர் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் ஓர் ஆங்கிலப் பாடசாலையை நிறுவினார்.

★ 1908-லண்டனில் இடம்பெற்ற ஒலிம்பிக் விளையாட்டுக்களில் முதன் முதலாகப் பெண்கள் பங்குபற்றினர்.

★ 1878-பெர்லின் உடன்படிக்கை: சேர்பியா, மொண்டெனேகுரோ, ருமேனியா ஆகிய நாடுகள் ஒட்டோமான் பேரரசில் இருந்து முழுவதுமாக விடுதலை பெற்றன.

★ 1923-லொஸ் ஏஞ்சலீசில் ஹோலிவுட்டின் மேல் உள்ள மலையில் ***ஹோலிவுட் குறியீடு*** அதிகாரபூர்வமாக எழுதப்பட்டது. ஆரம்பத்தில் இது ***ஹாலிவுட்லாந்து*** என எழுதப்பட்டாலும் பின்னர் 1949 இல் தற்போதைய பெயருக்கு மாற்றப்பட்டது.

★ 1930-முதலாம் உலகக் கோப்பை காற்பந்தாட்டப் போட்டிகள் உருகுவாயில் ஆரம்பமாகின. லூசியென் லோரெண்ட் பிரான்சுக்காக மெக்சிகோவுக்கு எதிராக முதலாவது கோலைப் போட்டார்.

★ 1941-இரண்டாம் உலகப் போர்: மொண்டெனேகுரோ மக்கள் அச்சு நாடுகளுக்கு எதிராகக் கிளர்ச்சியை ஆரம்பித்தனர்.

★ 1971-மொரோக்கோவில் தோல்வியடைந்த இராணுவப் புரட்சியில் ஈடுபட்ட பத்து இராணுவத்தினர் தூக்கிலிடப்பட்டனர்.

★ 1989-இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் அ.அமிர்தலிங்கம் மற்றும் யோகேஸ்வரன் ஆகியோர் கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

★ 1997-சே குவேராவினதும் தோழர்களதும் உடல் எச்சங்கள் கியூபாவுக்குக் கொண்டு வரப்பட்டன.

★ 2001-சீனாவின் பீஜிங் நகரம் 2008 இற்கான ஒலிம்பிக் விளையாட்டுக்களுக்குத் தகுதி பெற்றது.

★ 2005-பாகிஸ்தானில் கோட்கி என்ற இடத்தில் மூன்று தொடருந்துகள் மோதியதில் 150 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர்.

### பிறப்புக்கள்

★ 1841-ஒட்டோ வாக்னர், ஆஸ்திரியக் கட்டடக் கலைஞர் (இ.1918)

★ 1934-வோல் சொயிங்கா, நோபல் பரிசு பெற்ற நைஜீரிய எழுத்தாளர்.

★ 1953-வைரமுத்து, தமிழ்த் திரைப்பட பாடலாசிரியர், கவிஞர்.

### இறப்புக்கள்

★ 1974-பட்றிக் பிளாக்கெட், நோபல் பரிசு பெற்றவர் (பி.1891)

★ 1989-அ.அமிர்தலிங்கம், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயலாளர் நாயகம் (பி. 1927)

# கொஞ்சம் அமுதம் கொஞ்சம் விஷம்



## ஆன்மீகம் 47

"என் மகனுக்குத் திருமணமாகி ஆறு வருடங்கள் ஆகின்றன. மூன்று வயதில் அவனுக்கு ஒரு மகன் இருக்கின்றான். இரண்டாவது குழந்தை பெற்றுக் கொள்வதில் என் மருமகளுக்கு ஆர்வம் இல்லை. தம்பி தங்கைகளோடு வளராமல், தனியாக வளரும் குழந்தைக்கு பாசம், அன்பு இதெல்லாம் எப்படி வரும்? இந்தத் தலைமுறையினருக்கு இதை எப்படி எடுத்துச் சொல்வது?"

உடன் பிறந்தவர்களிடம் மட்டும்தான் அன்பு வைக்க வேண்டும் என்ற எண்ணத்தை வளர்த்துக் கொள்வதே தவறு. அப்படியொரு எண்ணத்தை உங்கள் பேரனிடம் ஏற்படுத்துவது அதைவிடத் தவறு.

இன்றைய அவசர உலகில், பெரும்பாலான பெற்றோர்களே குழந்தைகளுக்கு அந்நியர்களாக இருக்கிறார்கள். அதனால் தான் அவர்கள் தனிமையை உணர்கிறார்கள். தாத்தாவும், பாட்டியும், அப்பாவும் அம்மாவுமே அந்த தனிமை உணர்வை விரட்ட முடியும்.

முக்கியமாக குழந்தையை அதட்டி மிரட்டிக் கொண்டு இராமல், அதனுடன் நட்பு பாராட்டுங்கள். வீட்டில் இருப்பவர்கள் அவனுடன் நண்பர்களாகப் பழகினால், தம்பிக்காகவோ, தங்கைக்காகவோ அவன் ஏன் ஏங்கப் போகிறான்?

அதைச் செய்யாதே, இதைச் செய்யாதே என்று எப்போதும் விரட்டிக் கொண்டே இருக்கும் பெற்றோர்கள் இருந்தால், அந்த வீட்டில் பன்னிரண்டு குழந்தைகள் இருந்தாலும், எல்லோரும் தனித் தனியாகத்தான் உணர்வார்கள்.

இன்றைக்கு இந்தப்பூமி, அளவுக்கு அதிகமான ஜனத்தொகையால் மூச்சுத் திணறிக் கொண்டு இருக்கிறது. முக்கியமாக நம் தேசத்தின் ஜனத்தொகை நூற்று எட்டு கோடியைத் தாண்டி விட்டது.

நாட்டின் வளர்ச்சிக்கு பெரும் தடையாக உணரப்படுவது, வீங்கிக் கிடக்கும் மக்கள் தொகைதான். இந்த நிலையில் இன்னொரு குழந்தையைக் கொண்டுவருவது ஒருவித சமூகக் குற்றம்.

உங்கள் மருமகள் எடுத்துள்ள முடிவு நியாயமானது; புத்திசாலித்தனமானது!

**"கடவுள் தரும் பரிசு, குழந்தை. அதைப் பெற்றுக் கொள்வது எப்படிச் சமூகக் குற்றம் ஆகும்?"**

## நரகம்-சொர்க்கம் ஆகலாம்!

அளவான மக்கள் வாழ்ந்தால், சுற்றுப்புறமும் சுவாசிக்கும் காற்றும் கூடச் சுத்தமாக இருக்கும். இருப்பவர்களைக் குறைக்க முடியாது. மேற்கொண்டு சேர்க்காமலாவது இருக்கலாம் அல்லவா?

உணவுத்தயாரிப்பிலுருந்து எத்தனையோ விடயங்கள் உலகில் உள்ள அத்தனை மக்களுக்கும் போதுமானதாக இல்லை. அதனால், கண்ணுக்கு தெரிந்தும் தெரியாமலும் பல பட்டினிச் சாவுகள் நிகழ்ந்து கொண்டு இருக்கின்றன.

உங்கள் குடும்பத்தில் பிறக்கும் பேரனோ பேர்த்தியோ தான் கடவுள் தந்த பரிசா? அடுத்தவர் குழந்தையும் கடவுள் தந்த பரிசு தான். முடிந்தால் கவனிப்பாரற்றுக்இருக்கும் மற்ற குழந்தைகளை உங்கள் குடும்பத்தில் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளுங்களேன். மாறாக இன்னொரு உயிரை இந்த உலகுக்கு கொண்டு வருவதில் என்ன அர்த்தம் இருக்கிறது?

**"குழந்தைகள் இருக்கும் இடம் தானே சொர்க்கம்? குழந்தைகள் வேண்டாம் என்கீர்கள்"**

குழந்தைகள் இருக்கும் இடம் மட்டும் தான் சொர்க்கமாக இருக்க வேண்டும் என்று ஏன் தீர்மானித்து விட்டிர்கள்? பெரியவர்கள் இருக்கும் இடத்தை நரகமாக்கிக் கொள்ள வேண்டும் என்று யார் விதி எழுதியது?

ஒருபாதிரியார் மரணம் அடைந்தார்.

விழித்துப் பார்த்தால், அவர் ஒரு விண்வெளி ரயிலில் பயணம் செய்து கொண்டு இருந்தார். அவரிடம் சொர்க்கத்துக்கான டிக்கெட் இருந்தது.

ரயில் முதல் நிறுத்தத்துக்கு வந்தது. பாதிரி யார் வெளியே எட்டிப் பார்த்தார். பிளாட்ஃ பாரத்தில் போதிய வெளிச்சம் இல்லை. எண்ணெய் விளக்குகள் மங்கலாக எரிந்து கொண்டு இருந்தன. துருப்பிடித்த போர்டில் , சொர்க்கம் என்ற எழுத்துக்கள் தேய்ந்து போயிருந்தன. ஆங்காங்கே பலர் வறண்ட தரையில், கிழிந்த உடைகளுடன் புரண்டு கிடந்தனர்.

பாதிரியார் திடுக்கிட்டார். "இதுவா சொர்க்கம்."

இறங்கி, ரயில் நிலைய அதிகாரியின் அறைக்குப் போனார்.

அங்கே விலா எலும்புகள் தெரியபடுத்திருந்த சாமியார் ஒருவரிடம் விசாரித்தார்.

"ஆம் இதுதான் சொர்க்கம்!"

"இயேசு புத்தர் எல்லாம் இங்கேயா இருக்கிறார்கள் ?"

"ஓ, அவர்கள் எல்லாம் அடுத்த ஸ்டேஷனில் இறங்கினார்கள்" என்றார் சாமியார்.

புறப்பட்டுக் கொண்டு இருந்த ரயிலில் ஓடிப்போய் ஏறினார், பாதிரியார். அடுத்த ரயில் நிலையம் வந்தது.

பள பள வென நியான் போர்டு 'நரகம்' என்று வரவேற்றது.

பாதிரியார் தயக்கத்தோடு இறங்கினார். பளிங்குக்கற்கள் போடப்பட்ட பிளாட்ஃ பாரம், அசுர விளக்குகளின் கீழ் பள பளத்தது. எங்கே திரும்பினாலும் கொண்டாட்டமும் சந்தோஷமுமாக இருந்தது.

அங்கே ஒர் ஓரத்தில் புத்தர்தியானத்தில் அமர்ந்தார். இயேசு ஒரு புறம் பலரிடம் சிரித்துப் பேசிக்கொண்டு இருந்தார். இன்னும் பல யோகிகளும் மகான்களும் அங்கே தென்பட்டனர்.

பாதிரியார் அதிர்ந்தார். கோபமாக அங்கிருந்து அதிகாரியின் அறைக்குப் போனார். "ரயில் நிலையங்களின் பெயர்கள் தவறுதலாக மாற்றி வைக்கப்பட்டு இருக்கின்றன" என்று புகார் கொடுத்தார்.

அமர்க்கலமாக உடுத்தியிருந்த அதிகாரி சிரித்தார். "அதெல்லாம் இல்லை. நீங்கள் முதலில் பார்த்தது சொர்க்கம் தான். இதுதான் நரகம் முதலில் இங்கேயும் இருளாகத்தான் இருந்தது. புத்தர் ,இயேசு போன்றவர்கள் இங்கே வந்து இறங்கிய சொற்ப நேரத்தில், எல்லாம் தலைகீழாக மாறிப்போய்விட்டது!" ஏன்றார்.

சொர்க்கம், நரகம் என்று பெயர்ப் பலகை வைப்பதால் மட்டும் அந்த இடங்கள் சொர்க்கமாகவோ நரகமாகவோ ஆகிவிடுவது இல்லை. சொர்க்கமானாலும் அங்கே உயிரற்றுக் கிடக்கமுடியும்; நரகமானாலும் , அதை உங்கள் இருப்பால் சொர்க்கமாக்கி விடமுடியும்.

ஒற்றைக் குழந்தை இருக்கும் இடத்தையே நீங்கள் சொர்க்கமாக்க முடியும். தெளிவோடு அணுகினால், அருந்துவதையே அமுதமாக்க முடியும்!

**சத்குரு ஜக்கி வாசு தேவ்**

# முஸ்லீம்கள் தமிழ் மொழியுடன் இரண்டறக் கலந்தனர்

**02**

அரபு மக்களின் வருகையால் ஏற் பட்ட நிலையான பெறு பேறுகளை இந்து சமுத்திரத்தின் மேற்குக் கரை நாடுகளில் காணக்கூடியதாகஉள்ளது.என்று எஸ்.கிருஷ்ணசாமி ஐயங்கர் கூறுகின்றார்.

கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் சோழர் ஆட்சியில் தலை நகர் கோழி உறையூர் எனும் பெயர் பெற்றிருந்தது. இக்காலம் வந்தவர்தான் வராஜி அப்துல்லாஹ்பின் அன்வர். தொழுகைக்காக கி.பி.738 இல் ஒரு பள்ளிவாசலைக்கட்டினார். இன்று அது சிதைந்துள்ளது. இஸ்லாமியப் போதகர்கள் தமிழகத்தின் பாண்டிநாட்டிற்கு 1050 இல் வருகை தந்தனர். மலிக்குல் முல்ம், அரிஷா என்பவர்களை அலெக்ஸாண்டர் நெல்சன் குறிப்பிடுகின்றார். இக்காலத்தே புகழ் பெற்ற அரபுப் பயணிகள் இப்னுகுர்தாத் பிஹி மஸ்ஊதி தமிழகத்துக்கு வந்தனர். மதுரை கன்னியாகுமரி பற்றி விவரங்களை அவர்களது நூல்களில் காணலாம். இவ்விதம் அரபு நாடும் தமிழகமும் ஒன்றித்த வரலாற்றை நீட்டி விரித்து ஆழ்ந்து காணமுடியும். பூதக்கண் ணாடி யில் பார்ப்பது அளவைப் பெரிதாக்கும். அவ்விதம் அல்லாது ஆழ்ந்து அகன்று ஆய்தல் முக்கியமாகும். முஸ்லிம்கள் சேர சோழ பாண்டிய மன்னர்களிடம் போர் வீரர் களாகப்பணி யாற்றியுள்ளனர். மைசூரை ஆண்ட ஓய்சன வீரவில்லானிடம் அறுபதினாயிரம் மூஸ்லிம் வீரர்கள் இருந்ததாக இப்னுபதூதா கூறுகின்றார். நகரப்பாதுகாவலர் பொற்காசுகள் செய்து தருவோர் வணிகராகச் செயலாற்றினர். மூவேந்தர் களின் மெய்ப் பாதுகாவலராகவும் பணியாற்றியுள்ளனர். டில்ஹி சுல்தான் அலாவுதீன் கல்கி படையெடுத்த போது மாலிக்கபூர் தலைமை வகித்தார். மாலிக்காபூரின் தூதுவர் வீரபாண்டியன் குதிரைப்படைத் தளபதியை அணுகி மூஸ்லிம் என உரிமை பாராட்டி, நாளை மதுரையைத் தாக்க வரவிருப்பதாகவும் குதிரைப்படை வீரர் ஐம்பதாயிரம் பேரும் போரில் பங்குகொள்ளாது ஒதுங்கு மாறும் கூறியிருக்கிறார். அதைக் கேட்ட பாண்டிய முஸ்லிம் தளபதி, கண்கள் சிவந்து கொவ்வைப்பழமாகி தூதுவரே நாங்கள் மூஸ்லீம்கள் தான். பாண்டிய நாட்டின் மக்கள். இந்நாட்டின் வெற்றி எங்கள் வெற்றி. இந்நாட்டின் தோல்வி எங்கள் தோல்வி. இஸ்லாம் எங்கள் நாட்டுக்குத் துரோகம் செய்யக் கற்றக்கொடுக்கவில்லை. உடனே இக்கணமே இவ்விடத்தை விட்டகன்று விடு; நாளை போர்க் களத்தில் சந்திப்போம். எனும் சம்பவத்தை டாக்கடர் சி. பாலசுப்பிரமணியன் சுட்டிக்காட்டுகிறார்.தமிழ் நாடு, தமிழ் மக்கள் இரண்டறக்கலந்துள்ள இவ்வித சம்பவங் களை இன்னும் வரலாறு அள்ளித்தருகிறது.

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

தமிழறிவு வளரவளர இஸ்லாமிய எழுத்துக்களை முஸ்லீம்கள் தமிழ், அரபு கலந்து எழுதினர். அரபுத்தமிழாக எழுதினர் அரபுத் தமிழ் ஒலியின் நாயக்கர் காலப் பின்னணியில் ஐரோப்பியர் வருகையின்போதெல் லாம் முஸ்லிம்கள் வசனமாக எழுதுகின்றனர். தமிழில்'PROSE' எனும் வசன நடைக்குக் கால் ஐரோப்பியர் என்றே வரலாறு கூறுகிறது. ஆனால், ஸதக்கத்துல்லாஹ், அப்பா போன்றோர் அதற்கு முந்தியோர் அரபுரியில் தமிழ் ஒலியில்'PROSE' ஐக் கையாண்டுள்ள வரலாற்றை கூறாமல் விட்டனர். ஐரோப்பியர் வருகைக்கு முன்னே 'PROSE' எனும் வசன நடையைத் தமிழுக்குக் கொடுத்தவர்கள் மூலிம்களே! என்பது குறித்துக் காட்ட வேண்டியதொன்று .

**ஏ.இக்பால்**

இஸ்லாமியப் புலவர்கள் பாடாத துறைகள் இல்லையெனத்துணியலாம். காப்பியம், புராணம், அந்தாதி ,உலா,பரஹி,கோவை, கலம்பகம்,தூது,பிள்ளைத்தமிழ்,புஞ்சம், சதகம், மாலை மஞ்சரி, வண்ணம், திருப்புகழ் எனும் இலக்கியங்களை நிறையப் படைத்ததோடு,முனாகாத்து,கிஸ்லா,மஸ் அலா எனும் புதிய பிரபந்தங்களைத் தமிழுக்குத்தந்தனர்.

முஸ்லிம்கள்தமிழுடன் ஒன்றித்த காரணத்தால் அரபுச் சொற்கள் தமிழ் மொழியாகி வித்தியாசம் பாராட்டாத அளவு வளர்ந்துள்ளமையை இன்று காண்கிறோம். தமிழ் பேச்சு வழக்கில்கூட அரபுச்சொற்கள் அதிகம் கலந்துள்ளன. அசல், அத்துறேல், அமல், அலாரி,இனாம்,கலால்,கைதி,சாமான்,தகராறு, தயார், நகல், நபர், பதில்,பாக்கி, மசோதா, மராத்து,மாகி,முகாம்,நிலையம்,மைதானம், ரத்து,ராஜினாமா,லாயக்கு,வக்காலத்து, வக்கீல்,வசூல்,ஜாமின் இவ்விதம் அரபுச் சொற்கள் தமிழாகிக் கலந்துள்ளளமை ,முஸ்லிம்கள் தமிழுடன் இரண்டறக் கலந்துள்ளமைக்குச் சாட்சிகூறும்.

மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய இலக்கிய ஆய்வுத்துறை, இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ் நுல்களின் எண்ணிக்கை இரண்டாயிரத்தைத் தாண்டிவிட்டன என்பதை வெளிச்சம் காட்டியுள்ளது. இச்சுருக்க வரலாற்றை விரித்துப்பார்க்கும் பணி ஆய்வாளர்களுக்கும் ஆய்வு செய்யும் மாணவர்களுக்கும் உரித்துடையது. இதை அத்திவாரமாகக் கொண்டு ஆய்வு செய்ய வேண்டுகிறேன்.

*(முற்றும்)*

# வடபகுதி மக்களுக்கான இந்திய வீடமைப்புத் திட்டத்தில் தாமதம்

## இந்தியப் பிரதித் தூதுவர் தெரிவிப்பு

போரினால் பாதிப்புகளுக்கு உள்ளாகிய வடபகுதி மக்களுக்கான இந்திய வீடமைப்புத் திட்டம் பல்வேறு காரணங்களால் தாமதமடைந்துள்ளதாக இந்தியப் பிரதித் தூதுவர் விக்ரம் மிஸ்ரி கூறியுள்ளார்.

ஆரம்ப கட்டமாக ஆயிரம் வீடுகள் இந்த ஆண்டு இறுதிக்குள் அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

வடக்கு மக்களுக்கு பிரகாசமான எதிர்காலத்தை உருவாக்குவதற்கு இந்தியா ஒன்றிணைந்த சக்தியாகத் தொடர்ந்து செயற்படும் எனவும் இந்தியப் பிரதித் தூதுவர் தெரிவித்தார்.

வட மர்காணத்தில் மேற்கொள்ளப்படுன்ற இந்திய வீடமைப்புத் திட்டம் மற்றும் புகையிரதப் பாதைகளை அமைக்கும் வேலைத்திட்டம் ஆகியவற்றை நேரடியாகப் பார்வையிடுவதற்காக சென்றுள்ள இந்திய பிரதித் தூதுவர் வவுனியா அரசாங்க அதிபரைச் சந்தித்து அங்குள்ள நிலைமைகள் குறித்து கேட்டறிந்தார்.

அதன் பின்னர் மீள்குடியேறியுள்ள ஒரு தொகுதி குடும்பங்களுக்கான கூரைத்தகடுகளையும் விவசாய உபகரணங்களையும் அவர் வழங்கினார்.

இடம்பெயர்ந்த மக்களுக்காக இந்தியாவினால் அமைக்கப்படும் வீடுகளை நிர்மாணிக்கும் பணிகளில் ஏற்பட்டுள்ள நீண்ட தாமதம் குறித்து அவர் பிபிசிக்கு விளக்கமளிக்கையில்,

வீடுகளை அமைப்பதற்கான இடங்களை தமது ஒப்பந்தகாரர்களிடம் கையளிப்பது தொடக்கம்பயனாளிகளைத் தெரிவு செய்வது வரையில் பல விடயங்களில் ஏற்பட்டிருந்த சிக்கல்கள் தாமதங்களினால் இந்தத் திட்டம் தாமதமாகியிருக்கின்றது என அவர் கூறினார்.

அத்துடன் 50 ஆயிரம் வீடுகளை அமைக்கின்ற இந்தத் திட்டமானது உலகத்திலேயே இந்தியாவினால் மேற்கொள்ளப்படுகின்ற மிகவும் பெரிதோர் வேலைத்திட்டம்.

எனவே இதனை தாங்கள் மிகவும் கவனமாகக் கையாள வேண்டியிருக்கின்றது. எனினும் இந்தத் திட்டத்தின் ஆரம்ப கட்டமாகிய ஆயிரம் வீடுகளை அமைக்கும் பணிகள் இந்த வருட இறுதிக்குள் நிறைவேற்றப்பட்டுவிடும் என்று இந்திய பிரதித் தூதுவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்த வேலைத்திட்டத்திற்கு இலங்கை அரசாங்கம் ஒத்துழைப்பை வழங்கி வருவதாகக் குறிப்பிட்ட அவர்,

இன்னும் இரண்டு வாரங்களில் இந்த முன்னோடித் திட்டத்தின் கீழ் 40 அல்லது 50 வீடுகள் முற்றாக கட்டி முடிக்கப்பட்டுவிடும்.

அந்த வீடுகளை இந்த மாத இறுதிக்குள் பயனாளிகளுக்கு வழங்குவதற்கும் திட்டமிட்டிருக்கின்றது என்றார்.

அதனைத் தொடர்ந்து எஞ்சிய 49 ஆயிரம் வீடுகளையும் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்படும் என்றும் அதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை இலங்கை அரசுடன் இணைந்து மேற்கொண்டிருப்பதாகவும் இந்திய பிரதித் தூதுவர் கூறினார். (ஸ்ரீ-2)

## விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட யாழ்.நகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இதற்கமைய இன்று காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை தாராக்குளம் குடியிருப்பு பகுதியிலும் காலை 11.30 மணி தொடக்கம் 1.30 மணி வரை மார்டீன் வீதி, சப்பல் வீதி சந்தியிலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை பேக்கரி ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதியிலும் காலை 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை கச்சேரி நல்லூர் வீதி, சித்தி விநாயகர் சந்தியிலும் வைத்து வழங்கப்படவுள்ளது.


எனவே, இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தமது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி ஊசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

## முல்லைத்தீவில் புதிய பஸ்தரிப்பிடம் அமைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வற்றாப்பளை 3 ஆம் கட்டை சந்தியில் பஸ்தரிப் பிடம் ஒன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

யுத்தம் முடிவடைந்ததன் பின்பு முல்லைத்தீவு பிரதேசத்தில் பொதுமக்கள் பாவனைக்கென பஸ்தரிப்பிடம் அமைக் கப்படாமையால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டனர்.



இதனையடுத்து முல்லைத்தீவு மாவட்ட விமானப்படையின் பொறுப்பதிகாரி மற்றும் பொது மக்களின் உதவியுடன் புதிய பஸ்தரிப்பிடம் ஒன்றை அமைத்துள்ளனர். (ஸ்ரீ-4)

## இலங்கைக்கு கடன் வழங்கும் நாடுகள் வளச்சுரண்டலில் ஈடுபடும் அபாயம் —

### ஐ.தே.க.எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கு கடன் வழங்கும் நாடுகள் வளச்சுரண்டலில் ஈடுபடக்கூடிய அபாயம் காணப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கைக்கு சில நாடுகள் பாரியளவில் கடன்களை வழங்கி வருவதாக அரசாங்கம் பிரசாரம் செய்கின்ற போதிலும் அதன் பின்னணியில் ஆபத்துக்கள் நிறைந்திருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

குறிப்பாக சீனா போன்ற நாடுகள் இலங்கைக்கு உதவிகளை வழங்குவதாக தெரிவிக்கப்பட்ட போதிலும் அவை அனைத்துமே கடன் என்னும் வகையீட்டுக்குள் அடங்குவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரையிலான காலப்பகுதியில் சீனா இலங்கைக்கு உதவி வழங்கியுள்ள போதிலும் அவை அனைத்துமே கடன் அடிப்படையில் வழங்கப்பட்டவை என அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கடன் தொகை மீளச் செலுத்தப்பட வேண்டியது இவ்வாளவு சொற்பளவு கடனை வழங்கி மறுபுறத்தில் நாட்டின் வளங்களை சீனா சுரண்டி வருவதாக குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அரசாங்கம் விழிப்புடன் செயற்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தக் கடன் தொகைகளில் அதிகமானவை கூடுதலான வட்டிக்கு பெற்றுக் கொள்ளப்பட்டவை என அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் சகல அபிவிருத்தித் திட்டங்களுக்கும் சீனா உதவிகளை வழங்குவதற்கு முன்வந்துள்ளதாகவும் இதன் பின்னணியில் சீனாவின் நோக்கம் ஆராயப்பட வேண்டியது அவசியமானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அரசாங்கம் தனியார் மயப்படுத்தல்களை மிகவும் இரகசியமான முறையில் மேற்கொண்டு வருவதாக குற்றம் சுமத்தியுள்ளார். (ஸ்ரீ-2)

## புகழிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பில் நியூசிலாந்தில் கருத்துக்கணிப்பு

நியூசிலாந்துக்கு செல்ல முயன்ற போது இந்தோனேசிய கடல் படையினரால் கைது செய்யப்பட்ட 87 தமிழர்களையையும் நியூசிலாந்து அரசு வரவேற்க வேண்டுமா? கூடாதா? என்கிற கருத்துக் கணிப்பை நியூசிலாந்து நாட்டு ஆங்கிலப் பத்திரிகைகளில் ஒன்றான டொமினியன் போஸ்ட் மேற்கொண்டு வருகின்றது.

ஆனால் இக்கருத்துக் கணிப்பின் முடிவுகள் இதுவரை இத் தமிழர்களுக்கு மிகவும் பாதகமாகவே உள்ளன.

இதுவரை 654 பேர் கருத்துத் கணிப்பில் வாக்களித்து உள்ளனர். வரவேற்க வேண்டும் என்று 113 பேரும் கூடாது என 541 பேரும் வாக்களித்து உள்ளனர். (ஸ்ரீ-2)



ஏ-9 வீதியில் திருமுறிகண்டி பிள்ளையார் ஆலயத்திற்கும் திருமுறிகண்டி எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கும் இடையில் சென்று கொண்டிருந்த பிக்கப் வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து பாலை மரத்துடன் மோதி சரிந்து வீழ்ந்து கிடப்பதை படத்தில் காணலாம். (படம்:- மல்லாவி செய்தியாளர்)


யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம் யாழ்ப்பாணம்

பதக்கம் வென்றவர்களைப் பாராட்டுகின்றோம்





(5350)

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப்போட்டி-2011

செல்வன் ஜெயந்திரன் அபிமன்
17 வயதின் கீழ்
100 மீற்றர் ஓட்டம்-தங்கப் பதக்கம்
200 மீற்றர் ஓட்டம்-வெள்ளிப்பதக்கம்

செல்வன் சுதாகரன் தமிழரசன்
15 வயதின் கீழ்
நீளம் பாய்தல்- வெண்கலப் பதக்கம்

பதக்கங்களை வென்று பாடசாலைக்குப் பெருமை சேர்ந்த இவ்விருமாணவர்களையும் ஆசிரியர் நலன்புரிச் சங்கம் பாராட்டுவதுடன் இவர்கள் தேசிய மட்டத்தையும் தாண்டி வெற்றிகள் பெற நல்லாசிகளையும் வழங்குகின்றது.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம், யாழ்ப்பாணம்.

18) மாலை : மாலை இச்சொற்கள் பற்றிய கூற்றில் சரியானது?
1) இரண்டு சொற்களும் ஒரே பொருளினை மட்டுமே தருகின்றன.
2) இரண்டு சொற்களும் வெவ்வேறு பொருளினைத் தரக்கூடியன.
3) ஒன்று வினையாகவும் மற்றையது பெயராகவும் உள்ளன.

**☛ 19 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையினைத் தெரிவு செய்க.**

19) இலங்கையில் அரசாங்கப் பாடசாலைகளில் கல்வி இலவசமாகவே போதிக்கப்படுகின்றது. இலங்கையின் கல்வித் திட்டம் இலவசக் கல்வித் திட்டமாகும். இக்கூற்றுக்குப் புறம்பான கூற்று பின்வருவனவற்றுள் எது?
1) பாடநூல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்படுகின்றன.
2) மாணவர்கள் எந்தவிதமான கட்டணங்களும் பாடசாலைக்குச் செலுத்துவதில்லை.
3) ஆசிரியர்களுக்குரிய சம்பளத்தை அரசாங்கம் வழங்குகின்றது.

20) மக்கள் தமக்குத் தேவையான பொருட்களை கொள்வனவு செய்வதற்காக சந்தைக்குச் செல்கின்றனர். அங்கு பலவகையான பொருட்கள் விற்பனையாகின்றன. இக்கூற்றின்படி, பிழையான கூற்றாக அமைவது எது?
1) சமையல் தேவைக்கான சகல பொருட்களும் அங்கு விற்பனையாகின்றன.
2) பழவகைகளையும் சந்தையில் பெற்றுக் கொள்ளலாம்
3) அலங்காரப் பொருட்கள் அனைத்தையும் அங்கு பெற்றுக் கொள்ளலாம்

21) தீபக் 1 ரூபா, 2 ரூபா, 5 ரூபா ஆகிய 15 நாணயக் குற்றிகள் வைத்திருந்தான். அதன் பெறுமதி 40 ரூபா ஆகும். எனவே, அவனிடம் உள்ள 5 ரூபா குற்றிகளின் எண்ணிக்கை யாது?
1) 3 குற்றிகள் 2) 4 குற்றிகள் 3) 5 குற்றிகள்

22) ராமன் 35kg உம், பாலா 32kg உம், நேசன் 38kg உம், பிரியா 30kg உம், நாதன் 42kg உம் ஆகும். மேலுள்ளவர்களின் நிறைகளை அவதானித்து அவர்களில் எவராவது மூவரின் நிறைகளின் கூட்டுத் தொகையைக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.
1) 115kg 2) 112kg 3) 118kg

23) கீழ்வரும் நான்கு விடைகளில் ஒரு காரணத்தை அடுத்து, அதற்கான விளைவுகள் அமைய வேண்டும். காரணத்திற்குரிய விளைவாக அமையாத விடை எது?
1) மழை பெய்தது : குளம் நிரம்பியது
2) மை முடிந்தது : பேனா எழுதியது
3) கத்தி வெட்டியது : இரத்தம் கொட்டியது
4) பூ மலர்ந்தது : வாசனை வந்தது.

24) உருவத்தினால் ஏனையவற்றிலிருந்து மிகவும் வேறுபட்ட பொருள் யாது?
1) வெள்ளைப்பூடு (உள்ளி) 2) பீற்றூட்
3) பெரிய வெங்காயம் 4) கரட்


25) பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல் தொடர்பான தவறான கூற்று எது?
1) பொதுச் சொத்துக்களைப் பயன்படுத்தாது பாதுகாக்க வேண்டும்
2) பொதுச் சொத்துக்களைச் சேதப்படுத்தாது பாதுகாக்க வேண்டும்
3) பொதுச் சொத்துக்களை மதித்து நடத்தல் வேண்டும்.

26) ஒருவரது வார்த்தையில் எப்போதும் காணக்கூடியது எது?
1) ஒலி 2) பிழை 3) கடுமை 4) பதற்றம்


27) நாம் வெறும் கண்களால் காண முடியாத காட்சி எது?
1) சூரியன் உதிக்கும் காட்சி 2) மழை பெய்யும் காட்சி
3) பூ மலரும் காட்சி 4) முகில் அசையும் காட்சி

28) பின்வரும் கூற்றுக்களில் பிழையான கூற்று எது?
1) ஒலி பயணம் செய்யும்
2) ஒளி பயணம் செய்யும்
3) ஒலியை விட ஒளி வேகமாகப் பயணம் செய்யும்

29) A, B ஆகிய இரண்டு பெண்களுக்கு இடையிலான வயது வித்தியாசம் 30 ஆகும். B யின் வயது 31 ஆயின், A யின் வயது யாதாக இருக்கும்.
1) ஒரு வயது 2) 11 வயது 3) 60 வயது

30) 

A யிலிருந்து C யிற்கும், C யிலிருந்து D யிற்கும் D யிலிருந்து Bயிற்கும் Bயிலிருந்து Aயிற்கும் நேர் கோடுகளை வரைந்தால், வரும் வடிவம் யாது?
1) 2) 3)



**☛ 31ஆம் 32ஆம் வினாக்களில் அடிக்கோடிடப்பட்டுள்ள சொற்களின் ஒத்த பொருளை தரும் சொல்லின் கீழ் கோடிடுக.**

31) ராமனும் சீதையும் கானகம் சென்றனர்.
1) சோலை 2) காடு 3) அரண்மனை


32) சிறுவர்களுக்கான கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த அழகிய பிரதிமை ஒன்றைப் பார்த்து, அதன் அழகை வியந்தேன்.
1) பொம்மை 2) பொருள் 3) மீன்

**☛ 33 தொடக்கம் 40 வரையான வினாக்களின் விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**


33) அடுத்து வரும் எண்ணைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.
49 → 48 → 46 → 43 → 39 → (.........)

34) அடுத்துவரும் சொல்லை இனங்கண்டு புள்ளிக் கோட்டில் எழுதுக.
கடற்கரை மணலோரம் → கடற்கரை மணல் → கடற்கரை → (.............)

35) அடுத்துவரும் கோலத்தை பூரணப்படுத்துக.





36) A, B, C ஆகிய எண் சட்டங்களின் புள்ளிகளின் ஒழுங்கை அவதானித்து, Dயில் வரவேண்டிய புள்ளிகளை வரைந்து காட்டுக.




37) Aயில் உள்ள ஒன்றுக்களையும், Bயில் உள்ள பத்துக்களையும், Cயில் உள்ள நூறுக்களையும், ஒன்று சேர்த்தால் வரும் எண்ணை எழுதுக.
(.....................)

**☛ கீழே உள்ள மூன்று தராசுகளிலும் காட்டப்பட்டுள்ள பொருட்களின் நிறைகளுக்கேற்ப கீழ்வரும் 38, 39, 40 ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.**




**☛ மேலுள்ள மூன்று சொற்களை மட்டுமே பயன்படுத்தி கீழ்வரும் புள்ளிக் கோடுகளை நிரப்புக.**

38) மீனின் நிறை 500g இற்கு (.....................) ஆகும்.

39) பொதியின் நிறை பப்பாசிப் பழத்தின் நிறையிலும் (..........................) ஆகும்.

40) பொதியின் நிறை 500g இற்கு (.....................) ஆயினும், மீனின் நிறையானது பொதியின் நிறையிலும் (.................) ஆகவும், பப்பாசிப் பழத்தின் நிறையிலும் (..................) ஆகவும் காணப்படுகிறது.

(பகுதி II வெள்ளிக்கிழமை வெளிவரும்)


# வடக்கு -கிழக்கு உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்ட

# அங்குரார்ப்பண நிகழ்வு




## உறுதியான உள்ளூர் ஆளுகைமூலம்

## தேசத்தின் உத்தம வளர்ச்சி









### தங்கள் மேன்மை தங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களால் வழங்கப்பட்ட ஆசிச்செய்தி

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் பிரதேச, கிராமிய மற்றும் சிறு நகரங்களுக்கிடையிலான அபிவிருத்தி முன்னெடுப்புத் திட்டத்தின் (கம-நெகும) முதலாவது கட்ட அபிவிருத்திப் பணிகளை அங்குரார்ப்பணம் செயயும் இந் நிகழ்வில் இந்த ஆசிச் செய்தியை வரைவுதில் நான் பெரும் உவகை அடைகின்றேன்.

தெரிவு செய்யப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் அபிவிருத்தி, ஒருமைப்பாடு மற்றும் சமூகங்களுக்கிடையே நல்லிணக்கம், புரிந்துணர்வை கட்டியெழுப்புதல் போன்றவற்றில் வினைத்திறனான் வகிபாகத்தை வழங்க முடியும. மேலும் தெரிவு செய்யப்பட்ட சபைகள் என்ற வகையில தங்கள் பிரதேச மக்கள் உள்ளூர் மட்டத்தில் சிறந்த முடிவெடுத்தல்,செயல்முறை மற்றும் அபிவிருத்தி முயற்சிகளில் தமது மேலான பங்கேற்பை வழங்க அதிக வாயப்புகளை வழங்குகின்றன.

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் பிரதேச, கிராமிய, சிறு நகரங்களுக்கிடையிலான அபிவிருத்தி முன்னெடுப்புத் திட்டமானது உள்ளூராட்சி மன்றங்களின் சேவை வழங்கல் முறைமையை விருத்தி செய்து வினைத்திறனான சேவைகளை வழங்குவதன் மூலம் மக்களின் கருத்து மற்றும் எண்ணங்களை நடைமுறையில் காணக்கூடியவாறாக, அவர்களின் ஆளுமை திறன்களை வலுப்படுத்தி வாழக்கைத்தரத்தில் முன்னேற்றங் காணவும் உதவுகிறது. இந்த திட்டமானது வடக்கின் அபிவிருத்தியில் ஒரு உந்துசக்தியாக அமைந்து இப்பகுதி மக்களின் பொருளாதார நல்வாழ்வில் சுபீட்சத்தைக் கொண்டு வர வேண்டுமென நான் வாழ்த்துகிறேன்.

மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி.

### கௌரவ அமைச்சர் றிசாட் பதியுதீன் அவர்களின் வாழ்த்து செய்தி

மக்களாட்சி மலர்ந்துள்ள நம் நாட்டின் மக்கள் சேவைககான உள்ளூராட்சியின் மகத்துவத்தை எடுத்தியம்பும் உள்ளூர் சேவை மேம்பாட்டுத் திட்டத்தின் அங்குரார்பபண நிகழ்விற்கு வாழ்த்து செய்தி வழங்குவதில் பேருவகை கொள்கிறேன்.

ஜனநாயக விழுமியங்களை எடுத்தியம்பும் உள்ளூராட்சியின் மகோன்னத நிலைக்கு இக்கருத்திட்டம் ஓர் எடுத்துக்காட்டு என்பதில் மிகையேதுமில்லை.

பொய்யாமொழிப்புலவர் வள்ளுவரின் அரசியல் அதிகார குறள் மூலம் சிறந்த அரசின் நற்பண்பை இவ்விதம் எடுத்தியம்புகிறார்.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல அரசு"

மகிந்த சிந்தனையின் மாண்புறு மக்களாட்சி தத்துவம் மென்மேலும் சிறக்க பொருளாதார நலனோன்பு திட்ட இயற்றலுக்கும் அதன்வழி பெற்ற நலன் காத்து மக்கள் தம கடமை உணர்ந்து செயற்பட முன்னோடி திட்டத்தை ஈந்து வடபகுதி மக்கள் தம் சேவை நிறைவை வழிப்படுத்த ஓர் கருத்திட்டத்தை இன்று அங்குரார்ப்பணம் செயவதில் பெரும்மகிழ்வு கொள்கிறேன். அரசின் வடபகுதி மக்கள் மீதான அக்கறையின் வெளிப்பாட்டை நன்றியறிதலுடன் ஏற்பதோடு ஜனநாயக வரையறைக்குள் மக்கள் தம் செயற்பாட்டை வலியுறுத்தும் இந்நற்செயற்றிட்டம் சிறந்த பெறுபேற்றை வழங்கிட எனது நல்லாசிகளை வழங்குவதில் பெருமிதம் அடைகிறேன்.

இனமத பேதமற்று மக்கள் மாண்டும் உள்ளூராட்சியின் மகத்துவமும் வெளிப்பட உதவும் இத்தகைய மக்கள் பங்கேறபுத் திட்டங்கள் மூலம் மூவினமும் பாரினில் ஒன்றாய் கலந்து பாரினில் எம் தேசம் சிறந்ததாய் மாண்புற இத்திட்டத்தின் வெற்றி வழிசமைக்க வேண்டும் என வாழ்த்துகிறேன்.

றிசாட் பதியுதீன்இ
கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர்.

### பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் மாண்புமிகு பசில் ராஜபகஷ அவர்களின் வாழ்த்துச்செய்தி

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் பிரதேச கிராமிய மற்றும சிறு நகரங்களுக்கிடையிலான அபிவிருத்தி முன்னெடுப்புத திட்டத்தினை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் இந்தச் செய்தியை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

சமாதானம் அடைந்த பின் வடக்கு மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்காக பல அர்த்தமுள்ள படிமுறைகளை அரசாங்கமானது முன்னெடுத்துள்ளதுடன் மக்கள் தாமாக தங்களை வலுப்படுத்திக் கொள்வதற்கும் அரசுடன் இணைந்து செயற்படுவதற்கும் பல சந்தர்ப்பங்களை அரசு ஏற்படுத்திக்கொடுத்துள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வரும் இத்திட்டமானது, வடக்கு மாகாணத்தின் பின்தங்கிய கிராம மக்களின் உற்பத்தித்திறனை விருத்தி செய்வதன் மூலம் மேலதிக பரிமாணத்தை தேசிய வளர்ச்சியில் தோற்றுவிக்கும்.

உள்ளூராட்சி மன்றங்கள் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட ஓர் அடித்தள நிறுவனங்களாக காணப்படுவதும் அப்பிரதேச மக்களின் தேவைகளையும் அபிலாசைகளையும் பிரதிபலிக்கும் ஓர் அமைப்பாக உள்ளது. இந்தத் திட்டத்தின் நோக்கமானது உள்ளூராட்சி மன்றங்களை வலுவூட்டி சிறப்பான சேவ்வகளை வழங்கி அதனூடாக பிரதேச மக்கள் பொருளாதார செயற்பாடுகளில் ஈடுபடும் சக்தியை பெறக்கூடிய சூழலை உருவாக்குவதுமாகும. அரசாங்கமானது இத்திட்டத்திற்கான நிதியை உலக வங்கியிடம் இருந்து குறித்துரைக்கப்பட்ட முதலீட்டு கடன் திட்டத்தினூடாக பெற ஒழுங்கு செய்துள்ளது. மேலும் இத்திட்டம் வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகளை மேம்படுத்துவதற்காக ரூபா 3627 மில்லியன் மூன்றுவருட காலத்தில் முதலிடப்படவுள்ளது. மகிந்த சிந்தனை முழு இலங்கையின் வளர்ச்சியையும் எதிரவு கூறுகின்றது. அதன் வெளிப்பாடான இத்திட்டமானது உள்ளூராட்சி அமைப்புக்களை மீள்வலுவடையச்செய்து அவர்களுக்கு சேவைகளை வழங்கி விரைவுபடுத்துவதுமாக அமைக்கப்பட்டுள்ளது. மேலும் உள்ளூராட்சி அமைப்புக்களை ஒரு புதிய யுகத்திறகு இட்டுச் சென்று வடக்கு மாகாண வளர்ச்சிக்கு உதவுமென திடமாக நம்புகின்றேன்.

பசில் ராஜபக்ஷ,
பொருளாதார அபிவிருத்தி அமைச்சா.

### கௌரவ அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா அவர்களின் வாழ்த்து செய்தி

உளளூர் சேவை மேம்பாட்டின் மூலம் வடமாகாண உள்ளூராட்சி மன்றங்கள் உன்னத சேவையை நுகர தலைப்படும் உத்தமமான வேளையில் கருத்திட்டத்தின் வெற்றிக்காக வாழ்த்துவதில் பேருவகை அடைகிறேன்.

இக்கருத்திட்ட அங்குரார்ப்பணமானது மகிந்த சிந்தனையை அடியொற்றி வடக்கின் வசந்தத்தை மக்கள் அனுபவிக்க தளமிட்டு தருகிறது. உள்ளூராட்சியின் மகோன்னத தத்துவங்கள, செயல்திறன் மிக்க சேவை மூலமாக மிளிரவதன் மூலம ஜனநாயக விழுமியங்களை யதார்த்தமாக்குவதற்கு உள்ளூர் சேவை மேம்பாட்டுத்திட்டம் வழிவகுத்து தந்திருப்பதானது வடமாகாண மக்களுக்கு இலங்கை அரசின் நலலெண்ண தூதாக கருதப்படவேண்டும்.

காலத்தின் மாற்றத்திற்கேற்ப சேவை வழங்கலுக்கான புதிய பங்கேற்பு நன்முயற்சி இத்திட்டத்தினூடே அரசின் கடமைக்கு மக்கள் தோள் கொடுக்கும் சான்றாக மிளிரும. இத் தருணத்தில் வடமாகாண உள்ளூராட்சியின் தூண்களாம் அமைச்சு, திணைக்களம் மற்றும் திட்டப்பிரிவினை வாழ்த்துவதுடன் திட்டத்தின் பலன் வடமாகாணத்தின் ஏற்றத்திற்கு கட்டியம் கூறவேண்டி நல்வாழ்த்துக்களை நவில்கிறேன்.

கே.என்.டக்ளஸ் தேவானந்தா,
பாரம்பரிய மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சு.

### கௌரவ ஆளுநர் மேஜர் ஜெனரல்.ஜி.ஏ.சந்திரசிறி அவர்களின் வாழ்த்துச் செய்தி

வடக்கு, கிழக்கு மாகாணத்தின் பிரதேச. கிராமிய மற்றும சிறு நகர அபிவிருத்தி முன்னெடுப்பின் (கம-நெகும) முதலாவது கட்ட நிகழ்வில் இவ் ஆசிச் செய்தியை வழங்குவதில் நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

வடக்கு மாகாணத்தின் சமாதான விடியலுடன் கூடிய இவ வேளையிலே உட்கட்டமைப்பு வசதிகளை மீளமைத்தல், வினைத்திறனுடன் கூடிய நிர்வாகம் மற்றும் சேவை வழங்கல், வாழ்வாதாரத்தை மீட்டெடுத்தலும் அதனை விருத்தி செய்தலும் என பல்வேறுபட்ட செயற்றிறன் மிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

"வடக்கின் வசந்தம்" ஊடாகவும் அரசாங்கத்தின் ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள் மூலமாகவும் குறித்த எண்ணிக்கையான அபிவிருத்தித் திட்டங்கள் வடக்கின் உட்கட்டுமான வசதிகளை விருத்திசெய்வதற்காகவும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காகவும் நிறைவேற்றப்பட்டுள்ளன. அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான, உறுதியான முயற்சிகளால் வடக்கு மாகாணம் முழுவதும் சமாதான சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் வடக்கு மாகாணத்தின் உள்ளூர் பொருளாதார நிலை உயர்வடைந்துள்ளதுடன் பொருளாதார நடவடிக்கைகளிலும் ஒரு முனைப்பான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. ஜனநாயக ரீதியாக தெரிவுசெய்யப்பட்ட உள்ளூராட்சி சபைகளானது வீதி அமைத்தல் மற்றும் வீதி பராமரிப்பு, வடிகாலமைப்பு, பாலம், மதகு நிர்மாணம், பொது கட்டடங்கள், சந்தைகள், கிராமிய நீர் விநியோகம், நூலகம் போன்ற விரிவான தொழிற்பாட்டு எல்லைகளை நிறைவேற்றுவதற்கென அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனங்களாக உள்ளன. எனினும் உள்ளூராட்சி சபைகளின் நிதிக் கட்டுபபாடுகள காரணமாக அவை தமது செயற்பாடுகளை வினைத்திறனாக வெளிப்படுத்த முடியாத நிலையிலுள்ளன.

பிரதேச,கிராமிய மற்றும் சிறு நகர அபிவிருத்தி முன்னெடுப்பன் ஊடாக அரசாங்கம் உள்ளூராட்சி சபைகளை மையமாகக் கொண்டு சேவை வழங்கலில் அவற்றின் செயற்றிறனை வலுப்படுத்த உத்தேசித்துள்ளது. மூன்று வருட திட்ட காலப்பகுதி முழுவதுக்குமான 3627 மில்லியன் ரூபா முதலீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. கிராமிய வீதிகள் புனரமைப்பு, வடிகாலமைப்பு முறைமை, நீர் விநியோகம, சந்தைகள், விளையாட்டு மைதானங்கள் முதலானவை இத்திட்டம் மூலம் மேற்கொள்ளப்படவிருக்கிறது. உள்ளூராடசி சபைகளின் திட்டங்கள் அதற்கு பொறுப்பான உள்ளூராட்சி சபை மக்களால் தெரிவு செய்யப்பட்டு அவர்களின் பங்கேற்புடன் நடைமுறைப்படுத்தப்படவிருக்கின்றன.

இந்தத் திட்டத்தின் முதலாவது கட்டத்தில் 40 உப கருத்திட்ட முன்மொழிவுகள் அனுமதியளிக்கப்பட்டிருப்பதுடன் இதற்கான வேலைகள் 13.07.2011இல் ஆரம்பமாக உள்ளன. 40 உப கருத்திட்டங்களுக்கான மொதத முதலடு ரூபா 302.95 மில்லியன் ஆகும். 28.06.2011இல் நடைபெற்ற இரண்டாம் கட்டத்துக்கான திட்ட முன்மொழிவு குழுக் கூட்டத்தில் எண்பது உப கருத்திட்ட முன்மொழிவுகள் அனுமதியளிக்கப்பட்டுள்ளதுடன் ரூபா 665.95 மில்லியன் முதலீட்டுடன் இவற்றுக்கான வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

இத்திட்டமானது உள்ளூராட்சி சபைகளுக்கு ஒரு பெரும் வரப்பிரசாதமாக அமைவதுடன் அப் பிரதேச மக்களுக்கு சிறந்த பலாபலன்களைப் பெற்றுக் கொடுக்கக்கூடிய ஒன்றாகவும் மிளிர்கின்றது. வடக்கில் இந்த திட்டமுன்னெடுப்பை அறிமுகப்படுத்தி ஆரம்பித்து வைத்தமைக்காக நான் மரியாதைக்குரிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அவர்களுக்கு நன்றி கூறுகின்றேன். எங்களது அபிவிருத்தி முயற்சிகளுக்கு தொடர்ச்சியான ஒத்துழைப்பையும் ஊக்குவிப்பையும் வழங்கிவரும் மாண்புமிகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களுக்கும் நான் நன்றிகளை தெரிவிக்கின்றேன்.

இத்திட்டத்தின் முழுமையான வெற்றிக்காக நான் வாழ்த்துகிறேன்.

மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, ஆளுநர், வடக்கு மாகாணம.

# இந்தியாவே விடுதலைப்புலிகளை ஆதரிக்கும் நிலைமை ஏற்படும்

## திருமாவளவன் தெரிவிப்பு



இந்தியாவே விடுதலைப்புலிகளை ஆதரிக்கும் நிலை வரும் என சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் கூறியுள்ளார்.

இலங்கை ஜனாதிபதியையும் அவரைச் சார்ந்தவர்களையும் அனைத்துலக நீதிமன்றம் தண்டிக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவாக விடுதலைச் சிறுத்தைகளின் மாபெரும் கையொப்ப இயக்கம் நிகழ்ச்சி நேற்று சென்னையில் ஆரம்பமாகியது. இதனை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன் ஆரம்பித்து வைத்தார். அப்போது செய்தியாளர்களிடம் உரை யாற்றிய திருமாவளவன் மத்திய அரசாங்கத்தை சர்வதேச சமூகம் மட்டும் தான் பணிய வைக்க முடியும். இந்திய அரசின் வெளியுறவுக் கொள்கையே ஈழம் கூடாது என்பதுதான். என்றைக்கு ராஜபக்ஷவோடு இந்தியாவுக்கு கடுமையான முரண்பாடு ஏற்படுகிறதோ அன்றைக்கு இந்தியாவே விடுதலைப்புலிகளை ஆதரிக்கிற நிலை வரும்.

விடுதலைப்புலிகளை ஆதரித்து தமிழீழம் பெற்றுத் தருகிறோம் என்ற நிலைப்பாட்டை எடுப்பார்கள்.

இந்திராகாந்தி அம்மையார் அன்றைக்கு ஜெயவர்த்தனா அரசை மிரட்டுவதற்காக போராளிகளை இந்தியாவுக்கு அழைத்து வந்து பயிற்சி கொடுத்தார். போராளிகள் யாவரும் அதை கேட்கவில்லை.

அன்றைக்கு அவர்களுக்கு பயிற்சி கொடுத்ததும் இந்திய அரசுதான். ஆயுதங்கள் கொடுத்ததும் இந்திய அரசு தான்.

ஐந்து குழுக்களுக்கு பயிற்சி கொடுத்து அவர்களுக்கு ஆயுதங்களை அள்ளி கொடுத்து ஜெயவர்த்தனாவுக்கு எதிராக கலவரங்களை உண்டுபண்ணுங்கள் என்று கூறியது இந்திய அரசுதான். ஜெயவர்த்தனா பணிந்த பின்னர் ஆயுதங்களை கீழே போடுமாறு போராளிகளிடம் கூறினார்கள். அப்போது பிரபாகரன் மட்டும் அதனை மறுத்தார்.

உங்களுக்காக ஒன்றும் நாங்கள் ஆயுதம் ஏந்தவில்லை. எங்களுக்காகத்தான் ஆயுதம் ஏந்தினோம் என்று அன்று உரைத்தார். இதுதான் அவர்களுக்கிடையில் இருக்கும் முரண்பாடு. சர்வதேச அளவில் இலங்கை அரசோடு முரண்பாடு வரும்போது மட்டும் தான், இந்திய் அரசு பணியுமே தவிர தனிப்பட்ட முறையில் தமிழ்நாட்டில் நடத்துகிற போராட்டங்களால் இந்திய அரசு பணியாது.

சர்வதேச சமூகத்தின் அழுத்தம் வரும் போது ஈழம் கூடாது என்கிற இந்திய அரசின் வெளியுறவுக் கொள்கை மாறும். இலங்கை அரசாங்கம் இந்தியாவை சார்ந்து இருக்கிற வரையில் இந்தியா ராஜபக்ஷவுக்கு ஆதரவாக இருக்கும்.

ராஜபக்ஷ இந்தியாவை எதிர்க்கிற நிலையில் விடுதலைப்புலிகளை இந்தியா ஆதரிக்கும் நிலை வரும். இந்தியாவே விடுதலைப் புலிகளை மறுபடியும் உயிர்ப்பிக்கும் சிங்கள அரசோடு இந்திய அரசாங்கம் முரண்படுகிற போது இந்த நிலை ஏற்படும் என்றார். (ஸ்ரீ-2-4)

# இலங்கைக்கு பொருளாதார தடை விதிக்க வேண்டும்

## டி.ராஜேந்தர் ஆர்ப்பாட்டம்



பெற்றோல், டீசல், சமையல் எரிவாயு விலையுயர்வை எதிர்த்து இலட்சிய தி.மு. சார்பில் சைதாப்பேட்டை பனகல் மாளிகை எதிரில் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இலட்சிய தி.மு.க தலைவர் டி.ராஜேந்தர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு விலை உயர்வுக்கு எதிராக கண்டன கோசங்கள் எழுப்பினார். ஆர்ப்பாட்டத்தில் டி.ராஜேந்தர் பேசியதாவது.

மத்திய அரசு பெற்றோல், டீசல், சமையல் எரிவாயு போன்றவற்றின் விலைகளை உயர்த்தி வருவதால் ஏழை, நடுத்தர மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இலங்கைக்கு மத்திய அரசுதான் பெற்றோல் ஏற்றுமதி செய்கிறது.

ஆனால், இலங்கையில் பெற்றோல் விலை லீற்றருக்கு 50 ரூபாய். ஆனால், பெற்றோல் இந்தியாவில் லீற்றருக்கு 67 ரூபாய் கட்டணம் நிர்ணயித்துள்ளன.

பாகிஸ்தான் ஒரு லீற்றர் பெற்றோல் 45 ரூபாய், பணக்கார நாடான அமெரிக்காவில் 50 ரூபாய், நமது நாட்டில் தான் அநியாயத்துக்கு விலை ஏற்றி உள்ளனர். பெற்றோல், டீசல், சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலை உயர்வை இரத்து செய்யவேண்டும். இலங்கைக்கு பெற்றோல் ஏற்றுமதி செய்வதை நிறுத்த வேண்டும் .பொருளாதார தடை விதிக்க வேண்டும் என்ற தமிழக அரசு தீர்மானத்தை மத்திய அரசு நிறைவேற்ற வேண்டும் என்றார். (ஸ்ரீ-4)

# ஆப்கான் ஜனாதிபதியின் சகோதரர் சுட்டுக்கொலை



ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி கர்ஸாயின் சகோதரர் அகமது கர்ஸாய் நேற்று படுகொலை செய்யப்பட்டார்.

கந்தகர் மாகாண கவுன்சில் தலைவ்ரும் சர்ச்சைக்குரிய அரசியல்வாதியுமான அகமத்து கர்ஸாய் சுட்டுக்கொல்லப்பட்டதை ஆப்கானிஸ்தான் ஜனாதிபதியின் செய்தி தொடர்பாளர் வஹீர் ஓமர் உறுதி செய்தார்.

முன்னதாக அகமது கர்ஸாய் இல்லத்தில் தனது பாதுகாவலர் ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டதாக தகவல் வெளியானது. பின்னர் மாகாண கவுன்சில் கட்டடத்துக்குள் அவர் நுழைந்தபோது அடையாளம் தெரியாத நபரால் சுட்டுக்கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்தப் படுகொலைச் சம்பவத்துக்கு தலிபான் பயங்கரவாத இயக்கம் பொறுப்பேற்றுள்ளது. அகமது பவாலி கர்ஸாய் மீது ஊழல் முறைகேடுகள் குவிந்து வந்த நிலையில் அவரை காப்பாற்றும் நடவடிக்கையில் ஜனாதிபதி ஹமீத் கர்ஸாய் ஈடுபட்டு வந்ததாக கூறப்படுகிறது. அண்மைக்காலமாக போதைப் பொருள் கடத்தலில் அகமது கர்ஸாய் நேரடியாக ஈடுபட்டு வந்ததாகவும் நடுநிலையாளர்கள் சிலர் கூறியுள்ளனர்.

இந்த நிலையில் அகமது கர்ஸாய் படுகொலை செய்யப்பட்டிருப்பது ஆப்கானிஸ்தான் அரசியல் சூழலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அகமது கர்ஸாயை கொலை செய்வதற்கு ஏற்கனவே பலமுறை முயற்சிகள் நடந்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-4)

# மத்திய அமைச்சரவை மாற்றியமைப்பு

## தி.மு.க.வினர் யாரும் இடம்பெறவில்லை

மன்மோகன் சிங் தலைமையிலான மத்திய அமைச்சரவை நேற்று மாற்றியமைக்கப்பட்டது. இதன் மூலம் மொத்தம் ஏழு அமைச்சர்களை நீக்கியுள்ள பிரதமர் புதுமுகங்கள் 8 பேருக்கு வாய்ப்பளித்துள்ளார்.

தயாநிதிமாறன் உட்பட ஏழு அமைச்சர்கள் மத்திய. அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். ஜெய்ராம் ரமேஷ், வீரப்ப மொய்லி ஆகியோரது துறைகள் மாற்றப்பட்டுள்ளன. வி.கிஷோர் சந்திராத்தியோ, பொன்னி பிரசாத் வர்மா திஷே திரிவேடி ஆகியோர் மத்திய அமைச்சரவையில் புதிதாக இடம்பெற்றுள்ளனர்.

நிதி பாதுகாப்பு உள்துறை மற்றும் வெளியுறவுத்துறை ஆகியதுறைகளில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை.

திரிணாமுல் காங்கிரஸை சேர்ந்த தினேஷ் திரிவேதிக்கு ரயில்வே அமைச்சர் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

**தி.மு.க. இடம் பெறவில்லை.**

ஆ.ராசா மற்றும் தயாநிதிமாறன் ஆகியோர் விலகியதை அடுத்து மத்திய அமைச்சரவையில் தி.மு.க.வின் இரண்டு அமைச்சரவை இடங்கள் காலியாக இருந்தன.

இது தொடர்பாக அண்மையில் தி.மு.க. தலைவர் கருணாநிதி மத்திய நிதியமைச்சர் பிரணாப்முகர்ஜியுடன் ஆலோசனை நடத்தினார். தி.மு.க. சார்பில் அமைச்சர்களை புதிதாக நியமிக்க அக்கட்சி தலைமை விருப்பமில்லை எனத் தெரிகிறது. இதன் தொடர்ச்சியாக இன் றைய மத்திய அமைச்சரவை மாற்றத்தில் தி.மு.க. இடம்பெறவில்லை. (ஸ்ரீ-4)

# பங்களாதேஷில் பஸ் கவிழ்ந்து 53 குழந்தைகள் பலியாகினர்

பங்களாதேஷில் உள்ள சிட்டகாங் மாவட்டத்தில் பள்ளிக் குழந்தைகளுக்கான காற்பந்து போட்டி நடந்தது. இதில் கலந்து கொள்ள ஒரு பஸ்சில் பள்ளிக் குழந்தைகள் ஏற்றி செல்லப்பட்டனர். அந்தப் பஸ்சில் 8 முதல் 12 வயது வரையிலான 80 குழந்தைகள் இருந்தனர்.

அந்த பஸ் மலைப் பகுதியில் சென்று கொண்டிருந்தது. குழந்தைகள் ஆடிப்பாடி மகிழ்ச்சியுடன் இருந்தனர். அப்போது மழை பெய்ததால் மேகமூட்டமாக இருந்தது.

இதைத்தொடர்ந்து நிலை தடுமாறிய பஸ், வீதியோரம் இருந்த பள்ளத்தில் கவிழ்ந்து உருண்டது. பின்னர் 50 அடி பள்ளத்தில் விழுந்தது. அதில் 53 குழந்தைகள் அதே இடத்தில் பலியாகினர். 15 பேர் காயம் அடைந்தனர். உடனே அவர்கள் அனைவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் 10 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. (ஸ்ரீ-2)

# அட்லாண்டிஸ் விண் ஓடத்துக்கு ஆபத்து

விண்வெளியில் மிதந்து கொண்டிருக்கும் செயற்கைகோள் பாகம் மோதும் வாய்புள்ளதால் அட்லாண்டிஸ் விண் ஓடத்துக்கு ஆபத்து எதுவும் ஏற்படாமலிருக்க அமெரிக்க விண் வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா தீவிர முயற்சி செய்து வருகிறது.

அட்லாண்டிஸ் விண் ஓடத்தை அமெரிக்கா சமீபத்தில் விண்ணில் செலுத்தியது. இந்த விண்ணோடம்விண்ணில் கட்டப்பட்டுவரும் விண்வெளி நிலையத் துடன் வெற்றிகரமாகத் தன்னைப் பொருத்திக் கொண்டு விட்டது. விண் நிலையத்தை உருவாக்குவதற்கான பாகங்களை 12 ஆவது முறையாக அட்லாண்ஸ் எடுத்துச் செல்கிறது. இந்நிலையில் 1970 ஆம்ஆண்டு செலுத்தப்பட்டு இப்போது செயலிழந்து விண்ணில் மிதந்து கொண்டிருக்கின்ற ரஷ்ய செயற்கைகோளின் ஒரு பாகமானது அட்லாராண்டிசும் சர்வதேச விண்வெளி நிலையமும் உள்ள இடத்துக்கு மிக நெருக்கமாகப் பறந்து வருவது தெரிய வந்திருக்கிறது. இதன் அளவு இன்னும் சரியாகத் தெரியவில்லை.

இது அட்லாண்டிசில் அல்லது சர்வதேச விண்நிலையத்தில் மோதினால் அவற்றுக்கு மிகப்பெரிய சேதத்தை உண்டாக்கக் கூடும் என்று நாசா விஞ்ஞானிகள் கூறினர். அட்லாண்டிஸ் சர்வதேச விண்நிலையத்தின் அருகில் முக்கால் கிலோமீற்றர் சுற்றளவுக்குப் பாதுகாப்பு வளையம் ஒன்றை ஏற்படுத்தவும் முடிவு செய்துள்ளனர்.

பல்வேறு நாடுகளிலிருந்து பல ஆண்டுகளாக விண்வெளியில் பல செயற்கைக் கோள்கள் செலுத்தப்பட்டு வருகின்றன.

இவைகாலாவதியான பின்னரும் தொடர்ந்து விண்வெளியில் மிதந்துவரு கின் றன. இதுபோல் விண்ணில் மிதக்கும் 22 ஆயிரம் செயற்கைக்கோள் பாகங்களையும் பொருள்களையும் விஞ்ஞானிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். மணிக்கு 17 ஆயிரம் கி.மீ. வேகத்தில் விண் நிலையமும் அட்லாண்டிஸ் பூமியைச் சுற்றி வருகின்றது. (ஸ்ரீ-4)

காலொரு பாவி கழுத்தொரு மாபாவி
கோலி இழுக்க கொடும்பாவி வெட்டினனோ
-சோமசுந்தரப் புலவர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# வேள்வியில் பலியான கடாக்களின் ஆத்மாக்கள் எழுதிய கடிதம்

அன்புமிகு ஆசிரியருக்கு வணக்கம்! உயிரோடு இருக்கும் போது எழுதமுடியாமல் போன இக் கடிதத்தை தேகாந்த நிலையில் எழுதுகின்றோம்.

தேகாந்த நிலையில் கடிதம் எழுதுவது யார் என்று நீங்கள் சிந்திப்பீர்கள். கவுணாவத்தை வேள்வியில் வெட்டிச் சரிக்கப்பட்ட கடாக்கள்தான் நாங்கள்.

பலியாகிப்போன கடாக்களின் கடிதம் தானே என்று இதனை இருட்டடிப்புச் செய்து விடாதீர்கள். என்ன செய்வது நாங்கள் வாய்பேச முடியாத ஜீவராசிகள். கவுணாவத்தையில் எங்களுக்கு நடந்த கதிபோல் உங்களுக்கு நடந்திருந்தால் பக்கம் பக்கமாக எழுதி குய்யோ முறையோ என்று கூப்பாடு போட்டிருப்பீர்கள்.

நாங்கள் ஆடுகள் என்பதால் எங்கள் கழுத்தை வெட்டுவதில் உங்களுக்கு ஆனந்தம். என்னே கொடுமையிது.

எங்களை வளர்த்தவர்கள் நீங்கள்தான். நாங்கள் குட்டிகளாக இருந்தபோது எங்கள் எசமான், எசமானனின் பிள்ளைகள் எங்களை தூக்கி முத்தமிட்டு வளர்த்ததைப் பார்த்தபோது நாங்கள் அடைந்த மகிழ்விற்கு அளவேயில்லை.

கிடங்கு வெட்டி எங்களை அதனுள் இறக்கி உணவு ஊட்டி, முதுகைத்தடவி நீங்கள் எங்கள் மீது காட்டிய அன்பை நினைத்தபோதெல்லாம் வாய்பேச முடியாத நாங்கள் எங்கள் உடலை அசைத்து உங்களுக்கு நன்றி செலுத்தினோம்.

ஒரு நாள் அதிகாலை வேளை எங்களை மஞ்சள் நீரால் நீராட்டி பூமாலை சூட்டி, தங்கச் சங்கிலி அணிவித்து பட்டுடுத்தி அலங்கரிக்கப் பட்ட லான்ட் மாஸ்ரரில் ஏற்றி ஊர்வலமாக அழைத்துச் சென்றபோது, ஓ! இறைவா உனக்கு பல்கோடி நன்றிகள். எங்கள் எசமான், தான் பெற்ற ஆண் பிள்ளையை எவ்வாறு மாப்பிள்ளைக் கோலத்தில் கண்டு மகிழ்வாரோ! அதேபோல் எங்களையும் அலங்கரித்து மகிழ்கிறாரே! என்று அகமகிழ்ந்தோம்.

கவுணாவத்தை வைரவர் கோயில். அங்கு ஆயிரக்கணக்கான கடாக்கள். என்னே மகிழ்வு.

இன்று சர்வதேச கடாக்கள் தினமோ! என்று நாம் நினைத்தது உண்டு.

சிறிது நேரம் செல்லச் செல்ல வாள் ஏந்தியவர்கள் எம் இனத்தை ஒவ்வொன்றாக வெட்டிச் சரித்தார்கள். ஐயா, என்னை வளர்த்த என் தந்தையே! என்னை வெட்டாதீர்கள் என்று கத்தும் சத்தம் கேட்கிறது. கூடவே வெட்டுண்ட கடாக்கள் நிலத்தில் கிடந்து துடிக்கின்றன.

எப்படி அந்தப் பரிதாபத்தை விபரிப்போம். உங்களால் முடிந்தால் சனல் 4 தொலைக் காட்சியின் கொலைக்களம் ஆவணப்படத்தை பாருங்கள். அது போலத்தான் எங்கள் பரிதாபமும்.

ஓ! நாங்கள் ஒருபோதும் நினைக்காத அந்தப் பெருங் கொடூரத்தை எங்களைத் தூக்கி வளர்த்த எங்கள் எசமானர்களே செய்து விட்டார்கள்.

தந்தை மகனை வெட்டிக் கொன்றால் நிலைமை எப்படியிருக்குமோ அது போலத்தான் எங்களுக்கும் நடந்தாயிற்று.

அன்பார்ந்தவர்களே! நாங்கள் இப்போது மறு உலகத்தில் இருக்கின்றோம். எங்களுக்கு மானிடப்பிறவி கிடைக்க அருள்பாலிப்பதாக, இறைவன் கூறினார். அந்தப் பயங்கரமான பிறப்பு வேண்டாம் எனக்கூறி பிறவா வரம் வேண்டியுள்ளோம்.

எங்கள் வேண்டுதல் இறைவனின் பரிசீலனையில் உள்ளது. அதேநேரம் எங்களை வெட்டிச் சரித்தவர்களின் பாவப் பட்டியல் மிகப்பெரியது. அவர்களுக்கு எப்பிறப்புக்கிடைக்குமோ என்பது எமக்குத் தெரியாது.

# வடக்கு-கிழக்கை மீண்டும் இணைப்பது தமிழீழத்தை வழங்குவதற்கு ஒப்பானது

## கிழக்கு மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

வடக்குக் கிழக்கு மாகாணங்களை இணைக்க கோருவது தமிழீழத்தைக் கோருவதற்கு சமமானது என கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையான் என அழைக்கப்படும் எஸ்.சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு முறக்கொட்டாஞ் சேனையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு கூறியுள்ளார். அத்துடன் வடக்கு கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்கள் தவறான அரசியல் வழி நடத்தல்களினாலும் ஆயுதப் போராட்டத்தினாலும் அழிவுகளைச் சந்தித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். வட்டுக்கோட்டைத் தீர்மானம் என தமிழ் அரசியல் தலைவர்கள் ஒன்று கூடி தமிழீழத்தை பிரகடனப்படுத்தி தமிழ் இளைஞர்களை தீவிரவாதத்திற்கு தள்ளிவிட்டனர். கிழக்கு மாகாணத்தில் தமிழ் அரசியல் தலைவர்கள் வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கு ஆதரவு வழங்கவில்லை. பின்னர் இடம்பெற்ற ஆயுதப் போராட்டத்தில் மட்டக்களப்பு தமிழ் இளைஞர்கள் பலர் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில் இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழலைப் பயன்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப வேண்டும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டால் மட்டுமே அது சாத்தியம். வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைக்கும் போது தமிழ் மக்கள் பெரும்பான்மையாக இருப்பார்கள் என்பது தனிப்பட்ட முறையில் தனக்கும் விருப்பமானது என்ற போதிலும் நடைமுறைச் சாத்தியமற்ற கோரிக்கைகளுக்கப் பின்னால் சென்று மீண்டும் அழிவுகளைச் சந்திக்க முடியாது எனவும் சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார். வடக்கு கிழக்கு சட்ட ரீதியாக இணைக்கப்பட வேண்டுமாயின் கிழக்கில் வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று குறிப்பிட்ட அவர் முஸ்லிம் மற்றும்



சிங்கள மக்கள் மாகாண இணைப்புக்கு எதிராக வாக்களித்தால் தமிழர்கள் தோல்வியுற்று தற்போது கிடைக்கும் சலுகைகளைக் கூட இழக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று கூறியுள்ளார். (ஏ)

# பாடசாலை மாணவர்கள் 500 பேருக்கு வங்கிக் கணக்குகள் ஆரம்பித்து வைப்பு

யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் 500 பேருக்கு இலவச வங்கி கணக்குகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இப்பாடசாலையில் வறுமைக் கோட்டின் கீழுள்ள மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு இந்த கணக்குகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன.

வர்த்தன வங்கியின் அனுசரணையுடன் யாழ்.மாநகரசபை உறுப் பினரும் இப்பாடசாலையின் பழைய மாணவர் சங்கத் தலைவருமான விஜயகாந்த் இந்த வைப்பிற்கான நிதியை வழங்கியுள்ளார்.

ஒவ்வொரு மாணவர்களுக்கும் தலா 100 ரூபாய் வீதம் இந்தப் பணம் வைப்பிலிடப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கான வங்கிப் புத்தகங்கள் கையளிக்கும் நிகழ்வு நேற்று பாடசாலையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் 102 மாணவர்களுக்கு முதற்கட்டமாக வங்கிப் புத்தகம் கையளிக்கப்பட்டது.

இது தவிர மாகாண மட்டப் போட்டியில் வெற்றியீட்டிய இரண்டு மாணவர்களுக்கும் தலா 1000 ரூபாய் வீதம் வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ளது. இதற்கான நிதியையும் மாநகரசபை உறுப்பினர் விஜயகாந்த் வழங்கியிருந்தார். (ஸ்ரீ-2)

# தேர்த்திருவிழா

நவாலி அட்டகிரி கந்தசுவாமி தேவஸ்தான தேர்த்திருவிழா நாளை காலை 11 மணிக்கு இடம்பெறும்.

எதிர்வரும் 15-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் மறுநாள் காலை சனிக்கிழமை பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும். (2-8)

# குருபூர்ணிமா நிகழ்வு

யாழ்.சத்தியசாயி சேவா நிலையத்தில் நாளை குருபூர்ணிமா நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதில் அதிகாலை 4.45 மணிக்கு நகர சங்கீர்த்தனம் இடம்பெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து காலை 8.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி காயத்திரி மந்திரம், வேத பாராயணம், பஜனை என்பன நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து விவசாயத் திணைக்கள பிரதிப்பணிப்பாளர் கே.நாகதாசனின் விசேட சொற் பொழிவும் நடைபெறும்.

நண்பகல் ஒரு மணிக்கு நாராயண சேவையுடன் நிகழ்வுகள் யாவும் நிறைவு பெறும். (ஸ்ரீ

# திருத்தம்

12.07.2011 நேற்றைய தினம் வெளிவந்த ஆசிரியர் தலையங்கத்தின் இறுதிப் பந்தியில் 'ஒருபோதும் தவறில்லை' என்பதை 'ஒருபோதும் தவறுவதில்லை' எனத் திருத்தி வாசிக்கவும். (ஆ-ர்.)

# இலங்கை இளைஞரின் கொலை தொடர்பான தகவல்களை வழங்குபவர்களுக்கு சன்மானம்

## கனேடிய பொலிஸார் அறிவிப்பு

கிறிஸ்டியன் தனபாலன் என்ற இலங்கை இளைஞனின் கொலை தொடர்பாக தகவல்களை வழங்குபவர்களுக்கு 50 ஆயிரம் டொலர்கள் சன்மானம் வழக்கப்படும் என கனடாவின் டொரண்டோ பொலிஸார் அறிவித்துள்ளனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 22ஆம் திகதி 22 வயதான இந்த இளைஞர் இனம் தெரியாத நபர்களின் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார். தனபாலன் மற்றும் அவரது 5 நண்பர்கள் கூடைப் பந்தாட்டம் விளையாடிவிட்டு இரவு வீடு திரும்பிக்கொண்டிருந்த போது மற்றுமொரு குழுவினருடன் ஏற்பட்ட வாய் தர்க்கத்தை அடுத்து ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் தனபாலன் படுகாயமடைந்துள்ளார்.

படுகாயம் அடைந்த தனபாலன் வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இலங்கையில் பிறந்த இந்த இளைஞன் குழந்தை பருவத்தில் பெற்றோருடன் நோர்வேயில் இருந்து கனடாவுக்கு சென்று குடியேறிதாக தெரிவிக்கப்பட்டுள் ளது. (ஸ்ரீ-2)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## கடவுளுக்கு நெருக்கமானவர்



வாழ்க்கையில் முன்னேற்றம் அடை வதற்கு முதலில் தன்னம்பிக்கையும் அடுத்த படியாக இறைவன் மீது நம்பிக்கையும் வேண்டும்.புகழ்ச்சியும் அவமதிப்பையும் கருதாது என்றும் உண்மையை மேற்கொண்டு செய் யும் தியாகமே,சிறந்த தியாகம். தன்னைக் அடக்க பழகிக் கொண்டவன் வேறு எதற்கும் வசப்பட மாட்டான். அவனே வாழத் தகுதி யுள்ளவன். நம்மை நாமே வெறுக்காமல் இருப் பது முதற் கடமை. முன்னேற்றமடைவதற்கு முதலில் சுயநம்பிக்கை அவசியம். உலக நன்மைக்காக அவசியமாயின் உங்களிடமுள்ள அனைத்தையும் தியாகம் செய்யுங்கள்,தூய்மை உடையவன் தான் கடவுளை மிக நெருக்கமானவன் ஆகிறான். உங்களை ஓர் ஏழை என்று எப்போதும் நினைக்காதீர்கள்.பணம் சக்தியல்ல ,நன்மையும் தெய்வ பக்தியுமே சக்தி.

# புங்குடுதீவு மீள்குடியேற்றமும் அபிவிருத்திச் சவால்களும்



பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை Ph.D.Durham
முன்னாள் துணைவேந்தர், வாழ்நாள் பேராசிரியர்.

11. புங்குடுதீவில் இயங்கிய 15 பாடசாலைகளும் மீளவும் இயங்க வைப்பதுடன் மகாவித்தியாலயம், கமலாம்பிகை கனிஷ்ட மகாவித்தியாலயம், சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம், சித்தி விநாயகர் வித்தியாலயம் ஆகியவற்றை இன்றைய கல்வித் தேவையை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் விருத்தி செய்யப்பட வேண்டும்.


புங்குடுதீவுக் கல்வியில் இன்று காணப்படும் தொய்வு நிலையை நீக்க நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். இதுபோல் சுகாதாரத் துறையும் மேம்படுத்தப்பட வேண்டும். இன்று வைத்தியசாலை இருப்பினும் அங்கு கடந்த பல வருடங்களாக நிரந்தர வைத்திய அதிகாரியும் தாதிகளும் இல்லாமல் இருப்பது இவ்வைத்தியசாலை முழுமையாக இயங்க முடியாமல் இருக்கின்றது. இக்குறைபாட்டை நீக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

12.யாழ்ப்பாணம்-குறிகட்டுவான் பாதை அகலாக்கப்பட்டு காப்பெற் பாதையாக மாற்றப்பட வேண்டும். இதன் மூலம் புங்குடுதீவிலிருந்து யாழ்ப்பாண நகருக்கு 1/2 மணித்தியாலத்துக்குள் பயணிக்க முடியும். இச்செயற்பாட்டினால் புங்குடுதீவு மக்கள் தூரத்தில் இருக்கின்றோம் என்ற உணர்வு குறைந்து யாழ். நகரில் தொழில் புரிந்தாலும் புங்குடுதீவில் வாழலாம் என்ற நிலை ஏற்படும். இத்தீவில் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி ஏற்படும் வரை இங்கு வாழும் மக்கள் யாழ்ப்பாண நகரத்தின் சேவைத் துறைகளிலேயே தொழில் புரிய வேண்டிய நிலை உண்டு.

13.உள்ளூரில் வேலை வாய்ப்பை பெருக்கக்கூடிய குறு சிறு நடுத்தர முயற்சிகள் ஊக்குவிக்கப்பட வேண்டும். சுய முயற்சிகள், பகுதி நேர முயற்சிகள் மூலமும் வருமானத்தை அதிகரிப்பதுடன் தற்சார்பு நிலையை மேம்படுத்தலாம்.

14.குறிகட்டுவான் இறுபிட்டி ஆகிய இரண்டு இடங்களுக்கும் யாழ்.நகரில் இருந்து தனித்தனியான இ.போ.ச. /தனியார் பஸ் சேவைகள் இடம்பெறவேண்டும்.கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்தில் இருந்து இறுபிட்டி ஊடாக இடம்பெற்றது. பின்னர் குறிகட்டுவான் இறங்குதுறை அமைக்கப்பட்ட பின்னர் யாழ்ப்பாணம் குறிகட்டுவான் சேவை முதன்மை பெற இறுபிட்டி சேவை படிப்படியாக குறைந்து இல்லாமலே போய்விட்டது. பெருங்காட்டுச்சந்தி-இறுபிட்டி இடையிலான வீதி சேதமடைந்ததனால்தான் பஸ் சேவை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது எனக் கூறப்பட்டுள்ளது.

தற்பொழுது இவ்வீதி சீர்செய்யப்பட்டிருப்பதனால் இறுபிட்டிக்கான பஸ் சேவை மீளவும் ஆரம்பிக்கப்பட வேண்டும். இவ் பஸ் சேவையை அல்லப்பிட்டி, மண்கும்பான், சாட்டி, செட்டிக்குளம், பெருங்குளம் அம்மன் கோவில் வழியாக இயக்கப்படின் இவ்வழித்தடத்தில் அமைந்துள்ள மேற்கூறப்பட்ட கிராம மக்கள் பெரும் நன்மை பெறுவர். இ.போ.ச. சேவை ஆரம்பிக்கப்படின் இதைத் தொடர்ந்து தனியார் பேருந்து சேவையும் பின் தொடரும்.




15.புங்குடுதீவில் சுற்றுச்சூழல், சுற்றுலாத்துறை வளர்ச்சிக்குப் பல சாதகமான பௌதிக சூழ்நிலைகள் காணப்படுகின்றது. இங்கு பல சிறு தீவுகள் இருப்பது இத்துறை வளர்ச்சிக்கு சாதகமாக காணப்படுகின்றது. நகர மக்கள் இன்று சன சஞ்சடியற்ற அமைதியான சூழலைலேயே தங்கள் விடுமுறையைக் கழிக்க விரும்புகின்றனர். இன்று ஹோட்டல்களில் போத்தல் நீரைப் பயன்படுத்துவதால் புங்குடுதீவில் நன்னீர் இல்லை என்ற குறைபாடு சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கு தடையாக அமையாது. முன்னைய காலம் போல் ஹோட்டல்களின் செயற்பாட்டிற்கு பெருமளவு குடிநீர் உள்ளூரில் இருந்து பெறவேண்டியது இல்லை. இதனால் ஏனைய தேவைகளுக்கான நீரை உள்ளூரில் பெற முடியும்.

16.புங்குடுதீவில் புகழ்பெற்ற சைவத் தலங்கள், திருவிழா நடைபெறும் பெரிய கோயில்கள், சிறிய கோயில்கள் பல இருக்கின்றனர். இக் கோயில்களின் சிறந்த செயற்பாட்டை புங்குடுதீவில் இன்று வாழும் மக்களால் மாத்திரம் சரியாக முன்னெடுக்க முடியாது. இக்கோயில்களின் திருப்பணி வேலைகளை மற்றும் நாளாந்த செலவுகளையும் பிற நாடுகளிலும்,கொழும்பில் மற்றும் யாழ்ப்பாணத்தில் வாழும் மக்களாலேயே கவனிக்கப்படுகின்றது. இதனால் ஆலயங்களின் சிறந்த செயற்பாட்டிற்கு பிற் நாடுகளில் வாழும் புங்குடுதீவு மக்களை கோயில் முகாமைத்துவத்துக்குள் நல்ல முறையில் உள்வாங்கப்பட வேண்டும்.

ஒரு கிராமத்தில் அல்லது ஒரு பிரதேசத்தில் மக்கள் மன நிறைவுடன் வாழ்வதற்கு இருதுறைகளில் அபிவிருத்தி காணப்பட வேண்டும்

1.வாழ்வதற்கான வசதிகள் (havitability)

2.நல்ல சமுதாயக் கட்டமைப்பு - (Good community setup)

இன்று இரண்டு நிலையிலும் இத்தீவு பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கி நிற்கின்றது. இங்கு வாழும் மக்களுக்கு சிறந்த வாழ்வாதார நிலை, தொழில் வாய்ப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே இருக்கின்றன. இதனால் பெரும்பான்மையான மக்கள் வேலை தேடி பிற ஊர்களுக்கு செல்ல வேண்டிய நிலையில் இருக்கின்றார்கள். இக்கிராமத்தின் இன்றைய பொருளாதாரம் வெளிப்பொருளாதாரத்தில் தங்கியுள்ளதாக இருக்கின்றது. உள்ளூர் பொருளாதார செயற்பாட்டின் பங்களிப்பு மிக குறைந்த விகிதமேயாகும். இதனால் உள்ளூர் பொருளாதாரத்தை முன்னெடுப்பதன் மூலமே வேலை வாய்ப்புக்களைப் பெருக்க முடியும். அடுத்ததாக கல்வி, சுகாதாரம் மற்றைய சேவை வசதிகள் இல்லாமலும் இருக்கும் வசதிகள் தரம் குறைவாக இருப்பதனால் இங்கு மத்தியதர வகுப்பு மக்கள் வாழ்வதற்கு விரும்புகிறார்கள் இல்லை.

கிராமத்தின் வளர்ச்சிக்கு சிறந்த சமுதாய கட்டமைப்பு மிகவும் முக்கியமானது. நீண்ட காலமாக வளர்த்தெடுக்கப்பட்ட சமுதாயக் கட்டமைப்பு முழுமையான இடப் பெயர்வின் காரணமாக பெரும் பாதிப்புக்குள்ளாகியது. இப்பாதிப்பி லிருந்து இத்தீவு இன்னும் முழுமை யாக விடுபடவில்லை. இத்தீவின் எதிர்கால வளர்ச்சி சிறந்த சமுதாய கட்டமைப்பின் விருத்தியில் தங்கியுள் ளது எனலாம்.

புங்குடுதீவை விருத்தியாக்க வேண்டின் அங்கு மக்கள் வாழ்வ தற்கான வசதிகளை உருவாக்கி மற்றும் நல்ல சமுதாயக் கட்ட மைப்பை வளர்த்தெடுப்பின் மக்கள் துரிதமாக மீள்குடியேறுவர். இதற்கு நல்ல தூரநோக்கு, நற்பணி, பொருத்தமான அபிவிருத்தி, தந்திரோபாயங்களை கடைப்பிடித்தால் நாம் விரும்பும் இலக்குகளை குறுகிய காலத்தில் அடைய முடியும்.இதற்கு அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்ட வர்கள் இதற்கு அரசு மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் சிவில் சமுகத்தவர்கள் இப்பிரதேசத்தின் அபிவிருத்தியில் கூடிய அக்கறை செலுத்த வேண்டும். புங்குடுதீவின் அபிவிருத்தியை இத்தீவை மைய மாக மாத்திரம் கொள்ளாது எல் லாத் தீவுகளுக்கும் பொருத்தமான அபிவிருத்தி திறமைகளுடன் இணைந்து முன்னெடுக்கப்பட வேண்டும். நெடுந்தீவு, நயினாதீவு, அனலதீவு, எழுவைதீவு, லைடன் தீவு, மண்டைதீவு, காரைநகர் ஆகியன இன்றும் சில செயற்பாடு களில் ஒரு பிரதேசமாக இருக்கின் றன. தீவகக் கல்விவலயம், நீதி மன்றம் போன்றன இதற்கு உதார ணங்களாகும். மேலும் இத்தீவக மக்கள் சமூக ரீதியாகவும் தொடர்பு பட்டவர்களாக இருக்கின்றனர். இதனால் புங்குடு தீவின் அபிவிருத்தி தீவக அபிவிருத்தியின் ஒரு பகுதியாகவும் அமைந்ததால்தான் இவ் அபிவிருத்தி நிலைத்து நிற்கும் பண்பைப் பெறும். யாழ்ப்பாண மாவட்டம் 5 முக்கியமான பிரதே சங்களை உள்ளடக்கியது. பெரிய யாழ்ப்பாணம், வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவகம் இவ்வைந்து தீவகமும் இன்று சகல துறைகளிலும் பின் நிற்கின்றது.

யுத்தத்தால் பெரு அழிவுக்குட்பட்டும் அந்தப் பிரதேசத்தை சார்ந்தவர்கள் பெரும் எண்ணிக்கையில் மீள்குடியேறாமலும் வீட்டு வளம் பெருமளவு சேதமாக்கப்பட்டும் கடல் வளம் கூடிய பயன் உருவப்பட்டும் மக்கள் குடிநீருக்காக பெரும் கஷ்டத்திற்குள்ளாகியும் வாழ்கின்றார்கள். இப்பகுதியில் கல்வி, சுகாதார, மின்சாரம் மற்றும் சேவை வசதிகளில் ஏனைய நான்கு பிரிவுகளிலும் பார்க்க பின்னிலையில் காணப்படுகின்றது. கடல் வழிப் போக்குவரத்தில் நெடுந்தீவு, எழுவைதீவு, நயினாதீவு, அனலதீவு மக்கள் இன்னும் பெரும் சிரமத்தை எதிர்நோக்கின்றார்கள். தொலைத் தொடர்பில் மாத்திரம்தான் முன்னர் அனுபவித்த துன்பங்களை இன்று இவர்கள் அனுபவிக்கவில்லை. இதனால் யாழ்ப்பாண மாவட்டத்தின் அபிவிருத்தியில் தீவக அபிவி ருத்திக்கு முன்னுரிமை அளிக்க வேண்டியது நியாயபூர்வமான தாகும்.

இத்தகைய அபிவிருத்திக்கு சம்மந்தப்பட்ட மக்களின் விழிப் புணர்வு, பங்குபற்றல் பண்பு, அவர்களிடையே காணப்படும் ஒற்றுமை, கடின உழைப்புமே இன்று தேவைப்படும் முக்கிய விடயங்களாகும். இத்தீவின் அபிவிருத்தியில் பிற நாடுகளில் வாழும் புங்குடுதீவு மக்கள் கூடிய பங்களிப்பை நல்க முடியும். (முற்றும்)

## சந்தர்போலின் அபார ஆட்டத்தால்

# 3வது டெஸ்ட் சமனிலையானது

# தொடரை வென்றது இந்தியா



இந்திய-மேற்கிந்தியதீவு அணிகளுக்கிடையே நடந்த 3 வது டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிந்தது. இதையடுத்து 1-0 என்ற கணக்கில் தொடரை வென்ற இந்தியா, மேற்கிந்தியதீவுகள் மண்ணில் முதல் முறையாக ஒரு நாள் மற்றும் டெஸ்ட் தொடரைக்கைப் பற்றிசாதனைபடைத்தது. முன்னணி வீரர்கள் இல்லாத நிலையில் மேற்கிந்தியதீவுகள் சென்ற இந்திய அணி ஒரு இருபது -20 போட்டியில் வென்றதுடன் 3 - 2 என்ற கணக்கில் ஒருநாள் தொடரையும் கைப்பற்றியது. அடுத்து இரு அணிகளும் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் மோதின.

ஜமைக்காவில் நடந்த முதல் டெஸ்ட்டில் இந்தியா வென்று முன்னிலை பெற்றது. அடுத்து பார்பராசில் நடந்த 2 வது டெஸ்ட் சமனில் முடிந்தது. இந்தியா 1-0 என முன்னிலை வகிக்க கடைசி டெஸ்ட் டொமினிக்காவில் நடந்தது. முதல் இன்னிங்சில் மேற்கிந்திய தீவுகள் அணி204 ஓட்டமும், இந்தியா 347 ஓட்டமும் எடுத்தன. முதல் இன்னிங்சில் 143 ஓட்டம் பின்தங்கிய நிலையில் 2 வது இன்னிங்சை தொடங்கிய மேற்கிந்திய தீவுகள் 4ஆம் நாள் முடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 224 ஓட்டம் எடுத்திருந்தது. கடைசி நாள் ஆட்டத்தில் அந்த அணி 322ஓட்டங்களிற்கு சகலவிக்கெட்களையும் இழந்தது.

எட்வேர்ட்ஸ் 110 ஓட்டங்கள், சந்தர்போல் ஆட்டமிழக்காமல் 343 பந்துகளில் 116 ஓட்டங்கள் (5 பவுண்டறிகள் உட்பட) எடுத்தனர்.

சந்தர்போல்-பிடல் எட்வர்ட்ஸ்ஜோடி 9வது விக்கெட்டுக்கு பொறுப்புடன் விளையாடி 65 ஓட்டம் சேர்த்தது. பிடல் எட்வர்ட்ஸ் 30 ஓட்டம் எடுத்தார். இந்தியபந்து வீச்சில் ஹர்பஜன் 4, பிரவீன், ரெய்னா தலா 2 இஷாந் 1 விக்கெட் வீழ்த்தினார் அடுத்து180ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் 2 வதுஇன் னிங்சை தொடங்கிய இந்தியா 32 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 94 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் போட்டியை சமன் செய்ய இரு அணித்தலைவர்களும் முன்வந்தனர்

முகுந்த் 0, விஜய் 45, ரெய்னா 8 ஓட்டத்தில் ஆட்டமிழந்தனர். டிராவிட் 34, லக்ஸ்மன் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்தியா 1-0 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றிது. மேற்கிந்திய தீவுகள் சுற்றுப்பயணத்தில் ஒரு நாள் மற்றும் டெஸ்ட் தொடரை முதன் முறையாக வென்று இந்திய அணி சாதனை படை த்தது.

மேற்கிந்திய வீரர் சந்தர்போல் ஆட்ட நாயகன் விருதும் , இந்திய வீரர் இஷாந்த் சர்மா தொடர் நாயகன் விருதும் பெற்றனர்.

## கொழும்பு இந்துவின் வைரவிழாக் கிண்ணம்

### யாழ்.இந்துக் கல்லூரியுடனான போட்டி

### கொழும்பு இந்து அணி வெற்றி

கொழும்பு இந்துக்கல்லூரியின் வைர விழா கிண்ணத்திற்காக நடைபெற்ற கொழும்பு இந்துக்கல்லூரிக்கும் யாழ். இந்துக்கல்லூரிக்கும் இடையிலான ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் கொழும்பு இந்துக் கல்லூரி அணி 4 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

கொழும்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில் கொழும்பு இந்துக் கல்லூரி அணித்தலைவர் பி.இந்திரஜித் வெற்றி பெற்று முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தார்.

யாழ். இந்துக்கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடி 47.5 ஓவர்களில் 255 ஓட்டங்களுடன். சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

அணித்தலைவர் சஜீபன் 84 ஓட்டங்களையும் கல்கோகன் 53 ஓட்டங்களையும் பெற்றனர்

கொழும்பு இந்து அணி சார்பில் ஆர்.ஆர். திவாகரன் 64 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொழும்பு இந்துக்கல்லூரி அணி 47.5 ஓவர்களில் 6 விக்கெட்களை மாத்திரமிழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

அந்த அணியின் சார்பில் ஏ.யசோதரன் 89 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் குவித்தார். ஐ.எம். முனிப் 48 ஓட்டங்களை பெற்றார்

யாழ். இந்து அணி பந்து வீச்சாளர்களில் ஜெஸ்மினன் 46 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இப்போட்டியின் சிறப்பாட்டக் காரராக கொழும்பு இந்துக்கல்லூரியின் ஏ.யசோதரன் தெரிவானார்.

சிறந்த துடுப்பாட்ட வீரராக யாழ் இந்துக் கல்லூரியின் சஜீபனும் சிறந்த பந்து வீச்சாளராக கொழும்பு இந்துக்கல்லூரியின் ஆர்.திவாகரனும் தெரிவுசெய்யபட்டனர்.

## விசுவமடு மகா வித்தியாலய மாணவிகள்

## தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு



கடந்த வாரம் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மாகாண மட்ட மெய்வல்லுநர் போட்டியில் மு/ விசுவமடு மகா வித்தியாலயமாணவிகளானபதனுஜா 15 வயதின் கீழ் பெண்கள் பிரிவு 200 மீற்றர் போட்டியிலும், பு.திருமகள் 21 வயதின் கீழ் பெண்கள் பிரிவு 400 மீற்றர் போட்டியிலும் பங்கு பற்றி வெற்றி பெற்று தேசிய மட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ளனர்.

## வெளிநாட்டு தமிழ் அமைப்புகள்...

விடுதலைப்புலிகள் அமைப்பில் சிறுவர்களை இணைத்துக் கொண்டமை தொடர்பாக விடுதலைப் புலிகளிற்கு ஆதரவான வெளிநாட்டு தமிழ் அமைப்புக்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளாக முன்வைத்து இக்குற்றச்சாட்டுகள் தொடர்பில் போர்க்குற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்த அரசாங்கம் திட்டம் போட்டுள்ளது.

அரசாங்கத்திற்கு எதிராக போர்க் குற்றம் மற்றும்மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையை வலியுறுத்தும்வெளிநாட்டுதமிழ் அமைப்புக்கள், சிறுவர்களை ஆயுதப் போராட்டத்தில் இணைத்துக் கொண்ட விடயத்திலிருந்து தப்பித்து கொள்ள முடியாது என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

தமிழீழவிடுதலைப்புலிகளின் படைத் தளபதிகளால் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்களுக்கு வெளிநாடுகளில் நிதி சேகரித்து ஆயுதங்களை கொள்வனவு செய்து அனுப்பிய வெளிநாட்டு தமிழ் அமைப்புகளை பொறுப்பு கூறவைப்பதற்கான முனைப்புகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது

இதனடிப்படையில் வடக்கு கிழக்கில் காணாமற்போன சிறுவர்கள் தொடர்பில் யுனிசெவ் நிறுவனம் வெளியிட்ட அறிக்கையை கடந்த 9ம் திகதி கொழும்புக்கு விஜயம் செய்திருந்த பிரித்தானிய பாதுகாப்பு அமைச்சர்லியாம்பொக்ஸிடம் படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கையளித்துள்ளார். இதன் போது வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவும் சமுகமளித்திருந்தனர். (எ)


இன்றைய நிகழ்வுகள் வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத்திட்ட மாண்புமிகு பசில் ராஜபக்ஷ, கௌரவ அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, கௌரவ ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. இதன்பல்வேறுநிகழ்வுகள்13.07.2011 தொடக்கம்17.07.2011 திகதிவரை யாழ்.மாவட்டத்தில்பல்வேறுபிரதேசங்களில்நடைபெறவுள்ளது.

இன்றைய தினம் நடைபெறவுள்ள நிகழ்வுகள்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் மாண்புமிகு பசில் ராஜபக்ஷ அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்படும் யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்

| இல. | உள்ளூராட்சி மன்றங்களின் பெயர் | திட்டத்தின் பெயர் | | வேலைகளின் விபரம் | திட்ட அமைவிடம் | பாதிட்டு மதிப்பீடு (மில்.) | நிகழ்வுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | நல்லூர் பிரதேச சபை | உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டம் | 1 | அரியாலை தென் கிழக்கு மணிபுரி வீதி புனரமைத்தல் | அரியாலை | 8.089 | கால்கோள்விழா |
| 2 | வலிகாமம் கிழக்கு பிரதேச சபை | உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டம் | 2 | கோப்பாய் கிழுவானை வீதி புனரமைப்பு | கோப்பாய் | 9.903 | கால்கோள்விழா |
| 3 | வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை | உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டம் | 3 | குளனை வீதி புனரமைப்பு | துன்னாலை | 6.192 | கால்கோள்விழா |
| | | சபைநிதி | 4 | கரவெட்டி மரக்கறிச்சந்தை புனரமைப்பு | கரவெட்டி | 1.500 | திறப்புவிழா |

ஏனைய பிரமுகர்களால் ஆரம்பித்து வைக்கப்படும் யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்

| இல. | உள்ளூராட்சி மன்றத்தின் பெயர் | திட்டத்தின் பெயர் | | வேலைகளின் விபரம் | திட்ட அமைவிடம் | பாதிட்டு மதிப்பீடு (மில்.) | நிகழ்வு |
|---|---|---|---|---|---|---|---|
| 4 | வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை | உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டம் | 5 | மித்தில் செம்பாட்டு வீதி புனரமைப்பு | துன்னாலை மத்தி | 12.439 | கால்கோள்விழா |
| 5 | வலிகாமம் கிழக்கு பிரதேச சபை | உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டம் | 6 | தனிப்பனையடி வீதி புனரமைப்பு | அச்செழு | 8.179 | கால்கோள்விழா |
| | | உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டம் | 7 | வன்னியசிங்கம் வீதி புனரமைப்பு | ஆவரங்கால் மேற்கு | 11.208 | கால்கோள்விழா |

(அ-3721)

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்
யாழ்ப்பாணம்




# 'இலங்கையின் கொலைக்களம்'...

தமிழ்மக்களுக்கு எதிராக இலங்கைப் படைத்தரப்பினர் நிகழ்த்திய கொடூரங்கள் தொடர்பான அதிர்ச்சியூட்டும் ஆதாரங்களை இந்தியாவின் ஹெட்லைன்ஸ் ருடே எனும் தொலைக்காட்சி ஒலிபரப்பிய நான்கு நாட்களின் பின்னர் கூட இவ்விவகாரத் தில் அதீத மௌனத்தை இந்திய அரசாங்கம் கடைப்பிடித்து வருகின்றது. அதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகளே போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்களை மேற்கொண்டதாக கொழும்பு தொடர்ச்சியாக தெரிவித்து வருகின்றது.

மனிதத்திற்கு எதிரான குற்றங்களை வெளிப்படுத்தும் அதிர்ச்சியளிக்கும் ஆதாரங்களைக் கொண்ட பிரித்தானியாவின் சனல் 4 தொலைக்காட்சி உருவாக்கிய இலங்கையின் கொலைக்களம் ஆவணப்படத்தினை கடந்த 7 ம் திகதி வியாழக்கிழமை இரவு ஹெட்லைன்ஸ் ருடே ஒளி பரப்பியிருந்தது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் முடிவுக்கு வந்த போரின் போது விடுதலைப்புலிகளின் போராளிகள் மீது படைத்தரப்பினர் மிகக் கொடூரமான போர்க்குற்றங்களை புரிந்ததற்கான தெளிவான ஆதாரங்கள் இந்த ஆவணப்படத்தில் இடம் பெற்றுள்ளன. இத்தகைய கொடுமையான ஆதாரங்களைக் கொண்டிருப்பினும் அதற்கு பதிலளிப்பதை இந்திய வெளிவிவகார அமைச்சு தவிர்த்துள்ளது.

இந்த ஆவணப்படம் ஒளிபரப்பப்பட்டதைத் தொடர்ந்து இடம்பெற்ற விவாதத்தில் இலங்கை அரசாங்கத்தின் தரப்பைத் தவிர்ந்த ஏனைய அனைவரும் இப்போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து சுயாதீனமான விசாரணைகள் இடம்பெற வேண்டும்எனவலியுறுத்தியிருந்தனர்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட போரின்போது போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் நிகழ்ந்துள்ளதை இந்த ஆவணப்படத்தில் இடம்பெற்றுள்ள காட்சிகள் உறுதிசெய்துள்ள போதிலும் இது குறித்து கருத்து வெளியிடுவதை இந்தியவெளிவிவகாரஅமைச்சு தவிர்த்து வருவதாக இந்தியா ருடே குற்றம் சுமத்தியுள்ளது.

இந்த ஆவணப்படம் தொடர்பாக இந்திய வெளிவிவகாரசெயலாளர் நிருபமா ராவ் இடம் கருத்துக் கேட்ட போது இந்த விவகாரம் தொடர்பாக கருத்துக் கூற விரும்பவில்லை என இந்தியா ருடேக்கு அவர் தெரிவித்துள்ளார். அதேவேளை இது குறித்து ஹெட்லைன்ஸ் ருடே தொலைக்காட்சி கடுமையாக விமர்சித்தும் செய்தி வெளியிட்டிருந்தது. (எ-8)

# பொன்சேகாவுக்கு...

எதிராக இவ்வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இந்நிலையில் சரத் பொன்சேகா சார்பாக நீதிமன்றத்தில் சமுகமளிக்கும் பிரதான சட்டத்தரணி நலின்லதுவஹெட்டி பிறிதொரு வழக்கிற்கு சென்றிருந்தால் பிரதிவாதி சார்பில் நீதிமன்றத்தில் சமுகமளித்த மற்றுமோர் சட்டத்தரணி வழக்கை பிறிதொரு தினத்தில் எடுக்குமாறு கேட்டுக் கொண்டார். இதனை அடுத்து மேல் நீதிமன்ற நீதிபதி தீபாலி விஜயசுந்தர எதிர்வ ரும் நவம்பர் மாதம்14ம் திகதி வரை இவ்வழக்கு விசாரணைகளை ஒத்திவைத்தார்.

அத்துடன் இவ்வழக்கு தொடர்பான அனைத்து சாட்சியங்களும் இக்குறிப்பிட்ட தினத்தில் நீதி மன்றத்தில் சமுகமளிக்க வேண்டும் எனவும் அவர் உத்தரவிட்டார். (எ)

# அமைதியாக நடை...

65 உள்ளூராட்சி மன்றங்களுக்காக 60ஆயிரத்து 443 பேர் நேற்றய தினம் தபால் மூலம்வாக்களித்தனர்.

கல்வி அலுவலகங்கள், உள்ளூராட்சிமன்ற அலுவலகங்கள், போக்குவரத்து சபை, இராணுவ முகாம்கள் மற்றும் பொலிஸ் நிலையங்கள் கூடுதல் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில் நேற்றைய தினம் வாக்களிக்க முடியாமல் போன அரச உத்தியோகஸ்தர்கள் எதிர்வரும்23ம் திகதி வாக்களிக்க முடியுமென தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது. இது தொடர்பாக சகல அரசாங்க நிறுவனங்களின் தலைவர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் செயலகம் மேலும்தெரிவிக்கின்றது. (எ)

# தமிழ்த்தேசியக்...

அச்சுறுத்தப்படுகின்றமை தொடர்பாக தமிழ்த்தேசியகூட்டமைப்பு செய்த முறைப்பாட்டுக்கு தேர்தல்கள் ஆணையாளர் நேற்று செவ்வாய்க்கிழமை பதிலளித்திருப்பதாக கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் சுதந்திரமாகவும் நீதியாகவும் இடம்பெற தேர்தல்கள் திணைக்களம் நடவடிக்கை எடுக்கும்.

அத்துடன், வேட்பாளர்களை அச்சுறுத்தும் நபர்கள், குழுக்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் எனவும் தேர்தல்கள் ஆணையாளர்தமக்குஉறுதிவழங்கியதாக சுமந்திரன் தெரிவித்தார்.

வட பகுதியில் போட்டியிடும் அரச தரப்பு வேட்பாளர்கள் அல்லாத ஏனையகட்சிவேட்பாளர்கள்அச்சுறுத்தப்படுகின்றமை தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. ஆகிய கட்சிகளும் தேர்தல்கள் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## தேவை

வெல்டிங்/குசன் வேலைத் தளத்திற்கு பொருத்தமான கடையும் நல்ல சூழலில் வீடு அல்லது அறையொன்றும் வாடகைக்கு தேவை
தொடர்பு:0779554240
(5351)

## வேலை வாய்ப்பு

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்துடன் யாழ். நகரில் திறக்கவிருக்கும் Innovage Companyன் புதிய கிளைகளுக்கு O/L வரையும் படித்தவர்கள் எந்த முன் அனுபவமும் அவசியமில்லாமல் இணைத்துக் கொள்ளப்படுவர். முற்படுத்தும் 40 பேருக்கு மாத்திரமே வேலை வாய்ப்பு...
தொடர்புகளுக்கு:- 077 2151014, 077 55 66224 (சி-3720)

# ரணில்-பான் கீ மூன் சந்திப்பு...

நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனை கடந்த 5ஆம் திகதி எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நியூயோர்க்கில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் ஒரு நாட்டின் எதிர்க்கட்சித் தலைவரைச் சந்திக்கும் வழக்கத்தை கொண்டிராத நிலையில் இச் சந்திப்பின் பின்னணி குறித்து பலத்தகேள்விகள்எழுப்பப்பட்டிருந்தது.

இந் நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகமாக பான் கீ மூன் இரண்டாவது தடைவையாகவும் தெரிவு செய்யப்பட்டமைக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் முகமாகவே இச் சந்திப்பு இடம் பெற்றதாக திஸ்ஸ அத்தநாயக்க நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இச் சந்திப்பின் போது ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழு அறிக்கை மற்றும் இலங்கையில் இடம் பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது மேற் கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித வுரிமை மீறல்கள் தொடர்பிலான விசாரணைகள் குறித்தும் பான் கீ மூன்,ரணில் விக்கிரமசிங்கவுக்கு எடுத்துக் கூறியதாக திஸ்ஸ அத்த நாயக்க கூறியுள்ளார்.

இலங்கையில்இடம்பெற்றபோரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச சமூகம் எழுப்பியுள்ள கேள்விகளுக்கு பொறுப்புக் கூறுவதற்கான கால அவகாசத்தை அரசாங்கத்திற்கு வழங்கும்படி இச்சந்திப்பில் பான் கீ மூனிடம் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்திருந்தார். இக் கோரிக்கைக்கு இணக்கம்தெரிவித்த பான்கீமூன் இப்பொறுப்புக் கூறலுக்கு கால வரையற்ற வகையில் அவகாசம் வழங்க முடியாதெனவும் உறுதியாக கூறியிருந்தார்.

அதேவேளை, வன்னியில் இடம் பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை சர்வதேசவிசாரணைகளைமேற்கொள்ள வேண்டும் என நிபுணர்கள் குழுவும் மனிதவுரிமை அமைப்புகளும் வலியுறுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)







## இடமாற்றம்

## LANKA WALLTILE PLC & LANKA FLOORTILE PLC

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில், 85ஆம் இலக்கத்தில் இயங்கி வந்த LANKA WALLTILE PLC & LANKA FLOORTILE PLC நிறுவனம் 16.07.2011 முதல் இல.469, K.K.S. வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு (வண்ணை சிவன் கோவிலிற்கும் மனோகரா தியேட்டருக்கும் இடையில்) இடமாற்றப்படவுள்ளது என்பதனை எமது வாடிக்கையாளர்கட்கு அறியத் தருகின்றோம்.

நிர்வாகம்- LANKA WALLTILE PLC

(சி-3714)

அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.07.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.